01/2002

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்

மார்ச் 31, 2000

தொகுதி 92, எண் 2

D
V2,11,31 P00
P.00.922
84777

வெளியீடு 20-11-2000 Issued 20-11-2000

813

101/2002

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

வெள்ளிக்கிழமை, மார்ச் 31, 2000 – தொகுதி 92 – எண் 2

**Friday the 31st March, 2000 – Volume 92 – No. 2**

*சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை - 600 009*

**Legislative Assembly Secretariat, Fort St. George,**
**Chennai-600 009**

விலை ரூ. *3.00*] [Price Rs. 3.00

V211,31'P00
P00.92-2
222777

101/2002

**31-03-2000**

**உள்ளடக்கம்**


| | | பக்கங்கள் |
|---|---|---|
| 1. | வினாக்கள் - விடைகள் | |
| | உடுக்குறியிட்ட வினாக்கள் | 147-185 |
| 2. | சிறப்புக் கவன ஈர்ப்பு— | |
| | கடலூர் சூரப்பநாயக்கன்சாவடிப் பகுதியில் உள்ள சி.ஐ.டி.யூ. தொழிற்சங்க அலுவலகத்தின்மீது தாக்குதல் நடத்தப்பட்டது | 186-195 |
| 3. | தகவல் கோரல்— | |
| | பரம்பிக்குளம்-ஆழியாறு அணைத் தண்ணீர் கேரளாவிற்குக் கொடுத்தல் | 196-198 |
| 4. | அறிவிப்பு— | |
| | தமிழ்நாடு நில மேம்பாட்டு வாரிய மேலாண்மைக் குழுவிற்கான உறுப்பினர்கள் தேர்வு குறித்து | 199 |
| 5. | அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்)— | |
| | தமிழ்நாடு பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2000 | 199-200 |


53/60—1

பக்கங்கள்


6. வரவு-செலவுத் திட்டம், 2000-2001, பொது விவாதம்—தொடர்ச்சி— 200-279

டாக்டர் அ. செல்லக்குமார் 200-204, 207 209-216, 225,

திரு. வி.பி. இராசன் 217-224 226

திரு. பி.ஆர். சுந்தரம் 226-237, 243

திரு. ஆர். காந்தி 238-243

* டாக்டர் க. கிருஷ்ணசாமி 244-253

திரு. ஆர். சிவானந்தம் 253-258

திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம் 258-265

* திரு. துரை. சந்திரசேகரன் 265-269

திரு. ப. கோவிந்தன் 269-273

*திரு. ந. கருப்பண்ண உடையார் 273-279

7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்— 279


# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

**பங்குனி 18, பிரமாதி - திருவள்ளுவர் ஆண்டு 2031**

**2000 மார்ச் 31, வெள்ளிக்கிழமை**

மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. பி.டி.ஆர். பழனிவேல் ராஜன்** அவர்கள் தலைமையில் காலை 9-30 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

"இடும்பைக்கே கொள்கலங் கொல்லோ குடும்பத்தைக்
குற்றம் மறைப்பான் உடம்பு."

தன்னைச் சார்ந்த குடிமக்களுக்குத் துன்பம் வராமல் தடுத்து. தொடர்ந்து அக்குடிமக்களைக் காப்பாற்ற முயலுகிற ஒருவன், துன்பத்தைத் தாங்கிக் கொள்ளவே பிறந்தவனாகப் போற்றப்படுவான்.

## 1. வினாக்கள்-விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 161, திரு. மீ.அ. வைதியலிங்கம், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**161—**

**வரி விலக்கு**

***26731—திரு. மீ.அ. வைதியலிங்கம்:**

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சித்த மருந்துகளுக்கு வரி விலக்களிக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

[2000 மார்ச் 31

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) சித்த மருந்துகளுக்கு 17-7-1996 முதல் முழு வரிவிலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

(ஆ) கேள்வி எழவில்லை.

**திரு. மீ.அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்வதோடு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த நிதியாண்டில் கைத்தறித் தொழிலாளர்களுடைய குடும்பத்தைச் சேர்ந்த பிள்ளைகளைத் தேர்ந்தெடுத்து, மிகச் சிறந்த முறையிலே, நவநாகரிக வடிவமைப்புத் தொழில் நுட்ப நிலையத்தின் சான்றிதழ் பெற பயிற்சி தருவதாக அறிவித்திருக்கிறார்கள். அதேபோல், சிறந்த சித்த மருத்துவக் குடும்பத்து பிள்ளைகளைத் தேர்ந்தெடுத்து, சித்த மருத்துவர்களாக்க திட்டம் கொண்டு வரப்படுமா என்பதைத் தங்கள் மூலம் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, நல்ல யோசனைதான். நிலைமைக்கேற்ப ஆலோசிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசு விதித்த சமச்சீர் வரியைப் பற்றி முதலிலே முதலமைச்சர் சுணக்கம் காட்டி, பிறகு இணக்கம் காட்டியிருக்கிறார்கள். அந்த முறையை ஏற்றுக்கொண்டதனால் தமிழக அரசிற்கு வருவாய் இழப்பு ஏதேனும் உண்டா அல்லது இலாபம் வருகின்றதா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, சமச்சீர் வரிவிதிப்பின் காரணமாக, சில பொருள்களுடைய வரிவிகிதம் மாற்றப்பட்டிருப்பதால் வருமானம் அதிகரித்து இருக்கிறது. ஓரளவு இழப்பும் ஏற்பட்டிருக்கிறது. இரண்டும் சமச்சீராகவே இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் தே. குமாரதாஸ்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் சித்த மருத்துவத்திற்கு வரிவிலக்கு அளித்திருப்பதை நான் பாராட்டுகிறேன். அதே நேரத்தில் இந்திய முறை



மருத்துவம் என்று வருகிறபோது, சித்தா, ஆயுர்வேதா, யுனானி, இவை மூன்றும் உள்ளடங்கி வருகின்றன. அதில் ஏற்கெனவே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்தான் சித்தாவிற்கும், யுனானிக்கும் உரிய மருத்துகளுக்கு வரிவிலக்கு அளித்திருக்கிறார்கள். எனவே ஆயுர்வேதா மருந்துகளுக்கும் மாண்புமிகு முதலமைச்சரே வரிவிலக்கு அளிப்பார் என்றால், இந்திய மருத்துவ முறை, ஒட்டுமொத்தத்திற்கும் வரிவிலக்கு அளித்த பெருமை அவரையே சாரும். எனவே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அவற்றிற்கு வரிவிலக்கு அளிக்க முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் குமாரதாஸ் அவர்களுடைய யோசனை ஏற்றுக்கொள்ளப்பட்டு, பரிசீலிக்கப்பட்டு 4ஆம் தேதி விடையளிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. குமாரதாஸ், நீங்கள் ஆயுர்வேத டாக்டரா?

**டாக்டர் தே. குமாரதாஸ்:** நான் சித்தா டாக்டர்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சித்தா மற்றும் ஆயுர்வேத மருந்துகளுக்கு வரியைக் குறைத்தது பாராட்டுக்குரிய விஷயம், பாராட்டுகின்றேன். ஆனால் அந்த மருந்துகளினுடைய விலை என்பது எங்கேயோ போய், நம்முடைய கைக்கு எட்டாத அளவிற்கு, உயர்ந்திருக்கிறது. எனவே அதைக் கட்டுப்படுத்த வேண்டும். அடுத்து, மிக முக்கியமான மருந்து, சர்க்கரைக்கொல்லி என்று ஒரு பச்சிலை மருந்து இருக்கிறது. அது மிக அபூர்வமாகக் கிடைக்கின்ற மருந்து. அந்த மருந்தை அதிகப்படியாகப் பயன்படுத்தினால் டயாபடீஸ் என்ற நோய்க்கு இது தரமான மருந்து என்று அந்தத் துறையைச் சார்ந்தவர்கள் கூறுகின்றார்கள். எனவே, இந்த மருந்தினுடைய விலையைக் கட்டுப்படுத்துவதற்கு அரசு ஏதாவது நடவடிக்கை மேற்கொள்ளுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, நான் வரியைப் பற்றித்தான் சொல்ல முடியும். விலையைப் பற்றி மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்தான் சொல்ல வேண்டும். இருந்தாலும்கூட, மூலப் பொருள்களினுடைய விலையைப் பொறுத்து இந்த மருந்துகளினுடைய விலை அமைகிறது என்பதை நாம் மறந்துவிடக் கூடாது.

[2000 மார்ச் 31

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஏ.வி.ஏ. நாசர்.

முற்பகல் 9-35

**திரு. ஏ.வி.ஏ. நாசர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சித்த மருத்துவம் என்பது, இப்போது மக்களிடையே வெகுவாகப் பரவி வரக்கூடிய ஒரு விஷயமாக இருக்கிறது. சித்த மருத்துவத்திற்கு நாம் வரிவிலக்கு அளித்திருக்கிறோம். இதன்மூலம், நம்முடைய வியாபாரம் பெருகுகின்ற வகையிலே, நிச்சயமாக அரசுக்கு வருமானம் வருவதற்கு வாய்ப்பு இருக்கிறது. இருந்தாலும், இந்தச் சித்த மருத்துவத்தை ஊக்குவிப்பதற்கு அரசு எந்தவிதமான முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, இந்த அரசு, தொடக்க காலம் முதல், சித்த மருத்துவத்தை ஊக்குவிப்பதற்காக, பல முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறது. நம்முடைய பேராசிரியர் அவர்கள், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சராக அந்தக் காலத்திலே இருந்தபோது, அப்போதே சித்த மருத்துவம் ஊக்குவிக்கப்பட்டது. இப்போதுகூட, எங்களுக்கு ஏதாவது வியாதி என்றால், அவர் உடனடியாகச் சித்த மருத்துவ முறையைத்தான் சொல்கிறார். எனவே, சித்த மருத்துவத்திலே இந்த அரசுக்கு ஆழ்ந்த அக்கறை உண்டு. அதேபோல, இன்றுள்ள மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சருக்கும் அதிலே ஆழ்ந்த அக்கறை உண்டு. அதை அவர் பயன்படுத்துகிறாரா, இல்லையா என்பது எனக்குத் தெரியாது. (சிரிப்பு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர், இயற்கை வைத்தியம்தான். அடுத்து, திரு. ப. மோகன் கந்தசாமி.

**திரு. ப. மோகன் கந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த சித்த வைத்தியம் இன்றைய நாளிலே மிகப் பிரபலமாகி, பல்வேறு வியாதிகளை, எய்ட்ஸைக்கூட குணப்படுத்துகிற காட்சியையெல்லாம் பார்க்கிறோம்; மகிழ்கிறோம். மனிதர்களுக்கு இந்த வைத்தியங்களை யெல்லாம் செய்கிறோம். மாட்டுக்கு இப்போது தனியாக camp எல்லாம் போடுகிறோம். நம்முடைய கிராமங்களிலே கைமுறை வைத்தியமாக 'மாட்டு வாகடம்' என்று சொல்வார்கள்; அந்த ஏடுகள் எல்லாம் நிறைய இருக்கின்றன. அவற்றையெல்லாம் தொகுத்து வழங்க, அதற்கும் ஓர் ஏற்பாட்டை அரசு செய்யுமானால், அது மிகவும் பயனுள்ளதாக இருக்கும். அதை அரசு செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.



2000 மார்ச் 31]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உறுப்பினர்கள் கேட்கும் பெரும்பாலான துணை வினாக்கள், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரிடம் கேட்க வேண்டியவை. இவற்றை முதலமைச்சரிடம் கேட்க வேண்டியதில்லை. நீங்கள் இது சம்பந்தமான மானியக் கோரிக்கை அன்று இதனை வையுங்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, ஆடு மாடுகளுக்கென்று தனியாக மருந்துகூடத் தரவேண்டியதில்லை. அவை உண்ணுகின்ற ஆகாரத்திலேயே, அது புல்லானாலும், அது வேறு பொருளானாலும், தழையானாலும், அதிலேயே மருந்து இருப்பதாகச் சொல்லப்படுகிறது. இருந்தாலும்கூட, இப்போது இந்த அரசு, கால்நடைகளினுடைய பாதுகாப்புக்காக, அவற்றிற்கும் மருந்துகளைக் கொடுக்கின்ற அந்த வகையிலே, கால்நடைப் பாதுகாப்புத் திட்டத்தைப் பரந்த அளவிலே மாநிலம் முழுவதும் நடத்தி வருகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் ஆ. ஞானசேகரன்.

**டாக்டர் ஆ. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அலோபதி வைத்திய சிகிச்சை மூலமாகப் பல நோய்களைக் குணப்படுத்த முடியாத சூழ்நிலையில், சித்த வைத்திய முறையில், அதாவது புற்றுநோய் போன்ற கொடுமையான நோய், எய்ட்ஸ் போன்ற நோய்களை எல்லாம், சித்த சிகிச்சை மூலமாகக் கட்டுப்படுத்த முடியும்; குணப்படுத்த முடியும் என்ற நிலை இருக்கிறபோது, சித்த வைத்தியம் செய்கிற டாக்டர்கள் எல்லாம் இப்போது மூலப் பொருள்களைக்கூட வாங்குவதற்கு சிரமப்படக்கூடிய ஒரு சூழ்நிலை இருந்து வருகிறது. அந்த மூலப் பொருள்கள் வாங்குவதற்கு, நம்முடைய அரசு கடன் வழங்குகிற நிலையை ஏற்படுத்துவதற்கும், அவ்வாறு கடன் வழங்குகிற வாய்ப்பு இருக்கும்பட்சத்தில், மானியக் கடன்களாக அவர்களுக்கு வழங்குவதற்கு, கருணையுள்ளம் கொண்ட நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, அத்தகைய சித்த வைத்தியர்களுக்கு மூலப்பொருள்களை வாங்குவதற்கு, மருந்து தயாரிப்பதற்கு தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகள், 5 இலட்சம் ரூபாய் வரையிலே கடன் கொடுக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 162, திரு. கோ. மோகனதாசன், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

[2000 மார்ச் 31

162—

**மேல்நிலைப் பள்ளியாக உயர்த்துதல்**

***7960—திரு. கோ. மோகனதாசன்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகப்பட்டினம் மாவட்டம், செம்பொன்னார் கோவில் அரசு மகளிர் உயர்நிலைப்பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக உயர்த்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், இந்தக் கல்வியாண்டில் செயல்படுத்தப்படுமா?

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) 1998-99 ஆம் ஆண்டில் நாகப்பட்டினம் மாவட்டம், செம்பொன்னார்கோவில் அரசு மகளிர் உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக மேம்படுத்தி ஆணை வெளியிடப்பட்டு, செயல்படுத்தப்படுகிறது.

**திரு. கோ. மோகனதாசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது இரண்டாண்டுகளுக்கு முன்னால் கேட்கப்பட்ட கேள்வி. எனவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு பேராசிரியர் அவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 163, திரு. அ. சுடலைமுத்து, மாண்புமிகு கல்வி அமைச்சர்.

163—

**உதவித் தொகை**

***24658—திரு. அ. சுடலைமுத்து:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



2000 மார்ச் 31]

ஓய்வுபெற்ற முன்னாள் படைவீரர் பிள்ளைகளுக்கு படிப்பு உதவித் தொகை தரும்பொழுது, படைவீரரின் ஆண்டு வருமானம் ரூ.12,000/- இருக்க வேண்டும் என்பதைத் தளர்த்தி, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு' உள்ளது போலவே, படிப்பு உதவித் தொகை அளிக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆண்டு வருமானம் ரூ.12,000/-க்குப் பதில், ரூ.50,000/- ஆக உயர்த்தி ஆணை வெளியிடப்பட்டு விட்டது.

**திரு. அ. சுடலைமுத்து:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆண்டு வருமானம் 12,000 ரூபாய் என்பதை, முன்னாள் இராணுவத்தினர் குழந்தைகள் படிப்பதற்காகத் தளர்த்தி, அரசு மறுபரிசிலனை செய்து உதவுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 164, திரு. அ. அசோகன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

164—

**சமையல் எரிவாயு**

***8422—திரு. அ. அசோகன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவாரூர் மற்றும் நாகப்பட்டினம் மாவட்டங்களில் வீணாகும் இயற்கை எரிவாயுவினைச் சமையல் எரிவாயுவாக மாற்றி, அப்பகுதி மக்கள் பயன்படுத்தும்வகையில், இணைப்புகள் கொடுக்க மைய அரசிடம் மாநில அரசு வலியுறுத்துமா?

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தமிழ்நாடு எரிசக்தி வளர்ச்சி நிறுவனம், மரபு சாரா எரிசக்தி சம்பந்தமான நடவடிக்கைகளை மட்டுமே எடுத்து வருகிறது. எனவே, இயற்கை எரிவாயு தமிழ்நாடு எரிசக்தி வளர்ச்சி நிறுவனததின்

செயல்பாட்டிற்கு உட்படாதது மட்டுமின்றி, திருவாரூர் மற்றும் நாகப்பட்டினம் மாவட்டங்களில் வீணாகும் இயற்கை எரிவாயுவினை சமையல் எரிவாயுவாக மாற்றி, அப்பகுதி மக்கள் பயன்படுத்தும்வகையில் இணைப்புக் கொடுக்கும் கருத்துரு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

முற்பகல் 9-40

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஏ. இராமலிங்கம்.

**திரு. ஏ. இராமலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்படி வீணாகும் இயற்கை எரிவாயுவினைப் பயன்படுத்தி, தமிழ்நாட்டில் எந்தெந்த இடங்களில் மின் உற்பத்தி செய்யப்படுகிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நரிமணம் என்ற இடத்திலே 5 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்வதற்கு முயற்சி எடுக்கப்பட்டுக் கொண்டிருக்கும்போது, தேவையான எரிவாயு கிடைக்கவில்லை என்ற புகார் வருகிறது. கோவில்களப்பால் என்ற இடத்தில் 100 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்வதற்கு ஏற்கெனவே மின்சார வாரியம் திட்டமிட்டிருக்கிறது. நம்முடைய உறுப்பினர் திரு. குத்தாலம் கல்யாணம் அவர்களுடைய தொகுதியிலேயும் இந்த எரிவாயுவைக் கொண்டு மின்சாரம் தயாரிக்க முயற்சி எடுக்கப்பட்டு வருகிறது. அதைப்போலவே, இராமநாதபுரம் மாவட்டத்திலேயும் எரிவாயுவைக் கொண்டு மின்சாரம் தயாரிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வி.கே. லட்சுமணன்.

**திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த இயற்கை எரிவாயுவை L.P.G. போல Bottling செய்ய முடியுமா, அதற்கேதேனும் Technology இருக்கிறதா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுசம்பந்தமாக பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு அமைச்சகத்துடன், இந்த அரசு தொடர்பு கொண்டது. அப்போது மத்திய



அரசு நாகப்பட்டினம் மாவட்டத்தில் நரிமணம், நன்னிலம் அடியக்கமங்கலம், பள்ளிவாரா மங்கலம் மற்றும் கோவில்களப்பால் ஆகிய இடங்களிலும், திருவாரூர் மாவட்டத்திலே கமலாபுரம் மற்றும் திருவாரூர் ஆகிய இடங்களிலும் கிடைக்கும் எரிவாயு ஒரு நாளைக்கு சுமார் 0.946 மில்லியன் Standard Cubic metre தான் இருக்கிறது என்றும், இந்த எரிவாயுவை சமையலுக்குத் தேவையான gas போலப் பயன்படுத்துவதற்கான வாய்ப்பு இல்லை என்றும் கருத்து தெரிவித்திருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 165, திரு. த. பூவேந்தன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

**165—**

**மருத்துவமனைக்குக் கட்டடம்**

***24440-திரு. த. பூவேந்தன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பழனி அரசு மருத்துவமனையின் பழைய கட்டடங்களை மாற்றி புதிய கட்டிடங்கள் கட்டும் திட்டம் அரசின் ஆய்வில் உள்ளதா?

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

**திரு. த. பூவேந்தன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பழனி வளர்ந்து வருகிற ஒரு நகரமாகும். உடுமலைப்பேட்டை, தாராபுரம், ஒட்டன்சத்திரம் போன்ற பகுதிகளில் நடக்கின்ற விபத்துக்களில் பாதிக்கப்பட்டவர்கள் எல்லாம் பழனியில் உள்ள மருத்துவமனைக்குத்தான் வருகின்றனர். இங்கே ஏற்கெனவே செயல்பட்டுக் கொண்டிருந்த பெண்கள் உள்ளிருப்புப் பகுதி, தொழுநோய் உள்ளிருப்புப் பகுதிகளுடைய கட்டடங்கள் எல்லாம் பழுதுபட்டு, இரண்டு ஆண்டுகளாகப் பூட்டப்பட்டிருக்கின்றன. அதை மாற்றி புதிய கட்டடங்களைக் கட்டித் தருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மீண்டும் மறுபரிசீலனை செய்வார்களா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பழனி, சுற்றுலாப் பயணிகள் அதிகமாகச் செல்லக்கூடிய

[2000 மார்ச் 31

இடமாக இருக்கின்ற காரணத்தால், அங்கே 165 படுக்கைகள் கொண்ட ஒரு மருத்துவமனை சிறப்பாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. அங்கே நாள் ஒன்றுக்கு ஏறக்குறைய 192 உள்நோயாளிகளும், 1180 வெளி நோயாளிகளும் சிகிச்சை பெற்றுக் கொண்டிருக்கிறார்கள். அந்த மருத்துவமனையிலே கண், காது, மூக்கு, தொண்டை, பல், ஆகிய பிரிவுகளும், குழந்தை நலப்பிரிவு, எலும்பு முறிவுப் பிரிவு, பால்வினை நோய்ப் பிரிவு போன்ற எல்லாப் பிரிவுகளும் மிகச் சிறப்பாகச் செயல்பட்டு வருகின்றன.

மாண்புமிகு உறுப்பினர் இரண்டு கட்டடங்கள் அங்கே இடிந்து போகின்ற சூழ்நிலையிலே இருப்பதாகச் சொல்கிறார்கள். அதுகுறித்துப் பொதுப் பணித் துறை அமைச்சகத்திற்கு எழுதி இருக்கின்றோம். அவர்கள் அதைப் பார்வையிட்டு அதற்குரிய நடவடிக்கையை எடுப்பார்களேயானால், மக்கள் நல்வாழ்வுத் துறை புதிய கட்டடங்கள் கட்டுவதற்கு உரிய நடவடிக்கையை மேற்கொள்ளும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இரா. தாமரைக்கனி.

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிய கட்டடங்கள், அதாவது நோயாளிகளுக்குப் படுக்கைகள் உள்ள கட்டடங்களையும், அவசரச் சிகிச்சை பிரிவுக் கட்டடங்களையும் கட்டி இரண்டு வருடங்கள் ஆகின்றன. உதாரணமாக, ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதி வத்திராயிருப்பில் அமைச்சர் அவர்கள் திறப்பு விழாவிற்கு வரவில்லை என்று பூட்டியே வைத்திருக்கிறார்கள். இதனால் நோயாளிகள் சிரமப் படுகிறார்கள். அதனால், அரசில் உடனே சொல்லி அதனைத் திறப்பதற்கு ஏற்பாடு செய்வீர்களா அல்லது தேதி கொடுத்துத் திறப்பீர்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 9-45

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் வருவார் என்பதற்காக எந்தக் கட்டடமும் திறக்கப்படாமல் இல்லை. பொதுவாக, முதலமைச்சர் போகின்ற நேரத்திலேயே, பல கட்டடங்கள், அந்த விழாக்களிலேயே திறந்துவிடப்படுகின்றன. அப்படி, மாண்புமிகு உறுப்பினர் சொல்வதைப் போல, வத்திராயிருப்பில் கட்டடங்கள் கட்டப்பட்டு இரண்டு ஆண்டுகாலமாக அந்தக் கட்டடங்கள் பயன்படுத்தப்படாமல் இருக்குமேயானால், சம்பந்தப்பட்ட அதிகாரிகள்மீது கடுமையான



2000 மார்ச் 31]

நடவடிக்கை எடுப்பதோடு, உடனடியாக அந்த மருத்துவமனையைத் திறப்பதற்கு இன்றே உத்தரவு பிறப்பிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 166, திரு. எல். மூக்கையா, மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**166—**

## கூட்டுக் குடிநீர்த் திட்டம்

***7953—திரு. எல். மூக்கையா:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பெரியகுளம் தொகுதி, வராக நதியிலிருந்து, இலட்சுமிபுரம், சருத்துப்பட்டி, சல்லிப்பட்டி ஆகிய ஊராட்சிகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை விரைவில் செயல்படுத்த அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

பெரியகுளம் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த, இலட்சுமிபுரம், கிருஷ்ணாபுரம், சல்லிப்பட்டி, சருத்துப்பட்டி மற்றும் வீரசக்கம்மாள்புரம் ஆகிய குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டப் பணிகள், 30-12-1999இல் முழுமையாக முடிக்கப்பட்டு, திட்டம் மக்கள் பயனுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது.

**திரு. எல். மூக்கையா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்வி ஒரு ஆண்டுக் காலத்திற்கு முன்பு போடப்பட்ட கேள்வி. பெரியகுளம் வராக நதியிலிருந்து கிணறு தோண்டப்பட்டு, Pipe Line அமைத்து, மேல்நிலைத் தொட்டிகள் கட்டி, தெரு குழாய்கள் அமைத்து, நீண்டகாலமாகத் தீராத குடிநீர்ப் பிரச்சினை, இலட்சுமிபுரம், சருத்துப்பட்டி, சல்லிப்பட்டி, வீரசக்கம்மாள்புரம் ஆகிய கிராமப் பகுதி மக்களுடைய குடிநீர்ப் பிரச்சினையை, நீண்டகாலமாகத் தீராத குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்த்து வைத்த, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்கும், நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

[2000 மார்ச் 31

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 167, திரு. கே.ஆர்.ஜி. தனபாலன், மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**167—**

**விண்ணப்பப் பட்டியல்**

***9199—திரு. கே.ஆர்.ஜி. தனபாலன்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

1920ஆம் ஆண்டின் 5-வது சட்டமான சென்னை மாவட்ட நகராட்சிகளின் சட்டத்தின் 249, 258, 269 பிரிவுகளின்படி "அருவருக்கத்தக்கதும், அபாயகரமானதும்" என்ற சொற்கள் உள்ளதைத் தவிர்த்து விண்ணப்பப் படிவம் வெளியிடப்படுமா?

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

1920ஆம் வருடச் சட்டத்திற்குப் பதிலாக, புதிய 1998ஆம் ஆண்டு நகர்ப்புற உள்ளாட்சிகள் சட்டம் அமல்படுத்தப்படவுள்ளது. அதன்கீழ், புதிய விதிகளும் நடைமுறைக்கு விரைவில் வரவுள்ளன. அவற்றில் இத்தகைய சொற்றொடர்கள் தவிர்க்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 168, திரு. ஆ.மு. முனிரத்தினம், மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்.

**168—**

**ஏரியைப் புனரமைத்தல்**

***3153—திரு. ஆ.மு. முனிரத்தினம்:**

மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சோளிங்கர் தொகுதி, காவேரிப்பாக்கம் ஏரியைத் தூர் எடுத்துப் புனரமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?



2000 மார்ச் 31]

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆம். காவேரிப்பாக்கம் ஏரியைத் தூர் எடுத்து, புனரமைக்கும் திட்டம் நீர்வள ஆதார ஒருங்கிணைப்புத் திட்டத்தின்கீழ் எடுத்துக்கொள்ளப்பட்டு, பிரதானக் கால்வாய் புனரமைப்புப் பணிகள் ரூ. 80 இலட்சம் மதிப்பீட்டிலும், ஏரியின் வழங்கு கால்வாய் புனரமைப்புப் பணிகள் ரூ. 104 இலட்சம் மதிப்பீட்டிலும் நிறைவேற்றப்பட்டுள்ளன. எஞ்சிய பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆ.மு. முனிரத்தினம். (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** கேள்வியைக் கேட்டவர்கள் வரமாட்டார்களா?

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதுபற்றி நீங்கள் கேட்கப்போகிறீர்களா? (குறுக்கீடு) சரி கேளுங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள், ரூ.80 இலட்சம், ரூ.104 இலட்சம் என்று இரண்டு கட்டமாக அது எடுக்கப்பட்டதாகச் சொன்னார்கள். என்னுடைய மாவட்டத்திலே இருப்பதிலே, அது ஒரு பெரிய ஏரி, இருந்தாலும்கூட, முழுமையான புனரமைப்புத் திட்டம் முடிந்துவிடவில்லை. இன்னும் சதுப்பேரி, புறப்பாடி ஏரி போன்ற பெரிய, பெரிய ஏரிகளை எடுத்து, மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள், இன்று நீர்நிலைகள் எல்லாம் குறைந்துவிட்டிருக்கக்கூடிய என்னுடைய மாவட்டத்திற்கும் பணத்தை இன்னும் அதிகமாக ஒதுக்கி, முழுமையாக, இவற்றையெல்லாம் தூர் எடுப்பதற்கு ஆவன செய்வாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவேரிப்பாக்கம் ஏரியைக் குறித்தது, இந்தக் கேள்வி. மாண்புமிகு உறுப்பினர் கேட்பார் என்று இரவு எல்லாம் 10 துணைக் கேள்விகளுக்குத் தயார் செய்து கொண்டு வந்தேன். ஆனால், ஒன்றும் அவர் கேட்கவில்லை. இதுமாதிரி வேறு கேள்வியைக் கேட்பதைவிட, துணை வினாவைக் கேட்காமலேயே இருந்திருக்கலாம். இருந்தாலும், எல்லா ஏரிகளையும் தூர்வாருவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

[2000 மார்ச் 31

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஞானசேகரன், இதைப்பற்றி துணை வினா கேட்பதற்கு ஒன்றும் தகவல் இல்லையா உங்களுக்கு? (குறுக்கீடு) அதுவா துணை வினா? வினா எண் 169, திரு. அ. வெங்கடாசலம், மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்.

**169—**

**பயணிகள் விடுதி**

***24748—திரு. அ. வெங்கடாசலம்:**

மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆலங்குடியில் பொதுப் பணித் துறையின் மூலம் பயணிகள் விடுதி கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) ஆலங்குடியில், பொதுப் பணித் துறையின் மூலம் பயணிகள் விடுதி கட்டும் செயற்குறிப்பு 1999-2000ஆம் ஆண்டு பகுதி-2 திட்டத்தில் சேர்க்கப்பட்டு, பரிசீலிக்கப்பட்டு வருகிறது. நிதிநிலைமைக்கு ஏற்ப அது எடுத்துக்கொள்ளப்படும்.

**திரு. அ. வெங்கடாசலம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொடர்புடைய புதுக்கோட்டை மாவட்டத்தில், அறந்தாங்கியிலும், புதுக்கோட்டையிலும், பயணியர் விடுதிகள் இருப்பதைத் தவிர்த்து மற்ற இடங்களில் பயணியர் விடுதி என்பது இல்லாமல் இருப்பதால் மாண்புமிகு அமைச்சர் அவர்களோ, அதிகாரிகள் பெருமக்களோ, சட்டமன்ற உறுப்பினர்களோ, அந்தப் பகுதிக்கு வருகிறபோது மிகப்பெரிய சிரமத்தை உருவாக்குகிறது. ஆகவே, அதைத் தவிர்க்கவேண்டுமென்ற நோக்கத்தோடுதான், பலமுறை வைக்கப்பட்ட கோரிக்கையான, அதை ஏற்று 1999-2000ஆம் ஆண்டு, பகுதி-2 திட்டத்தில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எடுத்திருப்பதாகச் சொல்லி இருக்கிறார்கள். ஆகவே, நான்கு ஆண்டு காலம், ஆட்சி முடிகிற தருவாயிலே, ஐந்தாம் ஆண்டு நடக்கிற இந்த நேரத்தில், மாண்புமிகு அமைச்சர் அவர்கள், தன்னுடைய மானியக் கோரிக்கையிலாவது, அருள்கூர்ந்து, நல்ல உள்ளத்தோடு, எடுக்கப்பட்டிருக்கின்ற அந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்தக்கூடிய வகையில் நல்ல அறிவிப்பைத் தருவார்கள் என்ற நம்பிக்கையோடு, அதற்கான உத்தரவாதம் தருவார்களா என்று தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.



2000 மார்ச் 31]

முற்பகல் 9-50

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆலங்குடியிலே ஒரு விடுதி கட்ட வேண்டும்; பயணிகள் விடுதி கட்ட வேண்டும் என்பதிலே மாறுபட்ட கருத்து இல்லை. ஆகையினால்தான் முக்கியத்துவத்தை உணர்ந்து, இதைக் கட்டுவதற்கு அரசு மதிப்பீடுகளை எல்லாம் தயார் செய்து வைத்திருக்கிறது. நிதி நிலைமைக்கேற்ப எடுத்துக்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா 170, திரு. இரா. மகேந்திரன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

**170—**

**பேருந்து இயக்குதல்**

***20388—திரு. இரா. மகேந்திரன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கந்திலி ஒன்றியம், அரங்கநாதவலசை, உடையாமத்தூர், கொரட்டி, எலவம்பட்டி வழியாக திருப்பத்தூருக்குப் புதிய பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கோரிக்கை வழித்தடம் ஒரு சுற்று வழித்தடம். ஏற்கெனவே, அரங்கநாதவலசையிலிருந்து திருப்பத்தூருக்கு நேர்வழியில் பேருந்து வசதி உள்ளது. எனவே, கோரிக்கை வழித்தடத்தில் பேருந்து இயக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

[2000 மார்ச் 31

**திரு. இரா. மகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கந்திலி ஒன்றியத்தில் மாம்பாக்கம், அரங்கநாதவலசை, கொரட்டி, உடையாமத்தூர் வழியாக நம்முடைய கழக ஆட்சியில் புதியதாக பல இலட்ச ரூபாய் செலவு செய்து தார்ச் சாலை அமைக்கப்பட்டிருக்கிறது. அந்தப் பகுதி மக்கள் திருப்பத்தூர் நகருக்கு வருவது என்றால், மிகவும் கஷ்டப்படுகிறார்கள். மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் மறு பரிசீலனை செய்து இந்த புதிய வழித்தடத்தில் ஒரு புதிய பேருந்தை இயக்க ஆவன செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரங்கநாதவலசையிலிருந்து, கொரட்டி வழியாக திருப்பத்தூருக்குப் பேருந்துகள் நேரடியாக இயக்கப்படுகின்றன. கொரட்டியிலிருந்து பெரிய உடையாநத்தம் கிராஸ் ரோடு கிட்டத்தட்ட ஒரு கிலோமீட்டர் தொலைவில்தான் இருக்கிறது. அங்கே இருக்கிற வீடுகளுடைய எண்ணிக்கை 40 தான். மக்கள் தொகையினுடைய எண்ணிக்கையும் 200 தான் என்று கணக்கெடுப்பிலே சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே, அங்கே பேருந்துகள் தனியாக இயக்குவதற்கு சாத்தியக்கூறுகள் இல்லை.

**திரு. இரா. மகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பத்தூரிலிருந்து சென்னைக்கு வருகின்ற அந்தப் பேருந்துகள் திருப்பத்தூர் நகரத்தில் இரண்டு அல்லது மூன்று மணி நேரம் ஓய்வாக நிற்கின்றன. அப்படிப்பட்ட அந்தப் பேருந்துகளை நான் குறிப்பிட்டிருக்கிற கிராமங்களுக்கு ஒருமுறையாவது சென்றுவர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேருந்துகள் ஒரு மணி நேரம், இரண்டு மணி நேரம் நிறுத்தப்படுகின்றன என்று சொன்னால், அவற்றைச் சரி செய்வதற்காக நிறுத்துகிறார்களே தவிர, அந்த நேரத்தில் அவற்றை இயக்க இயலாது. அதுவும் அப்படித் திருப்பத்தூரிலிருந்து சென்னைக்கு சுற்று வழியாக இயக்குவோம் என்று சொன்னால், வருகிற பயணிகளும் அவற்றில் வரமாட்டார்கள். ஆகவே, அந்த வாய்ப்புகள் மிகவும் குறைவு.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 171, திரு. என். பெரியசாமி, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.



2000 மார்ச் 31]

**171—**

**இரயில்வே கேட்டுகள்**

***25098—திரு. என். பெரியசாமி:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தூத்துக்குடியில் உள்ள மூன்று இரயில்வே கேட்டுகள் போக்குவரத்திற்கு இடையூறாக உள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், இரயில் நிலையத்தை மீளவிட்டானுக்கு மாற்ற மத்திய அரசை மாநில அரசு கேட்டுக்கொள்ளுமா?

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இரயிலில் பயணம் செய்பவர்கள் மற்றும் சாலையில் செல்பவர்களின் பாதுகாப்புக் கருதி தூத்துக்குடிக்கும் மீளவிட்டானுக்கும் இடையே உள்ள மூன்று இரயில்வே கேட்டுகளும், இரயில்கள் போகும்போது திறக்க முடியாதவாறு ஒன்றோடு ஒன்று பிணைந்து கொள்ளும் வண்ணம் அமைக்கப்பட்டுள்ளன.

(ஆ) தூத்துக்குடி இரயில் நிலையம், மத்திய மாநில அரசு அலுவலகங்களுக்கும் வியாபார நிறுவனங்களுக்கும் மத்தியில் அமைந்துள்ளது. மீளவிட்டான், தூத்துக்குடியிலிருந்து 7 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. மேலும், தூத்துக்குடி மாவட்ட ஆட்சித் தலைவரும், தென்னக இரயில்வே தூத்துக்குடி பதிவு அலுவலரும், ஆய்வு செய்த பின்னர், இரயில்வே நிலையத்தை தூத்துக்குடியிலிருந்து மீளவிட்டானுக்கு மாற்றியமைக்க இயலாது எனத் தெரிவித்துள்ளனர்.

**திரு. என். பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தூத்துக்குடியில் மத்தியப் பகுதியிலே மூன்று கேட்டுகள் அமைந்து இருக்கின்றன. ஒரு நேரத்தில் பத்துக்கு மேற்பட்ட இரயில்கள் தூத்துக்குடிக்கு வந்து போய்க்கொண்டிருந்தன. இப்போது இரண்டே இரயில்கள்தான் வருகின்றன. வியாபாரப் போக்குவ்ரத்துக்காக மிகப் பெரிய அளவில் அங்கு சரக்கு இரயில் போக்குவரத்து வந்துக்கொண்டிருந்தது. அதை இப்போது மீளவிட்டானுக்கு மாற்றிவிட்டார்கள். மொத்தத்தில், தூத்துக்குடி நகரத்திற்கு Passenger

[2000 மார்ச் 31

train-கள் இரண்டுதான் வருகின்றன. ஆனால் மத்தியப் பகுதியில் இருக்கிற அந்த மூன்று கேட்டுகளால் மக்களுக்கு மிகக் கஷ்டமான நிலைமை, அவசரத்திற்குப் போக முடியாத ஒரு நிலைமை இருக்கிறது. மணிக்கணக்கில், இரண்டு மணி நேரம்கூட கேட்டை அடைத்து விடுகிறார்கள். ஆகையால் போக முடியாத ஓர் அவல நிலை இருந்துகொண்டிருக்கிற காரணத்தினால், சரக்கு இரயிலை மீளவிட்டானுக்கு மாற்றிவிட்ட காரணத்தினால் இதையும் அங்கு மாற்றினால், இயல்பாக மக்களுக்கு நல்ல வசதியாக இருக்கும். இங்கே நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள் மீளவிட்டானுக்கும் தூத்துக்குடிக்கும் இடையில் ஒரு பாலம் கட்டுவதாகச் சொன்னார்கள். அவர்களே வந்து நேரடியாகப் பார்த்து இந்த இடத்தில் பாலம் தேவையா என்று அதற்குப்பிறகு முடிவு செய்யும்படி கேட்டுக்கொள்கிறேன். அதை மாற்றித்தர ஆவன செய்வார்களா என்று மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

முற்பகல் 9-55

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீளவிட்டானுக்கும் தூத்துக்குடிக்கும் இடையிலே 3 இரயில்வே கேட்டுகள் இருக்கின்றன என்ற காரணத்தினாலேயே, இரயில்வே நிலையத்தை வேண்டாம் என்று சொல்வது சரியாக இருக்காது. மாண்புமிகு உறுப்பினர் வேண்டுமானால், 3 கேட்டுகளுக்கும் பாலங்கள் கட்டித்தர வேண்டும் என்றால், அதிலே ஒன்றை இப்போது நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் ஏற்றுக் கொண்டிருக்கிறார். மீதி இரண்டையும் கேட்டால், அது மக்களுக்கு வசதியாக இருக்கும் என்றுதான் நான் கருதுகிறேன். ஆகவே, இரயில்வே நிலையத்தை மாற்றுகிற சாத்தியக் கூறுகள் எதுவும் இல்லை. அதுவும், அகல இரயில் பாதையாக அமைக்கப்பட்டதற்குப் பிறகு அங்கேதான் எல்லா வசதிகளும் இருக்கின்றன என்றும் இரயில்வே துறையிலே குறிப்பு அளித்திருக்கிறார்கள்.

**திரு. என். பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 3 இடத்திலும் பாலம் அமைக்கக் கூடிய அளவிற்கு ரோடு வசதி அங்கே காணாது. நீங்களே வந்து நேரிடையாகப் பார்க்கலாம். 3 கேட்டுகளில் பாலம் அமைக்கக்கூடிய அளவிற்கு அங்கே இடவசதி கிடையாது. அதோடு 3 கேட் பக்கத்தில் நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அறிவித்த பாலங்கலால் நிச்சயமாக—பஸ் ஸ்டாண்டு, மெயின் பஸ் ஸ்டாண்டு அங்கேதான் இருக்கிறது. அந்த—பஸ் ஸ்டாண்டுக்குப் போகிற



2000 மார்ச் 31]

போக்குவரத்து அத்தனையும் ஸ்தம்பித்து விடும். பாலம் அமைப்பதால் இட நெருக்கடியை தூத்துக்குடியில் தவிர்க்கவே முடியாது. ஏன் என்று சொன்னால் தூத்துக்குடியில் கனரக வாகனங்கள் போகக்கூடிய வசதியும் கிடையாது, இந்த பாலத்தினால், மிகப் பெரிய கஷ்டமான சூழ்நிலை வரும். அதனால்தான் மறுபரிசீலனை செய்வாரா என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்கு முதலிலேயே நான் குறிப்பிட்டிருக்கிறேன். தூத்துக்குடியில் இருக்கிற இரயில் நிலையத்தை மற்றொரு இடத்திற்கு மாற்றுவது அவ்வளவு எளிதான காரியம் அல்ல. அதுவும் குறிப்பாக அகலப் பாதையாக மாற்றப்பட்ட பிறகு, தூத்துக்குடியிலே இருக்கிற இரயில் நிலையம் வளர்ந்து வருகிற நேரத்திலே, இது தேவையான ஒன்றாகத்தான் மாவட்ட ஆட்சித் தலைவரும், மற்றவர்களும் கருதிக் கொண்டிருக்கிறார்கள். அதைப்பற்றி பரிசீலித்த பிறகும் இருவரும் அதே அறிக்கையை கொடுத்திருக்கிற காரணத்தினால், இதற்கான சாத்தியக்கூறுகள் இப்போது இல்லை என்று நான் கருதுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 172, திரு. கொ.வீ. நன்னன், மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்.

**172—**

**சாலைகளைப் புதுப்பித்தல்**

***22490—திரு. கொ.வீ. நன்னன்:**

மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கம் தொகுதியில் பழுதடைந்துள்ள சாலைகளைப் புதுப்பிக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

(ஆ) நடப்பாண்டில் புதுப்பிக்கவிருக்கும் சாலைகள் எவை?

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) 1998-99 ஆம் நிதியாண்டில் ரூ.152.56 இலட்சங்கள், 1999-2000 நிதியாண்டில் ரூ.90.58 இலட்சங்கள் மதிப்பீட்டில், சுமார் 101.60 கி.மீ.

நீளமுள்ள பழுதடைந்த சாலைகளைப் புதுப்பிக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. மேலும், எதிர்வரும் ஆண்டுகளில் நிதிநிலைக்கேற்ப எஞ்சியுள்ள சாலைகளைப் புதுப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

(ஆ) மாவட்டப் பெருஞ்சாலையில் 8.20 கி.மீ. நீளமும் மற்றும் இதர மாவட்ட சாலையில் 31.00 கி.மீ. நீளமும் நடப்பாண்டில் புதுப்பிக்கப்படும் சாலைகளாகும்.

**திரு. கொ.வீ. நன்னன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாலைகளைப் புதுப்பிக்கும் பணிகள் நடைப்பெற்றுக் கொண்டிருந்தாலும், அங்கே இன்னும் ஏராளமான பாதைகள் குண்டும்—குழியுமாக நெடுஞ்சாலை என்று சொல்லப்படுகின்ற அந்தப் பாதைகள்—கொடுஞ் சாலைகளாக மாறிக்கொண்டு வருகின்றன. இப்போது விடப்பட்டுள்ள அந்தப் பணிகள் நடந்து கொண்டு வருகின்றன. ஆனால், இன்னும் மீதமுள்ள சாலைகளைச் சீரமைக்க வேண்டும். அதை அரசு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1998-99, 1999-2000 ஆண்டுகளில் 152 இலட்சம், 90 இலட்சத்திற்குப் பணிகள் எடுக்கப்பட்டிருக்கின்றன என்ற விவரத்தை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்தேன். இன்னும், 11.80 கிலோ மீட்டர் ரூ.22.30 இலட்சம் மதிப்பீட்டில் பணிகள் முடிக்கப்பட்டிருக்கின்றன. அதேபோல, நபார்டு திட்டத்தில் 11.20 கிலோ மீட்டர் நீளத்திற்கு 55 இலட்சம் ரூபாயில் பணி நடைபெற்று வருகிறது. பராமரிப்புப் பணியும் 4.40 கிலோ மீட்டர் ரூ.9.80 இலட்சத்திற்கு tender-ன் முடிவுற்று—பணிகள் தொடங்கப்பட்டுள்ளன. இன்னும் சில விவரங்களை மாண்புமிகு உறுப்பினருக்கு நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். இதர மாவட்ட சாலைகள் என்பதில் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 400 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்திருக்கிறார்கள். இந்த 400 கோடி ரூபாயில் 159 கோடி ரூபாய்க்குப் பணிகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. எல்லா தொகுதிகளிலும்—கட்சி வித்தியாசம் இல்லாமல் எல்லா தொகுதிகளிலுமே—அந்தத் தொகுதிகளில் இருக்கக்கூடிய சாலைகளின் நீளத்தின் அளவிற்கு ஏற்றவாறு சராசரியாக 40 கிலோ மீட்டரிலிருந்து 50 கிலோ மீட்டர் வரை உள்ள சாலைகளைப் புதுப்பிப்பதற்கு, சரி செய்வதற்குத் திட்டங்கள் உருவாக்கப்பட்டிருக்கின்றன. பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அந்த வகையில் செங்கம் தொகுதியிலேயும் பணிகள் நடைபெறுகின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பழுதுபட்ட சாலைகளை மேம்படுத்துவதற்காக நிதி ஒதுக்குகின்ற நேரத்திலே, மாவட்டத்திலே இருக்கக்கூடிய சாலைகளின் நீளத்திற்கேற்ப நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறதா அல்லது பழுதுபட்ட சாலைகளை மேம்படுத்துவதற்காக சாலைகளைத் தேர்வு செய்து, நிதி ஒதுக்கப்படுகிறதா என்பதை அறிய விரும்புவதோடு, என்னுடைய தொகுதியிலேகூட சாலைகள் எல்லாம் பழுதுபட்டு, போக்குவரத்து ஒருசில இடங்களிலே நிறுத்தப்பட்டிருக்கிறது. அப்படி நிறுத்தப்பட்டிருக்கிற நிலையிலேயே தொடர்ந்திருக்கிற காரணத்தினால், சாலைகள் பழுதடைந்த பகுதிகளுக்கு கூடுதலாக நிதி ஒதுக்கீடு செய்வீர்களா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-00

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆட்சிக் காலத்தில் 5 ஆண்டு காலத்தில் இந்தச் சாலைகள் பராமரிப்பிற்கு என்று வெறும் ரூ.150 கோடிதான் ஒதுக்கப்பட்டது. ஆனால் இந்த ஒரே ஆண்டில் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கடந்த 15 ஆண்டு காலமாக பராமரிப்பு இல்லாத இந்தச் சாலைகளை உடனடியாக பழுது பார்க்க வேண்டும் என்பதற்காக ரூ.400 கோடி ஒதுக்கித் தந்திருக்கிறார்கள். அதிலே அந்தந்த மாவட்டத்தில் அல்லது Division-ல் அல்லது தொகுதியில் இருக்கக்கூடிய சாலைகளினுடைய நீளத்திற்குத் தக்கவாறு கணக்கிடப்படுகிறது. அதிலே பழுதடைந்துள்ள சாலைகளும் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படுகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், எங்களுடைய கோட்டப் பொறியாளர், தவிர மாவட்ட ஆட்சித் தலைவர் ஆகிய மூவரையும் கலந்தாலோசித்து அந்தப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. முடிவுகள் எடுக்கப்படுகின்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பெ.சு. திருவேங்கடம்.

**திரு. பெ.சு. திருவேங்கடம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செங்கத்திலிருந்து கடலாடி, போளூர், ஆரணி வழியாக இராணிப்பேட்டை வருகின்ற சாலையை தனியார்த் துறை மூலமாக பழுது பார்க்க ஒரு survey நடைபெறுகிறது. அது எந்த நிலையில் உள்ளது என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா? அதேபோல் திருவண்ணாமலை, வேலூர் போளூர் சாலையை தேசிய நெடுஞ்சாலையாக மாற்றுகின்ற திட்டமும் எந்த நிலையில் உள்ளது என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

[2000 மார்ச் 31

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற அந்தச் சாலைகள் Road Sector Project என்ற திட்டத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டன. அது இப்போது ஆய்விலே இருக்கிறது. விரைவில் அது குறித்து முடிவெடுக்கப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். தேசிய நெடுஞ்சாலையைப் பொறுத்த வரையில் மேலும் 1,000 கி.மீ. தமிழ்நாட்டிலே எடுத்துக்கொள்ளப்பட வேண்டும் என்று மத்திய தரைவழிப் போக்குவரத்து அமைச்சருக்கு நம்முடைய துறையின் மூலமாக அரசின் மூலமாக, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மூலமாக அறிவிக்கப்பட்டிருக்கிறது; தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அது இன்னும் மத்திய அரசினுடைய பரிசீலனையில் இருக்கிறது. அதில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கிற அந்தச் சாலையும் இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பழுதுபட்ட சாலைகளை எல்லாம் பழுது பார்ப்பதற்காக estimate தயார் செய்து tender விடப்பட்டு அதிலே ஜல்லிகள் பரத்தப்பட்டு தார் கிடைக்காத காரணத்தினால் அந்த ஜல்லிகள் மீண்டும் பெயர்ந்து போகின்ற ஒரு சூழ்நிலை இருக்கிறது. அந்தத் தார் உரிய முறையிலே கிடைத்து சாலைகளைச் செப்பனிடுவதற்கு அமைச்சர் அவர்கள் முயற்சி மேற்கொள்வார்களா என்று தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** சென்னையில் இருக்கக் கூடிய Madras Refineries Limited (MRL) அதிலே தார் உற்பத்தி செய்கிற தொழிற்சாலையில் ஒரு பகுதி பழுதுபட்டுப் போய்விட்டது. அந்தப் பழுது ஏற்பட்டதன் காரணமாக தார் வழங்குவதில் சற்று காலதாமதம் ஏற்பட்டது. இதுகுறித்து நம்முடைய துறையின் செயலாளர் அவர்கள் Oil Compay அல்லது M.R.L. போன்ற நிறுவனங்களை அழைத்துப் பேசினார்கள். அவர்கள் 31 மார்ச்சுக்குள்ளாக இத்தனை டன் வழங்குவோம் என்று உறுதி சொன்னார்கள். அதிலும் சற்று காலதாமதம் ஏற்பட்டது. அதற்குப் பிறகு நானே அவர்களை அழைத்து கூட்டம் நடத்தி, இந்தத் தார் supply-யை உடனடியாக செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டேன். இப்போது வழங்கப்பட்டு வருகிறது. விரைவிலே அந்தப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆர். சிவானந்தம்.



2000 மார்ச் 31]

**திரு. ஆர். சிவானந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் கூறியதைப்போல Road Sector மூலமாக ஆற்காடு-திருவண்ணாமலை, ஆற்காடு-விழுப்புரம் உட்புறச் சாலைகள் ஆய்வு செய்யப்பட்டு பணியைத் தொடங்காமல் இருக்கிறார்கள். ஆனால் அதிகாரிகளைக் கேட்கின்றபோது அவை 2001-க்கு மேல்தான் எடுக்கப்படும் என்று சொல்கிறார்கள். இப்போது மிகவும் சீரழிந்துள்ள இந்தச் சாலைகளைப் புதுப்பிக்க அரசு முன்வருமா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Road Sector Project-ல் கிழக்குக் கடற்கரைச் சாலையும் இருக்கிறது. இந்தச் சாலைகளும் அதிலே அடங்கி இருக்கின்றன. அந்தத் திட்டத்திற்கு உலக வங்கி நிதியுதவி தர முன் வந்திருக்கின்றது. அதுகுறித்த ஆய்வு நடைபெறுகின்றது என்று குறிப்பாகவும், சிறப்பாகவும் நான் பல நேரங்களில் குறிப்பிட்டிருக்கிறேன். அதுகுறித்து சுற்றுப்புறச் சூழல் அமைச்சகத்தினுடைய ஒப்புதல் பெறவேண்டிய அவசியம் இருக்கிறது. அதிலே Phase-1, Phase-1A, Phase-1B என்று 3 பிரிவுகள் இருக்கின்றன. Phase-1, Phase-1A-க்கு இன்று (31-3-2000) கூட்டம் நடைபெறுகிறது. இதற்கு ஒப்புதல் கிடைக்கும். Phase 1Bயில்தான் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கின்ற சாலை வருகிறது. அதற்கு மறுபடியும் ஆய்வுகள் நடைபெறுகின்றன. சுற்றுப்புறச்சூழல் அமைச்சகத்தினுடைய அனுமதி கிடைத்தபிறகு உலக வங்கி நமக்கு நிதி ஆதாரம் தரும் அதற்குப் பிறகுதான் இந்தப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. க. மணிவர்மா.

*முற்பகல் 10-05*

**திரு. க. மணிவர்மா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாண்டிச்சேரி—கிருஷ்ணகிரி தேசிய நெடுஞ்சாலையிலே திருவண்ணாமலை அமைந்திருக்கிறது. திருவண்ணாமலை நகரத்திற்கு பல்வேறு மாவட்டங்களிலிருந்து ஏராளமான ஆன்மீக பக்தர்களும், வெளி மாநிலங்களிலிருந்து பல்வேறு ஆன்மீக பக்தர்களும் வருகை தருகின்றார்கள். திருவண்ணாமலை நகரத்திலே பெரிய இட நெரிசல் எற்படுவதால் புறவழிச்சாலை அமைப்பதற்காக ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. புறவழிச்சாலை எப்பொழுது அமைக்கப்படும் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களிடமிருந்து தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

[2000 மார்ச் 31

**மாண்புமிகு திரு. பகும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற மாதம்கூட நான் திருவண்ணாமலைக்குப் போயிருந்தேன். நம்முடைய மாண்புமிகு அமைச்சர் பிச்சாண்டி அவர்களும் அங்குள்ள சட்டமன்ற உறுப்பினரும்கூட இதுகுறித்து என்னிடத்திலே கருத்துத் தெரிவித்தார்கள். அது துறையினுடைய பரிசீலனையில் இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 173, திரு. ஏ. கோதண்டம், மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்.

**173—**

**மேம்பாலம் அமைத்தல்**

***22780—திரு. ஏ. கோதண்டம்:**

மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குன்றத்தூர்-திருநீர்மலை-திருமுடிவாக்கம் சாலையில் வழுதலம்பேடு தரைப்பாலத்தை மேம்பாலமாக அமைத்திட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. பகும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

**திரு. ஏ. கோதண்டம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியில் குன்றத்தூரிலிருந்து வழுதலம்பேடு வழியாக திருநீர்மலை–திருமுடிவாக்கம் இணைப்புச் சாலை அமைந்துள்ளது. அந்தச் சாலையில் வழுதலம்பேடு வழியில் ஒரு தரைப்பாலம் உள்ளது. செம்பரம்பாக்கம் ஏரியிலிருந்து மழைக் காலங்களில் வெளியேறும் நீர் அந்தத் தரைப்பாலம் வழியாக வந்து அடையாறு ஆற்றில் கலக்கின்றது. அப்போது சுமார் 15 நாட்களுக்குமேல் 30 நாட்களுக்குள்ளாக அந்த வழியாக வாகனங்கள் மற்றும் பொதுமக்கள் செல்ல முடிவதில்லை. மேலும் திருமுடிவாக்கத்தில் சிப்காட் மூலமாக 350 ஏக்கருக்கு மேல் நிலம் எடுத்து சிறுதொழில் ஆரம்பித்திருக்கின்றார்கள். அதில் ஆயிரக்கணக்கான பேர் வேலை செய்கின்றார்கள். அதனால் மழைக் காலங்களில் செல்வதற்கு ஏற்றவாறு அந்தத் தரைப்பாலத்தை மேல்பாலமாக அமைத்துத் தருவாரா என அறிய விரும்புகிறேன்.



2000 மார்ச் 31]

**மாண்புமிகு திரு. பகும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கோதண்டம் அவர்கள் குறிப்பிடுகின்ற இந்தச் சாலை இதர மாவட்ட சாலையைச் சேர்ந்தது. இதிலே அவர் குறிப்பிடுவதைப்போல அந்தக் குழாய்ப் பாலம் பழுதடைந்து போய் இருக்கிறது. அதைத் திரும்பக் கட்டுவதற்கு துறையின் மூலம் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. அதற்கு ஏறத்தாழ 40 இலட்சம் ரூபாய் தேவைப்படும் என்று துறையினர் தெரிவித்திருக்கிறார்கள். வருகின்ற ஆண்டில் இதை நபார்டு திட்டத்திலே சேர்த்து செயல்படுத்தலாமா என்றும் துறைக்கு மதிப்பீடு அனுப்பப்பட்டு இருக்கிறது. இது இப்போது துறையினுடைய பரிசீலனையில் இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 174, திரு. வி.ஜி. தனபால், மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்.

**174—**

**குடமுழுக்கு**

***29596—திரு. வி.ஜி. தனபால்:**

மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குடியாத்தம் மீனூர் வெங்கடேசப்பெருமாள் மலைக் கோவிலுக்கு குடமுழுக்கு நடத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) குடியாத்தம் மீனூர் வெங்கடேசப்பெருமாள் மலைக்கோயில் இராஜகோபுரம் உள்பட இதர திருப்பணி வேலைகளையும்

உபயதாரர்கள் செய்ய முன்வந்துள்ளதால் திருப்பணிகளுக்கு உடன் மதிப்பீடு தயார் செய்து, திருப்பணிக்குழு அமைத்து, திருப்பணிகளை முடித்து குடமுழுக்கு செய்ய தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**திரு. வி.ஜி. தனபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடியாத்தம் மீனூர் வெங்கடேசப்பெருமாள் மலைக்கோயில் ஒரு பிரசித்திப்பெற்ற திருக்கோயில் ஆகும். இந்தக் கோயிலில் பொது மக்களுடைய பெரு முயற்சியால் அமைச்சர் சொன்ன அந்தப் பணிகள் நடைபெற்று வருகின்றன. போதிய நிதியாதாரம் இல்லாததால் நம்முடைய அரசு சிறப்பு நிதி ஒதுக்கீடு செய்ய முன் வருமா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கோயிலுக்கு இருக்கிற மொத்த வருமானமே ஓர் ஆண்டுக்கு 40,081 ரூபாய்தான். இதில் உபயதாரர்களுடைய திருப்பணி என்ற முறையில் ஏற்கெனவே முடிவு செய்யப்பட்டு திருப்பணிக் குழுவும் பரிந்துரை செய்து அந்த மதிப்பீடுகள் ஏற்றுக்கொள்ளப்பட்டு இப்போது குடமுழுக்குப் பணிகள் நடைபெற்று வருகின்றன. என்றாலும் அதற்கு மேலும் நிதி தேவைப்பட்டால் முறைப்படி ஆய்வு செய்து தக்க நிதி உதவி வழங்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 175, திரு. அ.லெ. சுப்பிரமணியன், மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்.

**175—**

### அடிப்படைச் சம்பளம்

***30971—திரு. அ.லெ. சுப்பிரமணியன்:**

மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருக்கோவில்களில் தினம் பூசை செய்யும் பூசாரிகளுக்கு, விவசாயக் கூலிகளுக்கு அரசு ஊதியம் நிர்ணயித்ததுபோல், அடிப்படைச் சம்பளம் நிர்ணயம் செய்ய அரசு முன்வருமா?



**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திருக்கோயிலின் வருமானத்திற்கேற்ப, முழுநேரப் பூசாரிகளுக்கு பல்வேறு நிலைகளில் ஊதிய விகிதங்கள் இதர படிகளுடன் ஏற்கெனவே அரசால் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

முற்பகல் 10-10

**திரு. அ.லெ. சுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திருக்கோயில்களில் பூசாரிகள் தினம் 6 வேளை பெரிய கோயில்களில் பூசை செய்கிறார்கள் அல்லது இரண்டு வேளையாவது பூசை செய்கிறார்கள். அவர்களோடு ஓதுவார்கள் தேவாரம் ஓதுகிறார்கள். நாதஸ்வரம் வாசிப்பவர்கள் வாசிக்கிறார்கள். ஆகவே ஒரு நாளைக்கு இவர்கள் எல்லாம் 2, 3 முறை தெய்வ சன்னிதியிலே திருப்பணி செய்கிறார்கள். மன்னர் காலத்தில் கட்டப்பட்ட கோயில் என்ற காரணத்தினால், மன்னர் மானியம் தருவதைப்போல, அந்த மானியம்தான் இப்போதும் அவர்களுக்கு மிகக் குறைந்த சம்பளமாக பல கோயில்களில் தரப்படுவது அமைச்சருக்குத் தெரியுமா? அதைத் திருத்தியமைக்க, இப்போது விவசாயக் கூலிகளுக்கு கோலப்பன் குழு அமைத்ததைப் போல, ஒரு குழு அமைத்து, நிதிநிலைக்குத் தக்கவாறு, அந்தந்தத் திருக்கோயில்களில் சம்பள விகிதத்தை அவர்களுக்குக் கூட்டித் தர அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டது போல ஏற்கெனவே ஊதிய நிர்ணயம் தொடர்பான ஒரு குழு அமைக்கப்பட்டு, அந்தக் குழுவினுடைய பரிந்துரைகளை ஏற்று, நம்முடைய மாண்புமிகு முதல்வருடைய ஒப்புதல் பெற்று, கடந்த ஆண்டு ஊதியம் நிர்ணயம் செய்யப்பட்டு, வழங்கப்பட்டு வருகிறது. அதேநேரத்தில் எல்லா கோயில்களுடைய வருமானமும் ஒரே நிலையில் இல்லை என்பதை நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவார்கள். குறிப்பாகச் சொல்லப்போனால், சில கோயில்களில் ஆயிரம் ரூபாய்க்குக் குறைவான வருமானம் வருகிறது. ஆனால் அங்கே குறைந்தது ஒரு அர்ச்சகர், ஒரு காவலர் இருந்தாக வேண்டிய தேவை எழுகிறது. அவர்களுக்கேகூட அந்த ஊதியத்தைக் கொடுக்க முடியாத நிலைமையில் மிகவும் குறைவான வருமானம் வருகிறது. குறிப்பாக கன்னியாகுமரி மாவட்டத்தில் அதிகம்

பேர் வேலை பார்க்கவில்லை என்று சொன்னாலும், இருக்கின்ற 490 கோயில்களில், 5, 6 கோயில்களில் மட்டும்தான் உருப்படியான வருமானம் வருகிறது என்பதனால் அதிலே வருகின்ற வருமானமான ரூ.1½ கோடியை அங்கே இருக்கின்ற ஊழியர்களுக்குப் பிரித்துக் கொடுக்கிறபோது கிட்டத்தட்ட 80 விழுக்காடு ஊதியத்திற்கு மட்டுமே செல்கிறது. மற்ற கோயில்களைப் பராமரிப்பதற்கான வசதி வாய்ப்புகள் மிகவும் குறைவாக இருக்கிறது. அதனால்தான் திருத்திய ஊதிய விகிதத்தை, ரூ.10 இலட்சத்திற்கு மேல் வருமானமுள்ள கோயில்களை, முதுநிலை திருக்கோயில்கள் என்றும், அதற்குக் கீழே இருப்பவற்றை வரிசைப்படுத்தி நான்கு வகைப்படுத்தியும் ஊதியம் இப்போது நிர்ணயிக்கப்பட்டு வழங்கப்பட்டு வருகிறது. குறிப்பாக முதுநிலை திருக்கோயில் அர்ச்சகர்களுக்கு ரூ.3,200 என்பது அடிப்படைச் சம்பளம். அதற்குப் பிறகு ரூ.10 இலட்சத்திற்கு மேல் உதவித் தொகை நிர்ணயிக்கப்பட்டுள்ள முதுநிலை அல்லாத திருக்கோயில்களுக்கு ரூபாய் 2,500 நிலை-1 அர்ச்சகர்களுக்கு,, நிலை-2 அர்ச்சகர்களுக்கு ரூ.2,200, ரூ.10,000-லிருந்து ரூ.1 இலட்சம் வரை வருமானமுள்ள சாதாரண கோயில்களுக்கு ரூ.450 என்பதுதான் நிர்ணயிக்கப்பட்டிருகின்ற தொகை. அந்த அடிப்படையில்தான் வழங்க முடியுமே தவிர, தமிழகம் முழுவதும் இருக்கின்ற அனைத்து அர்ச்சகர்களுக்கும் ஒரே மாதிரியான ஊதியத்தை நிர்ணயம் செய்ய முடியாது. அதற்குக் காரணம் அந்தந்தக் கோயில்களுடைய செலவு அந்தந்தக் கோயில்களுடைய வருமானத்திற்குள்ளேயே அடங்கி விடுகிறது. குறைந்தது 40 விழுக்காடுக்கு மேல் எந்தக் காரணம் கொண்டும், ஊதியச் செலவு கூடிவிடக் கூடாது என்பதில் அரசு கவனமாக இருக்கிறது. ஆணை பிறப்பித்திருக்கிறது. அந்த அடிப்படையில்தான் ஊதியம் நிர்ணயம் செய்யப்படுகிறது. இப்போது கலைஞரின் ஆட்சிக் காலத்தில் அதிக அளவு ஊதியம் நிர்ணயம் செய்யப்பட்டு, அனைவரும் கூடுதலான ஊதியத்தைப் பெறுகிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருக்கோயில்களிலே பூசை செய்கிற பூசாரிகளின் ஊதியத்தைப் பற்றிய கேள்வி. அதிலே குறிப்பாக விவசாயத் தொழிலாளர்களுக்கு வழங்கப்படுவது போலவாவது வழங்கவேண்டுமே என்ற அக்கறையோடு ஏ.எல்.எஸ். அவர்கள் இந்தக் கேள்வியின் மூலமாக கேட்டிருக்கிறார்கள். இது சபையிலே தொடர்ந்து சொல்லப்படுகிற விஷயம்—கோவில்களிலே பூசைகள் ஆறுகால பூசைகளானாலும், மூன்றுகால பூசைகளானாலும், பிரச்சினைகள் இல்லாமல் நடைபெற வேண்டும். அதேபோல் பூசை



செய்பவர்களானாலும், அதிலே பணிபுரிகின்ற ஊழியர்களானாலும், அவர்களுக்கும் சம்பளம் குறைவில்லாமல் கிடைக்க வேண்டுமென்ற அடிப்படையிலேதான் கோயில் நிலங்களை, மடத்தினுடைய நிலங்களை உழுகிற விவசாயிகளிடத்திலே கொடுத்து, அதிலே வருகின்ற தொகையை வைப்பு நிதியாக வைத்து, அதிலிருந்து கிடைக்கக்கூடிய வருமானத்தைக் கொண்டு நிரந்தரமாக ஆறுகால பூசையும் செய்ய முடியும். அதிலே பணிபுரிகின்ற ஊழியர்களுக்கும் சம்பளமும் கொடுக்க முடியும் என்ற அடிப்படையிலேதான் தொடர்ந்து கேட்டு வருகிறேன். நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் சென்ற தடவை அறிவிக்கிறபோது, இந்த விஷயத்தைப் பற்றிப் பேசுகிறபோது கடனைப் பற்றியும் பேசினேன். அதேபோல் கோயில் நிலங்கள் பற்றியும் பேசினேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது துணை வினாவா? இது ஒரு சொற்பொழிவு. இதையெல்லாம் அனுமதிக்க முடியாது.

**திரு. வை. சிவபுண்ணியம்:** இந்தக் கோயில் நிலங்களைப் பற்றி மடாதிபதிகளை, ஆன்மீகவாதிகளை, அரசியல்வாதிகளை எல்லோரையும் கலந்து பேசி முடிவெடுக்கலாம் என்று நம்முடைய முதலமைச்சர் அவர்கள் சொன்னார்களே, அதை முடிவு செய்து, பேச்சுவார்த்தை நடத்தி, அதற்குத் தீர்வு காண்பதற்கான முயற்சிகளை முதலமைச்சர் அவர்கள் மேற்கொள்வார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, நான் இங்கே விவசாயிகளுடைய கூட்டத்தில் இதுபற்றி யோசிக்கப்படும் என்று சொன்னேன். ஆனால் வேடிக்கை என்னவென்றால் வந்த விவசாயப் பிரதிநிதிகள் யாருமே இதுபற்றிப் பேசவில்லை. இதுதான் உண்மை.

முற்பகல் 10-15

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜே. ஹேமச்சந்திரன்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் அர்ச்சகர்களுடைய ஊதியத்தைப் பற்றிச் சொன்னார்கள். கன்னியாகுமரி மாவட்டம் குறித்து குறிப்பாகவும் அவர் எடுத்துச் சொன்னார். கன்னியாகுமரி மாவட்டத்திலே கோயில்களிலே வேலை செய்கிற துப்புரவுத் தொழிலாளிகள், பூ கட்டுகிற தொழிலாளிகள் அப்படிப்பட்டவர்களுக்கு வாழ்க்கை நடத்துவதற்குக் குறைந்தபட்ச ஊதியம்கூட கிடைக்கவில்லை என்ற குறை இருந்து கொண்டிருக்கின்றது

என்பது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா? அப்படியென்றால், அவர்களுக்குக் குறைந்தபட்ச ஊதியம் கிடைப்பதற்கான நடவடிக்கைகளை அமைச்சர் எடுப்பாரா?

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் வினா கேட்கப் போகிறார் என்பதை முன்கூட்டியே அறிந்துதான் ஏற்கெனவே கன்னியாகுமரி மாவட்டத்தைப் பற்றிச் சொன்னேன். ஏற்கெனவே நான் சொன்னதைப்போல 490, கோயில்களிலும் சேர்த்து மொத்தமே 1.50 கோடி ரூபாய்தான் வருமானம் வருகிறது. இதில், முறைப்படியான பூஜைச் செலவுகள்போக ஊதியத்தில் மட்டும் 80 விழுக்காடு அதிகப்படுகிறது. இருந்தாலும் சுசீந்திரம் பகுதிக்காக 6 இலட்சம் ரூபாய் அதிகமாகக்கூட இப்போது மானியம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதே நேரத்தில் தமிழ்நாட்டில் வேறு எந்தக் கோயில் பகுதியிலும் இல்லாத ஒரு நிலையில் திருவனந்தபுரம் சமஸ்தானத்திலிருந்து கன்னியாகுமரி பிரிந்து வந்த காரணத்தால் அங்கு அரசு ஊழியர்கள் என்று 42 பேர் இருக்கிறார்கள். அவர்களுக்கு அரசு ஊழியர்களுடைய ஊதியம் என்று அதிகமாகக் கொடுக்கப்படுகிற காரணத்தால் அதிலே கொஞ்சம் அதிகமான செலவு ஆகிவிடுகிறது. ஆனால், மற்ற இடங்களிலே எந்தக் கோயிலிலுமே அரசு ஊழியர்கள் என்று யாரும் இல்லை. இது ஓர் இக்கட்டான நிலைமை. எனவே, எங்களுக்குக் கவலை அளிக்கிற ஒரேயொரு மாவட்டம் கன்னியாகுமரி மாவட்டம்தான். என்றாலும், மிகத் தாழ்ந்த நிலையில் இருப்பவர்களுக்கு ஓர் ஆண்டிற்குள்ளே இரு முறை முதலில் 25 ரூபாயும், அடுத்து, இரண்டாவது கட்டமாக 25 ரூபாயும் கொடுத்து கணிசமான அளவுக்கு உயர்த்தித் தரப்பட்டுள்ளது. நிதிநிலைமை சீராகிறபோது கண்டிப்பாக அனைவருக்கும் உரிய ஊதியத்தைக் கொடுப்பதற்கு அரசு முடிவு செய்யும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மு. அப்பாவு.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆண்டுக்கு 10 இலட்சம் ரூபாய்க்கு மேல் வருமானம் வருகின்ற ஆலயங்களில் பணியாற்றுகின்றவர்களை முதுநிலைப் பணியாளர்களாகக் கணக்கில் எடுத்து அவர்களுக்கு 3,200 ரூபாய் ஊதியம் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள சுசீந்திரம் தாணுமாலயன் ஆலயத்தில் ஆண்டிற்கு 20 இலட்சம் ரூபாய்க்குமேல் வருமானம் வந்த பின்பும், அங்கு பணியாற்றுகின்ற 65 பணியாளர்களுக்கும் 400 ரூபாய்க்குமேல் யாருக்குமே வழங்கப்படவில்லை என்பது மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா? கடந்த 4, 5 திங்களுக்கு முன்னாலேகூட நானும் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் சென்றபோது ஒருவர், நாங்கள் அதிகாலை 3 மணிக்கே எழும்புகின்றோம். இரவு 10 மணிவரை வேலை இருக்கிறது. எங்களுக்குச் சாப்பிடுவதற்குக்கூட வசதியில்லை என்றும் சாகும் தருவாயில் இருப்பதாகவும் அறிவித்தார்கள்...



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாவாகக் கேளுங்கள்.

**திரு. மு. அப்பாவு:** அந்தச் சுசீந்திரம் ஆலயத்தில் வேலை செய்கின்றவர்களுக்கு நீங்கள் நிர்ணயம் செய்துள்ள ஊதியத்தை வழங்குவீர்களா என்று தங்கள் மூலம் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இப்போதுதானே சுசீந்திரம் கோயிலுக்கு 6 இலட்சம் ரூபாய் கொடுத்தேன் என்று அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். பணம் இல்லை, அதனால் 6 இலட்சம் ரூபாய் கொடுத்தேன் என்று இப்போதுதானே அறிவித்தார்கள். நீங்கள் அதைக் கேட்டுக்கொண்டுதானே இருந்தீர்கள்?

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினருடைய வினாவில் ஒரு நேர்மை இருக்கிறது. அதை நான் மறுக்கவில்லை. ஆனால், குறிப்பாக பழனி கோயில் இருக்கிறது என்று சொன்னால், அந்தப் பழனி கோயில் மட்டும் தனியாகப் பிரிக்கப்பட்டு முதல்நிலைக் கோயிலாகக் கணக்கிடப்படுகிறது. ஆனால் கன்னியாகுமரி மாவட்டத்திலிருக்கிற அந்தக் கோயில்கள் அப்படிப் பிரிக்கப்படவில்லை. குறிப்பாக புதுக்கோட்டை சமஸ்தானம் என்றால் அந்த சமஸ்தான அனைத்துக் கோயில்களும் ஒரே அலகுக்குள் வருகின்றன. அதேபோல, கன்னியாகுமரி மாவட்டத்தில், சுசீந்திரம் தேவஸ்தானத்தில் உள்ள அனைத்துக் கோயில்களுமே ஒரே அலகுக்குள் வருகின்றன. எனவே, சுசீந்திரம் கோயிலை மட்டும் தனியாகப் பிரிக்க முடியாது. அங்கே இருக்கிற 490 கோயில்களுடைய வரவு-செலவும் ஒரே எல்லைக்கு உட்பட்டது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு உணர்த்த விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அ.லெ. சுப்பிரமணியன்.

**திரு. அ.லெ. சுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக இந்தத் திருக்கோயில்களில் சம்பளம் மிகமிகக்

[2000 மார்ச் 31

குறைவாகக் கொடுக்கப்படுகிறது. உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமானால், பூசை செய்கிறவர்களுக்கு மட்டுமல்ல, ஓதுவார்கள் பற்றியும் சொல்லலாம். இப்போது நெல்லையப்பர் கோயிலுக்கென்று 148 கடைகள் இருக்கின்றன, அவற்றில் வருமானமும் இருக்கிறது. அதிலே, கடை வரி வசூலிப்பவர் பணியிடம் நீண்டநாட்களாகக் காலியாக இருக்கிறது. அதற்கு ஆள் போடுவதற்கு, ஒரு நாளைக்கு 20 ரூபாய்தான் சம்பளம் தர முடியும் என்று அங்கே உள்ள அதிகாரி சொல்கிறார். இப்படிக் குறைந்த சம்பளம் இருந்தால், இவ்வளவு பெரிய தொகையை எப்படி வசூலிக்க முடியும்? ஆகவே, இதற்கு ஒரு நல்ல குழு அமைத்து ஊதிய விகிதங்களை சீர் செய்ய அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு கோயிலுக்கும் ஓர் அறங்காவலர் குழு இருக்கிறது. அங்கே இருக்கிற குறைபாடுகளை அல்லது தீர்வுகாணப்படவேண்டிய சிக்கல்களை முறைப்படி தீர்மானம் நிறைவேற்றி அனுப்பினால் இங்கேயுள்ள ஆணையர் அலுவலகம் அதுகுறித்து ஆய்வு செய்து தக்க முடிவுகளை மேற்கொள்ளும். இப்போது பல இடங்களிலே உள்துறைப் பணியிடங்கள் நிரப்பப்பட்டிருக்கின்றன. வெளித் துறைப் பணியிடங்களை நிரப்புவதை மனித ஆற்றலினுடைய தணிக்கைக் குழு முற்றிலுமாக மறுத்திருக்கிறது. என்றாலும், தேவைகள் கருதி இந்தப் பணிகள் கண்டிப்பாக இருந்தே தீரவேண்டுமென்ற அடிப்படையிலே ஆணையர் அலுவலகம் மறு ஆய்வு செய்து வருகிறது. அந்த அடிப்படையில் நெல்லையப்பர் கோயிலுக்கும் அந்தப் பணி நீட்டிக்கப்படும்.

முற்பகல் 10-20

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 176, திரு. பெ.சு. திருவேங்கடம், மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

**176—**

**வங்கிக்குக் கட்டடம்**

***23914—திரு. பெ.சு. திருவேங்கடம்:**

மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2000 மார்ச் 31]

(அ) திருவண்ணாமலை மாவட்டக் கூட்டுறவு வங்கிக்கு சொந்தக் கட்டடம் கட்ட அரசு நடவடிக்கை எடுத்து வருகிறதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியோடு திருத்திய விடையை இங்கு வாசிக்கிறேன்.

(அ) மற்றும் (ஆ) : ஆம். நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அப்படி நடவடிக்கை எடுக்கப்பட்டு திருவண்ணாமலை மத்தியக் கூட்டுறவு வங்கித் தலைமை அலுவலகக் கட்டடம் கட்டிட அடிமனை வாங்க நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுவிட்டது. திருவண்ணாமலை மத்தியக் கூட்டுறவு வங்கி திருவண்ணாமலை நகராட்சி எல்லையில் அமைந்துள்ள சர்வே எண் 186/1,2,3 மற்றும் 2304/3ஏ, 3பி ஆகியவற்றில் மொத்தப் பரப்பளவு 74181 சதுர அடி நிலத்தை திருவண்ணாமலை கூட்டுறவு வீடு கட்டும் சங்கத்திடமிருந்து 12-7-1999 அன்று கிரயம் பெற்றுள்ளது. தலைமை அலுவலகக் கட்டடம் கட்டுவதற்கு அரசுக் கூட்டுறவுத் துறை முதன்மை பொறியாளரால் ரூ. 200 இலட்சம் மதிப்பீட்டில் தயாரிக்கப்பட்ட கட்டட வரைபடத்திற்கு அனுமதி கோரி திருவண்ணாமலை நகராட்சியில் வங்கியால் 15-11-1999 அன்று விண்ணப்பிக்கப்பட்டு அனுமதி வரவேண்டியுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. பெ.சு. திருவேங்கடம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சருடைய பதிலில் எனக்கு மாறுபட்ட கருத்து இல்லை. ஆனால் அந்த வரைபடத்திற்கு அனுமதி அளிக்க வேண்டிய திருவண்ணாமலை நகராட்சி அந்த இடத்தைத் தன்னுடையது என்று சொந்தம் கொண்டாடுகிறது. அதுதான் பிரச்சினையே. ஆனால் அது சொந்தம் கொண்டாடுகின்ற அந்த நிலையில் வரைபடத்தை அவர்கள் அனுமதிப்பதில்லை. ஆனால் இடம் என்னவோ மத்திய வங்கிக்குத்தான் சொந்தமாக இருக்கிறது. நம்முடைய வழக்கறிஞர்களுடைய கருத்தை எல்லாம் கேட்டுத்தான், முறைப்படிதான் அந்த இடம் வாங்கியுள்ளார்கள். அதனால் அமைச்சர் அவர்கள் தலையிட்டு ஒருவேளை அந்த நகரமன்றம் வரைபடத்தை அனுமதிக்க மறுத்தால் விதிப்படி மேல்முறையீடு செய்து அனுமதியைப் பெற்று உடனடியாக அந்தக் கட்டடத்தைக் கட்டுவதற்கு நம்முடைய அரசு ஆவன செய்யுமா என்று நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை மாவட்டத்திற்கு நான், நம்முடைய வீட்டு வசதித் துறை அமைச்சர், அந்த வீட்டு வசதிச் சங்கத்தினுடைய தலைவர் ஆகிய மூன்று பேரும் சேர்ந்து நேரடியாகச் சென்று அந்த இடத்தைப் பார்வையிட்டு, அவர்களிடமே அந்த இடம் கிட்டத்தட்ட 15, 20 ஆண்டு காலமாக இருக்கிறது என்று தெரிந்த பிறகுதான் வழக்கறிஞர்கள் மூலமாக சட்டப்படி அந்த இடத்தைப் பெற்றிருக்கிறோம். வேண்டுமென்றே அங்கிருக்கிற மாற்றுக் கட்சியைச் சேர்ந்த நகராட்சித் தலைவர் அவர்கள் அதை அனுமதிக்க மறுத்துக் கொண்டிருக்கிறார்கள். எனவே மேல்முறையீடு செய்து விரைவிலே கட்டடம் கட்டுவதற்கு, பணி தொடங்குவதற்கு நிச்சயமாக ஆவன செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 177, திருமதி ஆர். சரஸ்வதி, மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர்.

**177-**

### பால் குளிரூட்டும் நிலையம்

***27721—திருமதி ஆர். சரஸ்வதி:**

மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தாராபுரம் நகரில் பால் குளிரூட்டும் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. க. சுந்தரம், பால்வளத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தாராபுரம் நகரில் பால் குளிரூட்டும் நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

**திருமதி ஆர். சரஸ்வதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சங்கரெண்டாம்பாளையத்தில் இயங்கி வரும் பால் குளிரூட்டும் நிலையத்திற்கும் தாராபுரத்திற்கும் தொலைவு மிக அதிமாக உள்ளதால் பக்கத்து மாவட்டமான கோவை மாவட்டத்திற்கு விவசாயிகள்



அனைவரும் பாலைக் கொண்டுபோய் ஊற்றிவிடுவதால் சங்கரெண்டாம்பாளையத்தில் பால் குளிரூட்டும் நிலையத்தில் பாலின் அளவு குறைகிறது. ஆகவே எங்களுடைய தாராபுரம் தொகுதிக்குட்பட்ட அலங்கியம் மற்றும் தளவாய்பட்டினம் கிராமங்களில் இருக்கும் விவசாயிகளின் குறைகளைத் தீர்க்கும் வகையில் அங்கே ஒரு பால் குளிரூட்டும் நிலையத்தை அமைத்துக் கொடுத்தால் பக்கத்து மாவட்டத்திற்குச் செல்லும் பாலின் அளவு குறைந்து, இங்கே அதிகமாகப் பால் கிடைக்க வாய்ப்புள்ளதால் தாராபுரம் தொகுதிக்குட்பட்ட கிராமங்களில் ஏதாவது ஒரு இடத்தில் பால் குளிரூட்டும் நிலையம் அமைத்துத்தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பரிசீலனை செய்வார்களா என அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. க. சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாராபுரம் நகரிலிருந்து சுமார் 12 கிலோ மீட்டர் தொலைவிலுள்ளது சங்கரெண்டாம்பாளையம். அங்கு நாள் ஒன்றுக்கு 50,000 லிட்டர் பால் குளிரூட்டும் திறன் கொண்ட நிலையம் உள்ளது. தாராபுரம், வெள்ளக்கோவில், காங்கேயம் ஆகிய மூன்று தொகுதிகளில் மொத்தம் 55,000 லிட்டர் பால் மட்டுமே கொள்முதல் செய்யப்படுகிறது. மேலும் ஈரோடு மாவட்டத்திலுள்ள பால் பண்ணை மற்றும் பால் குளிரூட்டும் நிலையத்தின் மொத்தத் திறன் 3,85,000 லிட்டர் ஆகும். ஆனால் தற்போது நாள் ஒன்றுக்கு 2,10,000 லிட்டர் பால் மட்டுமே கொள்முதல் ஆகிறது. எனவே, தாராபுரம் தொகுதியில் புதிய பால் குளிரூட்டும் நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 178, திரு. ம. முத்துராமலிங்கம், மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்.

**178—**

### மாணவர் விடுதிக்குக் கட்டடம்

***29948—திரு. ம. முத்துராமலிங்கம்:**

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2000 மார்ச் 31

(அ) மதுரை மாவட்டம், திருமங்கலம் தொகுதி, மேலஉரப்பனூரில் உள்ள பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர் விடுதிக்குப் புதிய கட்டடம் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது கட்டித் தரப்படும்?

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): மதுரை மாவட்டம், திருமங்கலம் தொகுதி, மேலஉரப்பனூரில் பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர் விடுதி ஏதும் இயங்கவில்லை. அங்கு சீர்மரபினர் மாணவர் விடுதி இயங்கி வருகிறது. அவ்விடுதிக்குக் கட்டடம் கட்டும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-25

**திரு. ம. முத்துராமலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிற்படுத்தப்பட்ட மாணவர்கள் விடுதி அங்கே இல்லையென்றாலும், மிகவும் பிற்படுத்தப்பட்ட நலத் துறையின் சார்பில் விடுதி நடைபெற்று வருகிறது. துறையின் சார்பில் அங்கே இடம் வேண்டும் என்று கேட்டு கிராமப் பஞ்சாயத்து அதற்கான இடம் எல்லாம் கொடுத்திருக்கிறது. வாடகைக் கட்டடத்திலே இயங்கி வருகிற இந்த மாணவர் விடுதியில் அடிப்படை வசதிகள் அந்த மாணவர்களுக்குக் கிடைக்காத நிலையில் மிகவும் அவலமான ஒரு சூழ்நிலை இருக்கிறது. முழுமையாக கிராமப் பகுதி நிறைந்த மேலஉரப்பனூரில் அரசின் சார்பில் புதிய மாணவர் விடுதி கட்டினால் அங்கே இருக்கின்ற மாணவர்களுக்குச் சுகாதாரமும் அடிப்படை வசதிகளும் முழுமையாகக் கிடைக்கக்கூடும். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வரவிருக்கின்ற மானியக் கோரிக்கையிலேயாவது இந்த மாணவர் விடுதிக்கு நிதியை ஒதுக்குவார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசின் விதிமுறைகள் மற்றும் நிதி நிலைமைக்குட்பட்டு மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை நிறைவேற்றப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 179, திரு. இ.ஜி. சுகவனம், மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்.



2000 மார்ச் 31]

179—

## மகளிர் தொழிற்பேட்டை

***33267—திரு. இ.ஜி. சுகவனம்:**

மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பர்கூர் தொகுதியில் பர்கூர் அருகில் அமைக்கப்பட்டுள்ள மகளிர் தொழிற்பேட்டைக்கான கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டும் யாருக்கும் வழங்காமல் உள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அவற்றை விரைவில் வழங்கிட அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) கட்டடங்களை வழங்கிட அரசு தயாராக உள்ளது. ஆனால், ஒரு தொழில் முனைவோர்கூட கட்டடங்களைக் கேட்டு விண்ணப்பிக்கவில்லை.

**திரு. இ.ஜி. சுகவனம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆட்சியிலே சரியான இடத்திலே, சரியான கட்டடங்களைக் கட்டி முடிக்காத காரணத்தால், அதை வாங்குவதற்கு யாரும் முன்வராத நிலையிலே, நம்முடைய கழக ஆட்சி ஏற்பட்ட பிறகு நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பெருமுயற்சி எடுத்துக்கொண்டு பல முறை இதற்கு tender கோரினார்கள். இருந்தாலும்கூட, அந்தப் பகுதியிலே இருக்கக்கூடியவர்கள் யாரும் அந்தக் கட்டடங்களை வாங்குவதற்கு முன் வரவில்லை. மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய ஆலோசனையின்பேரில் அந்தப் பகுதியிலே இருக்கின்றவர்களைக் கலந்தாலோசித்தபோது, அதை வாடகைக்கு விட்டால் வாங்கிக்கொள்வதற்குத் தயாராக இருப்பதாக சில பேர் சொல்கிறார்கள். அதை வாடகைக்குக் கொடுப்பதற்கு அரசு முன்வருமா என்று தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொன்னதைப்போல, கடந்த ஆட்சிக் காலத்திலே வாடகைக்கு விடுகின்ற முறையை சிட்கோ பின்பற்றி வந்தது. ஆனால், இந்த ஆட்சி பொறுப்பேற்றதற்குப் பின்னால் அதை முழு

விற்பனைக்கு என்றுதான் வைத்துள்ளதே தவிர, வாடகைக்கு விடுகின்ற நிலை இல்லை என்று முடிவு எடுத்திருக்கிறது. எனவே, ஏற்கெனவே அரசாங்கம் நிர்ணயித்த விலையைவிட 2 இலட்சம் ரூபாய் குறைத்து, 6 இலட்சம் ரூபாய் வரைக்கும் வழங்கலாம் என்று அரசு முடிவு செய்திருக்கிறது. மேலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க, தொழில் முனைவோர் முன்வந்தால் நிச்சயமாக அதுபற்றிப் பரிசீலிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. என்.ஆர். அழகராஜா.

**திரு. என்.ஆர். அழகராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேனி மாவட்டத்திலுள்ள சின்னமனூர், உத்தமபாளையம், கம்பம் போன்ற பகுதிகள் விவசாயத்தை மட்டுமே நம்பியிருக்கக்கூடிய மக்கள் உள்ள பகுதிகளாக இருக்கின்றன. அங்கே ஒரு தொழிற்பேட்டை அமைப்பதற்கு மக்கள் தயாராக இருக்கிறார்கள். அதுவும், கூட்டுறவுத் துறையிலே அமைப்பதற்குப் பல்வேறு மக்கள் சின்னமனூர் பகுதியிலே தயாராக இருக்கிறார்கள். அதற்கு வேண்டிய நிலங்களை மிகவும் குறைவான விலைக்குக் கொடுப்பதற்குண்டான சாத்தியக்கூறுகள்—தண்ணீர் வசதி, மின்சார வசதி போன்ற வசதிகள் அங்கே கிடைப்பதற்கு வாய்ப்புகள் இருக்கின்றன. அந்த இடத்தைக்கூட மாவட்ட ஆட்சித் தலைவர், மாவட்ட வருவாய்த் துறை அதிகாரி போன்றவர்கள் எல்லாம் சென்று பார்த்துவிட்டு அமைச்சருக்குப் பரிந்துரை செய்திருக்கிறார்கள். ஆகவே, இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையிலாவது கூட்டுறவுத் துறையிலே தொழிற்பேட்டை அமைக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டுக்கொண்டதற்கு இணங்க தொழில் முனைவோர்கள் தயாராக இருந்தால், இந்த அரசு உடனே அதை நிறைவேற்றுவதற்குத் தயாராக இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் அ. மணி.

**டாக்டர் அ. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற ஆண்டு என்னுடைய தொகுதி உளுந்தூர்பேட்டையிலே சிட்கோ தொழிற்பேட்டை அமைப்பதற்கு உத்தரவு பிறப்பித்த மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்ளும் அதே நேரத்திலே, அந்தத் தொழிற்பேட்டையை அமைப்பதற்கான நிலங்கள் எல்லாம் கையகப்படுத்தப்பட்டு விண்ணப்பப் படிவங்கள் பெறப்பட்டன. ஆனால், விண்ணப்பப் படிவங்கள் பெறப்பட்ட





பிறகும் அதன் மீது எந்த நடவடிக்கையும் இதுவரையிலே பல மாதங்களாக எடுக்கப்படவில்லை. அது சம்பந்தமாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உரிய நடவடிக்கை எடுத்து அந்தத் தொழிற்பேட்டையை உடனடியாகத் தொடங்குவதற்கு ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை ஏற்று, உளுந்தூர்பேட்டையிலே தொழிற்பேட்டை அமைப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 180, திரு எஸ்.எஸ். மணி நாடரர், மாண்புமிகு கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர்.

**180—**

**கால்நடை மருத்துவமனை**

***29466—திரு. எஸ்.எஸ். மணி நாடார்:**

மாண்புமிகு கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சாத்தான்குளம் தொகுதி, நாசரேத்திலுள்ள கால்நடை மருத்துவமனையைத் தரம் உயர்த்தி பெருமருத்துவமனையாக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) சாத்தான்குளம் தொகுதி, நாசரேத்திலுள்ள கால்நடை மருத்துவமனையைத் தரம் உயர்த்தி பெருமருத்துவமனையாக்க தற்போது செயற்குறிப்பு ஏதுமில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

முற்பகல் 10-30

## 2. சிறப்புக் கவன ஈர்ப்பு

### கடலூர் சூரப்பநாயக்கன் சாவடிப் பகுதியில் உள்ள சி.ஐ.டி.யூ. தொழிற்சங்க அலுவலகத்தின்மீது தாக்குதல் நடத்தப்பட்டது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, கடலூர் சூரப்பநாயக்கன் சாவடியில் உள்ள சி.ஐ.டி.யூ. தொழிற்சங்க அலுவலகத்தின்மீது தாக்குதல் நடத்தப்பட்டது குறித்து கவன ஈர்ப்புக்கு திரு. டி. மணி, திரு. ஜே. ஹேமச்சந்திரன் ஆகியோர் அறிவிப்புக் கொடுத்திருக்கிறார்கள். இதையொட்டிய கருத்தாக திரு. சி. ஞானசேகரன் அவர்கள் ஓர் அறிவிப்புக் கொடுத்திருந்தார்கள். அவற்றை சிறப்புக் கவன ஈர்ப்பாக அனுமதித்து, முதலிலே திரு. ஞானசேகரன் அவர்களை சுருக்கமாகப் பேச அழைக்கிறேன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற வாரம் கடலூரிலே சூரப்பநாயக்கன் சாவடி என்ற இடத்திலே ரெயில்வே டிராக்கில், இரவில் சில தீவிரவாதிகள் மோட்டார் சைக்கிளில் வந்து, அவர்கள் வெடிகுண்டு வெடித்ததனுடைய விளைவாக ரெயில்வே தண்டவாளங்கள் அங்கே தகர்க்கப்பட்டிருக்கின்றன. அங்கிருந்த குடியிருப்புப் பகுதியிலே வாழ்ந்து கொண்டிருந்த மக்கள் இந்த வெடிச் சத்தத்தைக் கேட்டவுடன் ஓடோடி வந்து, அவர்கள் இந்தத் தீவிரவாதிகளைப் பிடிப்பதற்கு முயன்றிருக்கிறார்கள். ஆனால் அவர்கள், தங்களிடமிருந்த அபாயகரமான ஆயுதங்களையெல்லாம் காட்டிப் பயமுறுத்தி, 'கிட்டே வந்தால் உங்களையெல்லாம் ஒழித்து விடுவோம்., வெடிகுண்டைப் போட்டு உங்களை சாகடித்து விடுவோம்' என்று சொல்லி தப்பி ஓடியிருக்கிறார்கள். உடனடியாக வரவிருந்தது ஒரு ரெயில். அந்த மக்கள் எழுச்சியோடு அந்த இடத்திலே உடனடியாகக் கூடிவிட்ட காரணத்தால்தான், அந்த ரெயிலை நிறுத்தி ஒரு பெரிய விபத்து அந்த இடத்திலே தவிர்க்கப்பட்டிருக்கிறது. ஆனால் அங்கிருந்த மக்கள் உடனடியாக ஆத்திரப்பட்டு—அந்த இடத்திலே, வெடிகுண்டு வெடித்த இடத்திலே வெள்ளைத் தாளிலே சிகப்பு மையினாலே எழுதப்பட்ட சில வாசகங்களைப் பார்த்து—இதை கம்யூனிஸ்டுகள்தான் செய்திருக்க வேண்டும் என்ற எண்ணத்தோடு, அவர்கள் பக்கத்திலே இருந்த சி.ஐ.டி.யூ. ஆபிஸிற்குப் போய், 'இந்தக் கம்யூனிஸ்டுகாரர்கள்தான் இதைச் செய்து கொண்டிருக்கிறார்கள், அடையாளம் தெரியாத ஆட்கள் எல்லாம்





வந்துபோய்க் கொண்டிருக்கிறார்கள் என்கிற சந்தேக நோக்கத்தோடு அவர்கள் அங்கே சென்று, C.I.T.U. அலுவலகத்தையும் தகர்த்திருக்கிறார்கள். ஆனால் உண்மையில், இந்தப் பின்னணியில் என்ன இருக்கிறது என்பதை மாண்புமிகு முதலமைச்சருடைய கவனத்திற்கு நான் கொண்டுவரக் கடமைப்பட்டிருக்கிறேன்.

சமீபகாலமாக, தமிழகத்திலே தீவிரவாதம் மீண்டும் தலைதூக்கி இருக்கிறது என்பதைத்தான் இந்த நிகழ்ச்சி எடுத்துக் காட்டுகிறது. ஏற்கெனவே விடுதலைப் படை அந்தப் பகுதியிலே இருந்து கொண்டிருக்கிறது, தமிழரசன் காலத்திலிருந்து. மீண்டும் அதிலே லெனின், பிறகு நிறையப் பேர் வந்து கொண்டிருக்கிறார்கள். வாரிசுதாரர்களாக வந்து அவர்கள் இதுபோன்ற அமைப்புகளில் இருந்து கொண்டு, அந்தப் பகுதியிலே மட்டும் தீவிரவாதத்தை வளர்க்கவில்லை. இன்னும் நம்முடைய தமிழக அரசினுடைய பிடியில் சிக்காமல் இருக்கக்கூடிய வீரப்பனுடைய கூட்டாளிகளோடும், வீரப்பனோடும் அவர்கள் சேர்ந்து கொண்டு அங்கேயும் ஒரு camp அமைத்து எப்படியெல்லாம் நாம் குற்றத்தைச் செய்துவிட்டுத் தப்பிக்கமுடியும், எப்படி நாம் மற்றவர்களிடம் பணம் பறிக்க முடியும், எப்படி நாம் இந்த இடத்திலே சட்டம்-ஒழுங்கைக் கெடுக்க முடியும் என்ற அளவிலே அவர்கள் திட்டமிட்டு, வீரப்பனோடு சேர்ந்து ஒரு பெரிய கூட்டமே இருக்கிறது. விடுதலைப் புலிகள் எல்லாம் கூட வந்து அங்கே காட்டிலே training எடுக்கிறார்கள் என்று சொல்கிறார்கள். அவர்கள் தர்மபுரி காவல் நிலையத்தைத் தகர்ப்பதாக எச்சரித்திருக்கிறார்கள், அதேபோல வெளிநாட்டு மூலதனம் தமிழகத்திற்கு வருகிறபோது, அந்த வெளிநாட்டு மூலதனத்தைக் கொண்டு உருவாக்கப்பட்டிருக்கக்கூடிய தொழிற்சாலைகளையும் தகர்ப்பதாகச் செய்திகள் வந்து கொண்டிருக்கின்றன. ஆந்திரத்தில் நக்சல்பாரிகள் எப்படிச் செயல்படுகிறார்களோ, அதேபோல தீவிரவாதத்தை நாங்கள் தமிழகத்திலே செய்து காட்டுவோம் என்றும், தமிழரசனை ஏற்கெனவே போலீஸார் பிடித்து அவனைச் சுட்டதனுடைய விளைவாக மேலும் அவர்கள் ஆத்திரப்பட்டதுபோல செய்து கொண்டு, தமிழகத்தையே கெடுப்பதற்காக அவர்கள் திட்டமிட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

சட்டம்-ஒழுங்கு இன்று கேள்விக்குறியாகி இருக்கிறது. ஆகவே, இப்படிப்பட்ட தீவிரவாதத்தை, நீங்கள் முளையிலேயே கிள்ளி எறிவதற்கு, தமிழகத்திலே இனி தீவிரவாதம் எந்த இடத்திலேயும் தலை எடுக்க நிச்சயமா நாங்கள் அனுமதிக்க மாட்டோம் என்ற வகையிலே நீங்கள் இரும்புக்கரம் கொண்டு இப்படிப்பட்ட தீவிரவாதத்தை அடக்கவேண்டும்.

[திரு. சி. ஞானசேகரன்] [2000 மார்ச் 31

மதத்தின் பெயரால் சில பேர் எழுகிறார்கள் அல்லது வேறு ஏதாவது கொள்கையைச் சொல்லி சில பேர் தீவிரவாதத்தை வளர்க்கிறார்கள். இல்லையென்று சொன்னால், கடத்தல்காரர்கள் இங்கே தீவிரவாதத்தை வளர்க்கிறார்கள். Rowdyism இங்கே அதிகமாகப் போய்க்கொண்டிருக்கிறது. இப்படிப்பட்ட நிலைக்கு முற்றுப்புள்ளி வைப்பதற்கு நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் என்ன நடவடிக்கை எடுத்து இருக்கிறார்கள்? இப்பொழுது மூன்று பேர் மட்டுமே இதிலே கைது செய்யப்பட்டதாகத் தகவல் வந்து கொண்டிருக்கிறது. இன்னும் பிடிபடாதவர்கள் எத்தனை பேர்? இவர்கள் எங்கெல்லாம் Training Camps வைத்து நடத்துகிறார்கள் என்பதை முதல்வர் அவர்கள் ஒரு தனிப்படையை அமைத்து, முழுக்க இதனை விசாரணை செய்து, தமிழகத்தில் மீண்டும் அமைதியை நிலைநாட்ட வேண்டுமென்று நான் கேட்டு அமைகிறேன்.

முற்பகல் 10-35

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜே. ஹேமச்சந்திரன்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மிக முக்கியமான ஒரு பிரச்சினையை நான் இந்தத் தீர்மானத்தின் வழியாக இந்த மாமன்றத்தினுடைய, குறிப்பாக தமிழக முதல்வர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். மாண்புமிகு உறுப்பினர் ஞானசேகரன் அவர்கள் எடுத்துச் சொன்னதுபோல, சில தீவிரவாதிகள் அங்கே கடலூர் O.Tயிலே உள்ள இரயில் பாலத்திலே குண்டை எறிந்திருக்கிறரார்கள். அந்த இரயில் பாலத்தை அவர்கள் நாசப்படுத்துவதற்கு முயற்சி செய்திருக்கிறார்கள். எங்களுடைய சி.ஐ.டி.யூ. மாவட்ட அலுவலகத்திற்குப் பின்னாலேதான் இந்த நடவடிக்கைகள் நடந்திருக்கின்றன. ஆகவே சி.ஐ.டி.யூ. இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் அல்லது மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவர்கள் இதைச் செய்திருக்கிறார்கள் என்று விளம்பரம் பண்ணக்கூடிய முறையிலே சிலர் அங்கே எங்களுடைய அலுவலகத்தைத் தாக்கி அங்கேயிருந்த பொருள்களையெல்லாம் உடைத்திருக்கிறார்கள். துரதிருஷ்டவசமாக ஆளும் கட்சியினுடைய சில முக்கிய ஆட்கள்கூட அதிலே இருந்தார்கள் என்ற தகவல்களும் எங்களுக்கு உண்டு. இது சம்பந்தமாக மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கும், அதேபோன்று காவல் துறை அதிகாரிகளுக்கும் புகார் செய்த பிறகும், ஆரம்பத்திலே அவர்கள் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.



2000 மார்ச் 31] [திரு. ஜே. ஹேமச்சந்திரன்]

21 ஆம் தேதி இந்த நிகழ்ச்சி நடந்திருக்கிறது. இந்த நேரத்திலே எங்களுக்குக் கிடைத்த தகவல்படி 25 ஆம் தேதி அங்கே பல அரசியல் கட்சிக்ளைச் சேர்ந்தவர்களும் ஒரு கண்டனக் கூட்டம் நடத்துவது வரை காவல் துறை யார் மேலேயும் நடவடிக்கை எடுக்கவில்லை. இப்போது ஒரு சிலர் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள் என்ற தகவல் வருகிறது.

நான் இந்த நேரத்திலே ஒன்றை இங்கே சுட்டிக்காட்டுவதற்கு விரும்புகிறேன். கடலூர் பகுதியிலே ஒரு சிலர், வசதி படைத்தவர்கள், சில நாட்களாகவே, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினுடைய முன்னணித் தலைவர்களுக்கு எதிராக பல அட்டகாசங்களை நடத்திக் கொண்டிருக்கிறார்கள் என்பதை அரசும் அறியும். மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினுடைய மாநிலப் பொதுச் செயலாளர் தோழர் சங்கரய்யா அவர்களே அங்கே ஒரு பொதுக்கூட்டத்திற்குச் சென்ற நேரத்திலே, அவர்களையே கொலை செய்ய வேண்டுமென்ற நோக்கத்துடன் தாக்குவதற்குக்கூட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன என்பது மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், இந்த மாமன்றத்திற்கும் நன்கு தெரியும். அதைத் தொடர்ந்து அந்தப் பகுதியிலே மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சிக்கு எதிராக, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி தலித் மக்களுடைய, உழைப்பாளி மக்களுடைய நலனைப் பாதுகாப்பதற்காக நடவடிக்கைகள் எடுக்கிறது என்ற அந்தக் கோபத்திலே, ஒரு சிலர் எங்களுடைய இயக்கத்திற்கு எதிராகத் தொடர்ந்து தாக்குகின்ற நடவடிக்கைகள் எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். இந்த நிகழ்ச்சியைப் பொறுத்தளவிலேகூட, அங்கே எங்களுடைய அலுவலகத்தைத் தாக்கியதற்குப் பிறகு இப்போது சமீபத்திலே நம்முடைய அரசால் அறிவிக்கப்பட்ட முறைப்படுத்தப்படாத தொழிலாளர்களைப் பதிவு செய்கிற நடவடிக்கைகளைத் தொழிற்சங்க இயக்கங்கள் நடத்திக்கொண்டிருக்கின்றன. அந்த நடவடிக்கைகளை அங்கே சி.ஐ.டி.யூ. மாவட்டக் குழுவும் நடத்தி பலரை உறுப்பினர்களாகச் சேர்த்து, அங்கே அவர்களிடமிருந்து வசூலிக்கப்பட்டு அரசுக்கு கட்ட வேண்டிய பணத்தைக்கூட 100-க்கும் அதிகமான ஆட்கள் வந்து கொள்ளை அடித்துச் சென்றிருக்கிறார்கள். அப்போது நாங்கள் என்ன எண்ண வேண்டியிருக்கிறது என்றால், இப்படி உழைப்பாளி மக்களுடைய நலனை பாதுகாப்பதற்காக நாங்கள் எடுக்கிற நடவடிக்கைகளைப் பிடிக்காத ஒரு சிலர், அதிலே துரதிருஷ்டவசமாக ஒரு வேளை தெரிந்தோ, தெரியாமலோ ஆளும் கட்சியினுடைய சில ஆட்கள்கூட கலந்து கொண்டிருக்கலாம், அவர்கள்கூட வேண்டுமென்றே சென்றதாக நான் சொல்லவில்லை. ஆனால், துரதிருஷ்டவசமாக அவர்களும் அதிலே இருந்திருக்கிறார்கள் என்ற காரணத்தினாலேதான் காவல் துறை தகுந்த

[திரு. ஜே. ஹேமச்சந்திரன்] [2000 மார்ச் 31

நடவடிக்கை எடுப்பதற்கு மறுத்திருக்கிறதோ என்று எண்ண வேண்டியிருக்கிறது. உறுப்பினர் ஞானசேகரன் அவர்கள் எடுத்துச் சொன்னதுபோல. இது தீவிரவாதத்தின் ஒரு முயற்சியாக, தமிழகத்திலுள்ள பல பகுதிகளில் நடந்து கொண்டிருக்கின்றது. தீவிரவாதம் தடுத்து நிறுத்தப்பட வேண்டும் என்பதில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி தெளிவாக இருக்கிறது என்பதை இந்த மாமன்றமும், அதேபோல தமிழக முதல்வரும் நன்கு அறிவார்கள் என்று நம்புகிறேன். ஆகவே, இந்தத் தீவிரவாதத்தினுடைய நடவடிக்கைகள் காரணமாக, அதாவது தகாத நடவடிக்கைகளை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் இயக்கத்தோடு இணைத்து, எங்களைத் தாக்குவதற்கு எடுத்துக்கொண்டிருக்கிற முயற்சிகளை நிச்சயமாக அரசு அனுமதிக்கக் கூடாது என்று நான் இந்த நேரத்திலே எடுத்துச்சொல்ல விரும்புகிறேன்.

முற்பகல் 10-40

இன்னொன்றையும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அகில இந்திய ஜனநாயக வாலிபர் சங்கம் வருகிற ஏப்ரல் மாதம் 6ஆம் தேதியிலிருந்து 10 ஆம் தேதி வரை அதனுடைய அகில இந்திய மாநாட்டை திருவனந்தபுரத்தில் நடத்துகிறது. அதற்கான கொடியை பஞ்சாபில் இருந்து கொண்டு வந்தார்கள். சென்ற ஞாயிற்றுக்கிழமை, அதாவது 25 ஆம் தேதி என்று நினைக்கிறேன், சென்னை நகரத்திலே பர்மா பஜாருக்குப் பக்கத்திலே அந்த ஊர்வலத்தில் வந்த பெண் தோழர்களைச் சிலர் கேலி செய்து, அவர்களோடு தகராறு பண்ணி, அந்த ஊர்வலத்தில் வந்த சிலரைத் தாக்கி இருக்கிறார்கள். ஆனால், காவல் துறை அதற்கு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. நான் எதற்காக இதைச் சுட்டிக்காட்டுகிறேன் என்றால், அந்தச் சங்கம் 11 மாநிலங்களைத் தாண்டி இந்த நகரத்திற்கு வந்து இருக்கிறது; அது அகில இந்திய இயக்கத்தோடு சம்பந்தப்பட்டு இருக்கிற ஒரு விஷயத்திலே வருகிறது; அவர்களுக்கே பாதுகாப்புக் கொடுப்பதற்கு சென்னை நகரக் காவல் துறை எப்படித் தவறி இருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அது அகில இந்தியச் சங்கம்; இந்த மாநிலத்தோடு சம்பந்தப்பட்டது அல்ல. அவர்கள் இந்தப் பாதை வழியாகச் செல்கிறார்கள். அவர்களுக்குக் கூட பாதுகாப்பு கொடுப்பது என்பது, ஏதோ தேவையற்ற ஒரு விஷயம் என்ற முறையிலே, இந்தக் காவல் துறையினர் எண்ணுகிறார்களோ, என்னவோ தெரியவில்லை. எதற்காகச் சுட்டிக்காட்டுகிறேன் என்றால், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, திராவிட முன்னேற்றக் கழகக் கட்சியினுடைய சில கொள்கைகளை எதிர்க்கிறது என்கிற காரணத்தாலே, அல்லது அதோடு வேறுபடுகிறது என்ற



2000 மார்ச் 31] [திரு. ஜே. ஹேமச்சந்திரன்]

காரணத்தாலே, காவல் துறை இந்த மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்களின் மேல், அலுவலகங்கள் மேல் ஏற்படுத்தப்படுகிற தாக்குதல்களை அவர்கள் கண்டுகொள்ளவில்லை என்ற முறையிலே, நடவடிக்கைகள் எடுப்பது என்பது மறைமுகமாக தீவிரவாதத்தைத் தெரிந்தோ, தெரியாமலோ காவல் துறை ஆதரிக்கிறது என்ற இடத்திற்குச் செல்லும். அந்த முறையிலே உள்ள நடவடிக்கைகளில் காவல் துறை அப்படிப்பட்ட ஒரு அலட்சியப் போக்குக் காட்டுவதை மாண்புமிகு முதல்வர் அவர்கள் நிச்சயமாக அனுமதிக்கக் கூடாது என்று நான் இந்த நேரத்திலே பணிவன்புடன் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

நான் ஏற்கெனவே ஆளுநர் உரையிலே பேசிய நேரத்திலேகூட, சில மாவட்டங்களிலே காவல் துறை பாரபட்சமாக இப்போது நடந்து கொண்டிருக்கிறது என்பது மட்டுமல்லாமல்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் சுருக்கமாகப் பேச வேண்டும். ஒரு பெரிய lecture மாதிரி, எங்கெங்கோ போய், பேசிக் கொண்டிருக்கிறீர்கள். இந்தச் சம்பவத்தைக் குறித்துப் பேசுங்கள்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** நான் முடித்துவிடுகிறேன். ஆகவே, காவல் துறையைப் பொறுத்தளவிலே, இப்படிப்பட்ட பாரபட்சமான முறையில் விஷயங்களை நடத்துகிற போக்கு அனுமதிக்கப்படக் கூடாது. கடலூரிலே நடந்த நிகழ்ச்சியைப் பொறுத்தளவிலே, தீர விசாரித்து தகுந்த நடவடிக்கை எடுத்து, குற்றவாளிகள் யாராக இருந்தாலும் அவர்கள் மேல் தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று பணிவன்புடன் கேட்டு அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர், எதிர்க்கட்சியினுடைய கொறடா ஞானசேகரன் அவர்களும், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினுடைய சட்டமன்றக் கட்சித் தலைவர் ஹேமச்சந்திரன் அவர்களும் எடுத்து வைத்துள்ள சிறப்பு கவன ஈர்ப்பின் மீது சில கருத்துக்களை நானும் கூற வேண்டியவனாக இருக்கிறேன். பொதுவாகச் சில செய்திகளை இருவரும் எடுத்துக் கூறி இருக்கின்றார்கள். இந்த விவாதத்தினுடைய நோக்கம் குறிப்பாக ஒன்றாக இருந்தாலும்கூட, இருவருடைய உரையும் பொதுவாக காவல் துறையைக் குற்றஞ்சாட்டுவது என்ற முறையிலே அமைந்திருந்தது. எல்லாவற்றிற்கும் காவல் துறையைப் பொறுப்பாக ஆக்கிவிட முடியாது என்பதையும் மறந்துவிடக் கூடாது. காவல் துறை ஒரு சில இடங்களிலே சில குறைபாடுகள் உடையதாக நடந்து கொண்டாலும், எல்லோரும்

நிறைவடையக்கூடிய அளவிலே காவல் துறை நடந்துகொண்ட பல்வேறு நிகழ்ச்சிகள் தமிழகத்தில் நடைபெற்று இருக்கின்றன என்பதை மறந்துவிடக் கூடாது. எத்தனையோ களவுகள் கண்டுபிடிக்கப்பட்டு, எத்தனையோ கொள்ளைகள் கண்டுபிடிக்கப்பட்டு, எத்தனையோ கொலைகள் கண்டுபிடிக்கப்பட்டு, வீர, தீரத்தோடு போராடி, தங்களுடைய உயிரைக்கூட திரணமாக மதித்து காவலர்கள் எந்த அளவிற்குப் பணியாற்றி இருக்கிறார்கள், பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள் என்பதையும் நாம் மறந்துவிடுவதிற்கில்லை.

முற்பகல் 10-45

அதே நேரத்திலே, ஒன்றிரண்டு இடங்களிலே நடைபெறுகின்ற குறைகளைச் சுட்டிக்காட்டுவதைத் தவறு என்று சொல்ல மாட்டேன். எதிர் வரிசையில் இருக்கின்றவர்களுக்கு, குறைகளைச் சுட்டிக்காட்டுவதுதான் கடமை. அவை எப்படி குறைகள் அல்ல என்றோ அல்லது குறைகள் இருந்தால் அவற்றை எப்படி நிவர்த்தி செய்வது என்றோ முடிவு செய்து அந்தப் பிரச்சினையைத் தீர்த்து வைப்பது என்பது ஆளுங்கட்சிக்குள்ள கடமை என்பதை நான் மறந்துவிடவில்லை.

இந்த நிகழ்ச்சியைப் பொறுத்தவரையில் இதற்குப் பின்னால் இருக்கின்ற ஒரு சிறிய வரலாற்றை நான் இங்கே எடுத்துக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கடலூர் மாவட்டம், திருப்பாப்புலியூர் மற்றும் கடலூர் பழைய நகர புகைவண்டி நிலையங்களுக்கிடையே உள்ள சூரப்பநாயக்கன் சாவடியில், 21-3-2000 அன்று இரவு 9-45 மணியளவில் இருப்புப் பாதையிலே குண்டு ஒன்று வெடித்ததில், ஒரு மீட்டர் நீளம் அளவிற்கு இருப்புப் பாதை சேதமடைந்தது. மேலும், சம்பவ இடத்திலிருந்து ஒரு வெடிக்காத குண்டு கண்டுபிடிக்கப்பட்டது. அங்கு கண்டெடுக்கப்பட்ட துண்டுப் பிரசுரங்களிலிருந்து, அமெரிக்க அதிபர் கிளின்டன் இந்தியாவிற்கு வருவதைக் கண்டித்தும், தமிழ்நாடு விடுதலைப் படை இயக்கத்தைச் சேர்ந்த லெனின் மறைந்த தேதியை நினைவுகூரும் வகையிலும், தமிழ்நாடு விடுதலைப் படையைச் சேர்ந்தவர்கள் இக்குண்டுகளை வைத்ததாகத் தெரிகிறது. இது சம்பந்தமாக திருப்பாப்புலியூர் காவல் நிலையத்தில் வழக்கு ஒன்றும் பதிவு செய்யப்பட்டுள்ளது.

சென்னையிலே இருந்து வந்த வெடிகுண்டு நிபுணர்கள் 23-3-2000 அன்று இரவு 8-00 மணியளவில் வெடிக்காத குண்டைச் செயலிழக்கச்



செய்தார்கள். குண்டு வெடிப்பில் எவருக்கும் காயமில்லை. காவல் துறை மற்றும் இரயில்வே துறையினரின் ஒருங்கிணைந்த விரைவு நடவடிக்கையினால், நான்கு மணி நேரத்திற்குள்ளாக இரயில் பாதை சரி செய்யப்பட்டு, போக்குவரத்து சீரானது.

புலன்விசாரணை, `Q' பிரிவு வசம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. தீவிர விசாரணையின் அடிப்படையில் குற்றம் புரிந்தவர்கள் அடையாளம் கண்டுபிடிக்கப்பட்டு அவர்களையும் அவர்களுடன் இணைந்து இந்தச் சதித் திட்டத்தில் ஈடுபட்டவர்களையும், அவர்களுக்கு ஆதரவு கொடுத்தவர்களையும் பிடிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

சுமார் 20 ஆண்டுகளாக பெரம்பலூர், கடலூர் மற்றும் சுற்றியுள்ள பகுதிகளில் தமிழ்நாடு விடுதலைப் படை என்ற இயக்கத்தினர் இடதுசாரி தீவிர கம்யூனிச சித்தாந்தத்தின் அடிப்படையில் சுய நிர்ணய உரிமை கோரி தீவிரவாத நடவடிக்கைகளில் அவ்வப்போது ஈடுபட்டு வந்துள்ளார்கள். 1987-ல் அரியலூர் இரயில் பாலத்திற்குக் குண்டு வைத்து இரயில் கவிழ்ப்பு ஏற்படுத்தி பல உயிர்கள் பலியானதற்குக் காரணமான இந்த இயக்கத்தினர் அதன் பின்னரும் அவ்வப்போது குண்டு வெடிப்புச் சம்பவங்களிலும், காவல் நிலையங்களைத் தாக்குவதிலும், கொள்ளைகளிலும் ஈடுபட்டு வந்தார்கள். 1986 முதல் 1996 வரை சுமார் 35 வன்முறைச் சம்பவங்களில் இப்பிரிவினர் ஈடுபட்டுள்ளார்கள்.

கடந்த இரண்டு ஆண்டுகளில் தமிழ்நாடு விடுதலைப் படையைச் சேர்ந்த முக்கியத் தலைவர்களும், உறுப்பினர்களும் கைது செய்யப்பட்டு, சிறையிலே அடைக்கப்பட்டுள்ளார்கள். காவல் துறையினர் நடவடிக்கை எடுக்கவில்லை என்று திரு. ஞானசேகரன் சொன்னார். இந்த இரண்டு ஆண்டுகளிலே மாத்திரம் அந்தப் படையினுடைய முக்கியத் தலைவர்கள், உறுப்பினர்கள் கைது செய்யப்பட்டு சிறையிலே அடைக்கப்பட்டிருக்கிறார்கள்.

சுமார் இருபது ஆண்டுகளாக தலைமறைவாக இருந்த சு (எ) சுந்தரம் என்பவர் கைது செய்யப்பட்டது இதில் குறிப்பிடத்தக்கது. இப்பிரிவினர் பலர் N.S.A. அல்லது குண்டர் தடுப்புச் சட்டத்தின் கீழும் தடுப்புக் காவலிலும் வைக்கப்பட்டுள்ளார்கள். இதுபோன்ற தீவிர நடவடிக்கைகளினால், கடந்த இரண்டு ஆண்டுகளாக இக்குழுவினரின் நடவடிக்கைகள் பெருமளவில் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரப்பட்டுள்ளன. இருந்தபோதிலும், தலைமறைவாக உள்ள ஒருசில நபர்கள் கடலூர் இரயில் தண்டவாளம் தகர்ப்பு போன்ற சம்பவங்களில் ஈடுபட்டுள்ளார்கள்.

சம்பவ இடத்திலே இருந்த துண்டுப் பிரசுரங்களில் இந்திய பொதுவுடமைக் கட்சி (மார்க்சிஸ்ட் லெனினிஸ்ட்) என எழுதப்பட்டிருந்ததால் மேற்படி வெடிகுண்டை வைத்தவர்கள் மார்க்சிஸ்ட் கட்சியினர்தான் எனத் தவறாகக் கருதி, சூரப்பநாயக்கன் சாவடியைச் சேர்ந்த பொதுமக்கள் ஒன்று கூடி, அப்பகுதியில் அமைந்துள்ள மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினுடைய தொழிற்சங்க அலுவலகத்தைத் தாக்கி அங்குள்ள பொருட்களைச் சேதப்படுத்தி, ஆவணங்களுக்கும் தீ வைத்தார்கள். மேலும், மேற்படி கும்பல், திருப்பாப்புலியூரிலே உள்ள மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்ட அலுவலகத்தையும் தாக்க முற்பட்டார்கள். காவல் துறை அதிகாரிகள், மேற்படி கும்பலைத் தடுத்து நிறுத்தி, வன்முறைச் சம்பவங்கள் மேலும் பரவாமல் தடுத்துவிட்டார்கள்.

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி தொழிற்சங்க அலுவலகம் தாக்கப்பட்டதன் தொடர்பாக, குற்ற எண். 227/2000 பிரிவு 147, 148, 448, 427, 435, 307 506(ii) மற்றும் 379 I.P.C.-ன் கீழ் சுமார் 100 நபர்கள் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டு, புலன்விசாரணை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

முற்பகல் 10-50

புலன் விசாரணையின்போது சூரப்பன்நாயக்கன் சாவடியைச் சேர்ந்த சுப்பிரமணி உள்ளிட்ட 8 பேர் இதுவரையிலே கைது செய்யப் பட்டுள்ளார்கள். தலைமறைவாக உள்ள மற்ற குற்றவாளிகளைக் கைது செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இதில் நடவடிக்கை எடுக்கப்பட்டும்கூட, இங்கே குறை சொல்லப்பட்டது. மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினுடைய அலுவலகத்தைக் குறி வைத்து ஏதோ ஆளுங்கட்சியின் சார்பாகத் தாக்குதல் நடைபெற்றதுபோன்ற ஒரு தோற்றத்தை நண்பர் ஹேமச்சந்திரன் இங்கே ஏற்படுத்தினார். அது முற்றிலும் தவறு. அதிலே உள்ள ஒரு தோழருடைய பெயரைக்கூட பத்திரிகையில் அடிக்கடி வெளியிட்டு ஏதோ ஆளுங்கட்சியைச் சேர்ந்தவர் என்பதைப்போலக் குறிப்பிடுகிறார்கள். குறிப்பிடப்படுகின்ற அந்தப் பெயருக்கு உரியவர் திராவிட முன்னேற்றக் கழகத்திலிருந்து இரண்டு ஆண்டுகளுக்கு முன்பே நீக்கப்பட்டவர் என்பதை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

அதுமாத்திரமல்ல, பொதுவாக, திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சிக்கும் விரோத மனப்பான்மை இருக்கிறது, அல்லது கொள்கை மாறுபாடு இருக்கிறது என்பதற்காக வேண்டுமென்றே





காவல் துறையினர் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினர் தாக்கப்படும்போது வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கிறார்கள், திராவிட முன்னேற்றக் கழகத்துக்காரர்களை விட்டுவிடுகிறார்கள் என்று சொன்ன குற்றச்சாட்டு ஆதாரம் அற்றது என்பதற்கு எத்தனையோ சான்றுகள் உண்டு. மறந்துபோய் இருக்கமாட்டீர்கள், மதுரை சம்பவத்தை. அப்போது மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின், மதுரை லீலாவதி கொலை செய்யப்பட்ட போது மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சிக்கும், திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் எந்த உறவும் ஒட்டும் கிடையாது. அப்போதும் பல வேறுபாடுகள் உண்டு. அந்த நேரத்திலே இதே அவையில், இதே இடத்தில் நின்று நான் சொன்னேன், குற்றவாளிகள் யாராக இருந்தாலும் கைது செய்யப்படுவார்கள் என்று. மறுநாளே திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் கைது செய்யப்பட்டு இப்போது அவர்களுக்கெல்லாம் தண்டனை விதிக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் ஏறத்தாழ தண்டனை விதிக்கப்பட்டிருக்கிற காலம் வரையில் ஜாமீனில்கூட விடப்படவில்லை என்பதையும் 3½ ஆண்டு காலம், 4 ஆண்டு காலம் அவர்கள் சிறைச்சாலையிலே இருந்து தண்டனையைப் பெற்று இருக்கிறார்கள் என்பதையும் நீங்கள் தெரிந்து கொள்ளும்போது திராவிட முன்னேற்றக் கழக அரசு பாரபட்சமாக நடந்து கொண்டிருக்கிறது என்று சொல்வதற்கு எந்தவிதமான முகாந்திரமும் கிடையாது.

ஒன்றை மறந்துவிட்டீர்கள். குடவாசல் நிகழ்ச்சி. குடவாசல் நிகழ்ச்சியிலே ஒரு கம்யூனிஸ்ட் தோழர் கொல்லப்பட்டார். கொன்றதற்குக் காரணம் அ.தி.மு.க.வினர். ஆனால், கொன்றதாகச் சொல்லப்பட்டவர் அ.தி.மு.க. மந்திரிகளுடைய காரிலே சென்னையைச் சுற்றி வலம் வந்தார். அதை இங்கேயே கம்யூனிஸ்ட் கட்சித் தோழர்கள் எடுத்துக்கூறியபோது எவ்வளவு பெரிய ரகளை இந்த சட்டசபையில் கடந்த கால ஆட்சியிலே நடைபெற்றது என்பதை நானும் அறிவேன், நாடும் மிக நன்றாக அறியும். அப்படிப்பட்டவர்களோடு நீங்கள் உறவுகொள்கிறீர்கள். ஆனால், தயவு தாட்சண்யம் இல்லாமல், யாராக இருந்தாலும், கட்சி சார்பில்லாமல், அதைப்பற்றிக் கவலைப்படாமல் நீதி வழி நடக்கின்ற எங்கள்மீது மாத்திரம் குறை கூறிக்கொள்கிறீர்கள். என்ன காரணம் என்று எங்களுக்குத் தெரியவில்லை. இருந்தாலும் நீங்கள் என்னதான் சொன்னாலும் நாங்கள் எங்கள் வழியில், நல்ல வழியில், நீதி வழியில், அற வழியில் நடப்போம் என்பதை மாத்திரம் இங்கே எடுத்துக்கூறி, இந்தப் பிரச்சினையைப் பொறுத்தவரையில் சம்பந்தப்பட்ட குற்றவாளிகள்மீது நிச்சயமாக நடவடிக்கை எடுக்கப்படும் என்று கூறி, இந்த அளவில் அமைகிறேன். வணக்கம்.

[2000 மார்ச் 31

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. (குறுக்கீடு)

## 3. தகவல் கோரல்

### பரம்பிக்குளம்-ஆழியாறு அணைத் தண்ணீர் கேரளாவிற்குக் கொடுத்தல்

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 450 டி.எம்.சி. தண்ணீர் கேரளாவிற்குக் கொடுத்திருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஞானசேகரன், நீங்கள் உட்காருங்கள் முதலில். (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள். இந்தத் தகவல் எப்போது உங்களுக்குத் தெரியும், (குறுக்கீடு) உட்காருங்கள் இந்தத் தகவல் எப்போது உங்களுக்குத் தெரியும்? (குறுக்கீடு) இன்று காலை செய்தித்தாளில் படித்தீர்கள். அரை மணி நேரம் என் அறையில் இருந்தீர்கள். ஏன் என்னிடம் எதுவும் கேட்கவில்லை? (குறுக்கீடு) நான் மைக் கொடுக்கமாட்டேன்.

**திரு. சி. ஞானசேகரன்:** ஒரே ஒரு நிமிடம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரை மணி நேரம் என்னுடைய அறையில் இருந்தீர்கள். இன்று காலையில் செய்தித்தாளில் வந்தது என்கிறீர்கள். அப்போது ஏன் கேட்கவில்லை?

**திரு. சி. ஞானசேகரன்:** இன்று காலைதான் செய்தித்தாளில் படித்தேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்று காலையில் செய்தித்தாளில் படித்தேன் என்கிறீர்கள். இது எவ்வளவு முக்கியமான சமாச்சாரம். 450 டி.எம்.சி. தண்ணீர்ப் பிரச்சினை என்று என்னிடம் சொல்லியிருந்தால், அப்போதே நான் முதலமைச்சரிடம் கேட்டிருப்பேன். நீங்கள் முதலமைச்சரிடம் குசலம் விசாரித்துக் கொண்டிருந்தீர்கள். செய்தித்தாளைப் படித்துவிட்டு அதை ஏன் கேட்கவில்லை?

**திரு. சி. ஞானசேகரன்:** Late ஆக paper-லே படித்தேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** Late ஆக ஏன் paper படிக்கிறீர்கள்? காலையில் எழுந்தவுடன் paper படிக்கும் பழக்கமே கிடையாதா?

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது முக்கியமான subject, அனுமதி கொடுங்கள். விளக்கமாகச் சொல்கிறேன்.



2000 மார்ச் 31]

(உட்கார்ந்து கொண்டே திரு. மு. அப்பாவு கொஞ்சம் அனுமதி கொடுங்கள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நிச்சயமாக இது வேறு எங்கோ போய் முடியப்போகிறது. அதற்கு நான் பொறுப்பில்லை. அவ்வளவுதான் நான் சொல்வேன். நான் ரொம்ப மரியாதையோடு த.மா.கா.வினருக்குச் சொல்கிறேன். இது எங்கோ போய் முடியப்போகிறது. அதற்கு நான் பொறுப்பில்லை. திரு. ஞானசேகரன், பேசுங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று காலை நானும் திரு. சுப்பராயன் அவர்களும் பேசிக்கொண்டிருக்கும்போது (குறுக்கீடு) வேறு ஒரு subject பற்றிப் பேசும்போது, paper-லே வந்த செய்தியை படித்தேன். நேற்று கேரளாவினுடைய முதலமைச்சர் மாண்புமிகு நயினார் அவர்கள் (சிரிப்பு)– நாயனார் அவர்கள் . . .

*முற்பகல் 10-55*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் ஒரு கருத்தைச் சொல்கிறேன். நாங்கள் எல்லாம் பெரியாறு பாசனத்திலே குடியிருக்கிறவர்கள். உங்களுக்கும் அதற்கும் சம்பந்தம் கிடையாது. ஏதாவது ஒன்று கிடக்க ஒன்று பேசி, பெரியாற்றுக்கு 152 அடி வருவதையும் கெடுத்து விடாதீர்கள். பேசாமல் உட்காருங்கள். (குறுக்கீடு) சரி, பேசுங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்று சட்டப் பேரவையிலே கேரளத்தினுடைய முதல்வர் அவர்கள் ஏற்கெனவே தமிழ்நாடு அரசு பல பேச்சுவார்த்தைகள் சென்னையிலே அதிகாரிகள் மட்டத்திலும் அமைச்சர் மட்டத்திலும் நடத்தி, பரம்பிக்குளம்-ஆழியாறிலிருந்து 450 T.M.C.. தண்ணீரைக் கொடுப்பதற்கு தமிழக அரசு இசைந்துள்ளது என்கின்ற ஒரு தகவலை சொல்லியிருக்கிறார்கள். அங்கே சந்திரன் என்ற சட்டமன்ற உறுப்பினர் இந்தப் பிரச்சினையை எழுப்பி, பாலக்கோடு பகுதியிலுள்ள சித்தூர் areaவுக்கு வேளாண்மைக்காக தண்ணீர் விடுவதற்காக நாங்கள் பலமுறை பேச்சுவார்த்தைகள் நடத்தினோம். 1989 ஆம் ஆண்டே ஒரு ஒப்பந்தம் போட்டிருக்கவேண்டும், புதுப்பிக்கப்பட்டிருக்கவேண்டும், அது புதுப்பிக்கப்படவில்லை. இருந்தாலும் இப்போது பேச்சுவார்த்தையில் 450 T.M.C. கொடுக்க தமிழக அரசு ஒத்துக்கொண்டிருக்கிறது என்று சொல்லியிருக்கிறார். இங்கே தண்ணீர்ப் பிரச்சினை இந்த அளவிற்கு கொடி கட்டிப்பறக்கிறபோது, அரசு 450 T.M.C. தண்ணீரைக் கொடுக்க இசைவு தெரிவித்திருக்கிறதா?

அப்படி ஒரு பேச்சுவார்த்தை நடந்ததா? தமிழ்நாட்டு மக்கள் கதி என்ன ஆவது என்பது குறித்து நான் மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கவனத்திற்குத் தங்கள் வாயிலாகக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என் வாயிலாக இனிமேல் முறையாகக் கொண்டுவர வேண்டும். இல்லாவிட்டால், கண்டிப்பாக நடவடிக்கை எடுப்பேன். நான் பலமுறை சொல்லிவிட்டேன். இது தவறான நடவடிக்கை. இது குறித்து நாடு பூராவும் காலையில் பத்திரிகையில் வந்திருக்கிறது. 9 மணிக்கு என் அறைக்கு வந்து 9½ மணி வரையிலே என் அறையிலேதான் இருந்தீர்கள். அப்போது இதுபற்றி ஒன்றும் குறிப்பிடவில்லை அப்படியென்றால், உங்கள் கடமையை ஒழுங்காகச் செய்யவில்லை என்றுதான் அர்த்தம். இப்படியே தொடர்ந்து செய்தால், அது இடையூறு. சட்டமன்றத்தில் நீங்கள் இடையூறு விளைவிப்பதாகக் கருதி, நான் நிச்சயமாக உங்கள் மீது நடவடிக்கை எடுப்பேன். மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர்.

*** மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நானும் காலையிலே இந்தச் செய்தியைப் பார்த்தேன். தவறாக வெளியிட்டிருக்கிறார்கள் என்றுதான் கருதுகிறேன். "தமிழகத்திலே உள்ள பரம்பிக்குளம்-ஆழியாறு திட்டத்திலிருந்து 450 T.M.C. நீரை கேரளத்திற்கு விடுவிக்க தமிழகம் இசைந்துள்ளது. இதைக் கேரள முதல்வர் இ.கே. நாயனார் அம்மாநில சட்டப் பேரவையில் வியாழக்கிழமை அறிவித்தார்" என்று வந்திருக்கிறது. அப்படிச் சொல்லியிருக்க முடியாது, கேரள மாநிலத்து முதல்வர். காரணம், 450 T.M.C.. தமிழ்நாட்டிலுள்ள அணைகளை எல்லாம் சேர்த்தால் கூட கிடைக்காது. பரம்பிக்குளத்தினுடைய மொத்தக் கொள்ளளவு 30½ T.M.C. தான். அதிலேகூட, ஆனைமலையாறு போனால் 28½ T.M.C. தான். அதிலே என்ன பிரச்சினை என்றால், கேரளாவுக்கு நாம் ஆழியாற்றிலிருந்து ஒவ்வோர் ஆண்டும் 7.25 T.M.C. கொடுக்கவேண்டும் அதிலே 7 T.M.C. கொடுத்துவிட்டோம். இன்னும் கொஞ்சம் தண்ணீர் கொடுக்க வேண்டும். பாசனம் இல்லை, அதனாலே 450 கியூசெக்ஸ் ஆக உயர்த்திக் கொடுங்கள்—நாம் 150, 120 கியூசெக்ஸ் தான் விடுவோம்—கொஞ்சம் அதிகமாக 450 கியூசெக்ஸ் கொடுங்கள் என்று கேட்டார்கள். அதை என்ஜினியர்கள் அளவிலே பேசி முடித்துக்கொண்டார்கள். அதனாலே 450 கியூசெக்ஸ் விட இசைந்தது என்பதைத்தான் தவறாக பத்திரிகைகள் 450 T.M.C. என்று போட்டிருக்கிறார்கள். எனவே, அது தவறான செய்தி. கேரளத்து முதல்வர் அப்படிச் சொல்லியிருக்க முடியாது.



## 4. அறிவிப்பு

### தமிழ்நாடு நில மேம்பாட்டு வாரிய மேலாண்மைக் குழுவிற்கான உறுப்பினர்கள் தேர்வு குறித்து

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள். உங்களுக்கு அனுமதி கொடுக்கவில்லை. (குறுக்கீடு) நீங்களும் உட்காருங்கள்.

தமிழ்நாடு நில மேம்பாட்டு வாரிய மேலாண்மைக் குழுவிற்கான மூன்று உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டுமென கோரிக்கை வரப்பெற்றுள்ளது.

உறுப்பினர்களின் பதவிக்காலம் தேர்ந்தெடுக்கப்பட்ட நாளிலிருந்து 3 ஆண்டுகள். தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர் ஏதாவது ஒரு காரணத்திற்காகப் பேரவை உறுப்பினர் பதவியை இழக்க நேரிட்டால் அந்த நாளோடு அவருடைய உறுப்பினர் பதவியும் முடிவடையும்.

நியமனத் தாள்கள் வேண்டுவோர் பேரவைச் செயலாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

வேட்பு மனுத் தாக்கல் செய்ய கடைசி நாள் 04-04-2000 (செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3-00 மணி.)

வேட்பு மனுக்கள் பரிசீலனை 06-04-2000 (வியாழக்கிழமை பிற்பகல் 3-00 மணி.)

வேட்பு மனுக்களைத் திரும்பப் பெறுதல் 07-04-2000 (வெள்ளிக்கிழமை பிற்பகல் 3-00 மணி.)

தேர்தல் நாள், தேவையிருப்பின் 10-04-2000 (திங்கட்கிழமை காலை 10-00 மணி முதல் பிற்பகல் 1-30 மணி வரை.)

## 5. அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்)

### தமிழ்நாடு பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2000

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்) 2000 ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

[2000 மார்ச் 31

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2000 ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்"
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

## 6. வரவு-செலவுத் திட்டம், 2000-2001, பொது விவாதம்—தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2000-2001 ஆம் ஆண்டுக்கான நிதி நிலை அறிக்கையின்மீது பொது விவாதம், டாக்டர் அ. செல்லக்குமார். (குறுக்கீடு) நான் அனுமதி கொடுக்கவில்லை. என்னிடம் வந்து கேட்டீர்கள். அனுமதி கொடுக்க முடியாது, என்று சொல்லிவிட்டேன், உட்காருங்கள். டாக்டர் அ. செல்லக்குமார்.

முற்பகல் 11-00

**டாக்டர் அ. செல்லக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"பழுதெண்ணும் மந்திரியிற் பக்கத்துள் தெவ்வோர்
எழுபது கோடி உறும்"

என்று அய்யன் வள்ளுவர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். தவறான வழிமுறைகளைச் சிந்தித்துச் செயல்படுகிற அமைச்சர் ஒருவர்



நிர்வாகத்திலே இருப்பார் என்று சொன்னால், அதைவிட 70 கோடி எதிரிகள் பக்கத்தில் இருப்பது எவ்வளவோ மேல் என்று அய்யன் வள்ளுவர் அவர்கள் பல ஆண்டுகளுக்கு முன்னால் இங்கே கூறி வைத்துவிட்டுச் சென்றிருக்கிறார்கள்.

நான், கடந்த ஆளுநர் உரைமீது, இந்த மன்றத்திலே பேசுகின்றபோது மிகத் தெளிவாகச் சொல்லியிருக்கிறேன். நீண்ட நெடுங்காலமாக, தமிழகத்தினுடைய மூலை முடுக்குகள்தோறும் பேசப்பட்ட, அனைவருக்கும் தெரிந்த, அந்த கொடைக்கானல் நகர விதிமுறைகள் தளர்த்தப்படக்கூடாது என்பது தெரிந்தே, ஒரு தவறு இப்போது இந்த அரசிலே நடந்திருக்கிறது. அந்தத் தவறுக்குக் காரணமானவர்கள் யாராக இருந்தாலும், அவர்கள் தண்டனைக்கு ஆட்பட்டாக வேண்டுமென்று நான் இந்த மன்றத்திலே சொன்னேன். முதலமைச்சர் அவர்கள்கூட பேசும்போது, இது மலைக்கும் மடுவுக்கும் உள்ள வேறுபாடு என்றும், நான் இரண்டு அதிகாரிகள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுத்திருக்கிறேன் என்றும் சொன்னார்கள். நான் ஒன்றைச் சுருக்கமாகச் சொல்ல விரும்புகிறேன். இதிலே நகர விதிமுறைகளைத் தளர்த்தியது என்பது அடிப்படைக் கொள்கையையே தளர்த்தியது. மக்கள் அமைதியான சூழ்நிலையில் குடியிருக்க வேண்டும் என்பதற்காக உருவாக்கப்பட்ட, அதற்கென்று ஒதுக்கப்பட்ட இடத்தில் அந்த அமைதியைச் சீர்குலைப்பதற்காக, அந்த இடத்தை வணிகத்திற்காக மாற்றுதல் செய்வது என்பது அடிப்படைத் தவறு என்பதை முதலமைச்சர் அவர்கள் ஒத்துக்கொள்வார்கள். கடந்த ஆட்சியில் தவறு நடந்தது. அதிலே நடந்த தவறு, வணிக வளாகத்திற்கென்று ஒதுக்கப்பட்ட இடத்தில், அதிலே இரண்டு மாடிகளுக்கு மேல் கட்டப்பட்டது என்பதற்காக, அதற்கே நீதிமன்றத்திலே வழக்குத் தொடுக்கப்பட்டு இருக்கிறது, தண்டனை பெறப்பட்டிருக்கிறது. இங்கே அடிப்படையிலேயே ஒரு மனிதனுடைய அமைதியைச் சீர்குலைக்க வேண்டுமென்று திட்டமிட்டு அரசு அதிகாரிகள் யாருடைய தூண்டுதலின் காரணமாகவோ அந்த உத்தரவைப் பிறப்பித்திருக்கிறார்கள். அதிலே ஒரு அரசாணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. நான் அன்றைக்கே முதலமைச்சர் அவர்களிடம் கேட்டேன், அமைச்சருடைய ஒப்புதல் இல்லாமல் நிர்வாகத்திலே ஒரு அரசாணை பிறப்பிக்கப்படுவதற்கு வழி இருக்கிறதா என்பதை முதலமைச்சர் அவர்கள் இந்த மன்றத்திற்கு விளக்க வேண்டும்.

அதுபோலத்தான்—எனக்குப் புரிகிறது — முதலமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பதற்கு தயக்கம் காட்டுகிறார்கள். எய்தவன் [illegible] இருக்க அம்பை நோவதிலே அர்த்தம் இல்லை என்பதை முதலமைச்சர் [illegible]

V21,31 (Pro) P08.72.2

அவர்கள் உணர்ந்து கொண்டார்கள். எனவேதானோ என்னவோ தெரியவில்லை, ஊழலை, அதிகார துஷ்பிரயோகத்தை இப்போது பச்சைக் கொடி காட்டி அதற்கு ஆதரவுக் கரம் நீட்டுகின்ற முயற்சியில் முதலமைச்சர் அவர்களும் உறுதுணையாக இருந்து விட்டாரோ என்று நான் ஐயப்படுகிறேன். அதைச் சுருக்கமாகச் சொன்னால், கிராமப்புறத்திலே சொல்வது போல பாலுக்கும் காவல், பூனைக்கும் தோழனாக இந்த அரசு இப்போது செயல்பட்டுக் கொண்டிருக்கிறது என்று நான் குற்றம்சாட்ட விரும்புகிறேன்.

முதலமைச்சர் அவர்கள், இந்தக் கோப்புகளில் தவறு நடைபெறவில்லை என்று சொன்னால் - - இதே முதலமைச்சர் அவர்கள் 20 ஆண்டுகளுக்கு முன்பு முதலமைச்சராக இருந்த காலகட்டத்தில், மன்றத்தில் எதிர்க்கட்சிகளால் இதுபோன்ற ஒரு குற்றச்சாட்டு வந்தபோது, அன்றைக்கு அமைச்சராக இருந்த ப.உ.சண்முகம் அவர்கள் மீது குற்றச்சாட்டு வந்தபோது, எதிர்க்கட்சிகளினுடைய கோரிக்கையை ஏற்று, அந்தக் கோப்புகள் அனைத்தையும், அன்றைய சபாநாயகர் அவர்களிடம் ஒப்புவித்து எதிர்க்கட்சிகள் அதைப் பார்வையிடுகின்ற ஒரு வாய்ப்பினை உருவாக்கிக் கொடுத்தார்கள். அதை நான் மீண்டும் இங்கே நினைவுபடுத்த விரும்புகின்றேன். அதேபோல - - இதிலே அமைச்சருக்குச் சம்பந்தம் இல்லை என்றும், அதிலே அவர் எந்தவிதத்திலும் தலையிடவில்லை என்றும் முதலமைச்சர் அவர்கள் நம்புவார்கள் என்று சொன்னால், அவரது மனசாட்சி ஒத்துக்கொள்ளும் என்று சொன்னால், அதுபோன்று அந்தக் கோப்புகள் அனைத்தையும் சபாநாயகர் அறையிலே கொடுத்து, எதிர்க்கட்சி சட்டமன்ற உறுப்பினர்கள் பார்க்கின்ற, வாய்ப்பினை உருவாக்கித்தர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11-05

இந்த நிதிநிலை அறிக்கையோடு 5-வது ஆண்டாக இந்த அரசினுடைய நிதிநிலை அறிக்கை வந்திருக்கிறது. 4 ஆண்டு காலத்திலும் பரவலாகப் பேசப்பட்ட கிருஷ்ணா நதிநீர் ஏப்ரல் திங்கள் 15 ஆம் தேதி சென்னைக்கு வருமென்று சொல்லியிருக்கிறார்கள். நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை மீண்டும் கேட்டுக்கொள்வது, ஒப்பந்தத்தின் அடிப்படையில் ஸ்ரீசைலத்தில் இருந்து சோமசிலா. அங்கே கால்வாய் வெட்டப்பட்டு, அந்த சோமசிலத்திலிருந்து, கண்டலேறு அணைக்குத் தண்ணீர் வந்து, அதன்மூலமாக கிருஷ்ணா நீர் தமிழகத்திற்கு, சென்னைக்கு வருகின்ற வாய்ப்பு ஏப்ரல் திங்கள் 15-ம் தேதிக்குள் உருவாக்கப்படுமா என்பதை அமைச்சர் அவர்கள் இங்கே விளக்கமாகச் சொல்ல வேண்டும். ஏன் என்று சொன்னால், நாம் நிதி கொடுத்து இருக்கிறோம். கோடிக்கணக்கான



ரூபாய் நிதி கொடுத்து இருக்கின்றோம். எனவே, அதைக் கேட்கின்ற உரிமை நமக்கு இருக்கின்றது. கடந்த காலத்திலே 3 ஆண்டு காலத்திற்கு முன்னால் வெள்ளிக் குடத்தில் பரிமாற்றம் செய்து கொள்ளப்பட்டிருந்தபோது, அங்கே அமைச்சர் அவர்களும், ஆந்திரா அமைச்சர் அவர்கள்—அங்கே இருக்கின்ற தலைமைச் செயலாளர் அவர்களும் பத்திரிகைகளில் எல்லாம் செய்தி கொடுத்திருக்கிறார்கள். என்ன சொல்கிறார்கள் என்று சொன்னால், ராயல்சீமா பகுதியில் கடுமையான மழை பெய்து கொண்டிருக்கிறது. எனவே, எங்களால் கால்வாய் வெட்ட முடியவில்லை. மழை நின்றதும் நாங்கள் கால்வாய் வெட்டுவோம் என்று சொல்லியிருக்கிறார்கள். உலகிலேயே அதிகமாக மழை பொழிகின்ற இடம் சிரபுஞ்சி என்றுதான் நினைத்துக் கொண்டிருக்கிறேன். ஒருவேளை ராயல்சீமா பகுதி இரண்டாம் சிரப்புஞ்சியாக இங்கே உருவாகிவிட்டதோ என்று தெரியவில்லை. அதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்க வேண்டும். ஏனென்று சொன்னால் 3 ஆண்டு காலமாக அந்தக் கால்வாய் வெட்டப்படவில்லை என்று சொன்னால், அதற்கு யார் பொறுப்பை ஏற்றுக் கொள்வது? இந்த அரசு பொறுப்பை ஏற்க வேண்டும். அதை வெட்டுகின்ற பணியினை முடித்துக் கொடுப்பதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆந்திர அரசோடு கடுமையாக முயற்சி செய்து பெற்றுத் தரவேண்டும் என்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஸ்ரீசைலத்திலிருந்து பூண்டி வரையிலே கால்வாய் வெட்டவில்லை என்று சொல்கிறாரா? எந்த எந்த இடத்திலே வெட்டவில்லை, எங்கு கால்வாய் வெட்டியிருக்கிறார்கள் என்று சொல்கிறார்கள்? தலைவர் அவர்களே, கொஞ்சம் அவகாசம் கொடுத்தால் நான் விவாதத்திற்குத் தயாராக இருக்கிறேன். எந்த எந்த இடத்தில் இருந்து கால்வாய் வெட்டவில்லை என்று சொல்கிறார்கள்?

**டாக்டர் அ. செல்லக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஸ்ரீசைலத்தில் இருந்து சோமசிலா வழியாக கண்டலேறு அணைக்கு கிருஷ்ணா நீர் வரவேண்டும். அதற்குக் கால்வாய் வெட்டப்பட்டிருக்கவேண்டும். இந்த ஸ்ரீசைலம் பகுதியில் இருந்து சோமசிலா பகுதி வரையில் ஏறத்தாழ 25 கி.மீ. அளவிற்கு கால்வாய் வெட்டப்படவில்லை என்று பத்திரிகைகளில் பாமர மக்கள் உட்பட அத்தனைபேரும் பார்க்கிற அளவிற்கு அறிந்துகொள்ளும் வண்ணம் செய்திகள் வந்திருக்கின்றன. இதை அமைச்சரும் படித்திருப்பார் என்று நான் நம்புகிறேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைத்தான் நானும் சொல்கிறேன். ஸ்ரீசைலம், சோமசிலா பகுதி வரையில் உள்ள கால்வாய் வெட்டவில்லை என்று சொல்கிறார்கள். ஏனென்று கேட்டால் பத்திரிகையில் செய்தி வந்திருக்கிறது என்று சொல்கிறார்கள். பத்திரிகை செய்திகளை எல்லாம் நீங்கள் ஆதாரமாக எடுத்துக்கொள்ளக்கூடாது. அந்தச் செய்திக்கு பொறுப்பேற்றுக் கொண்டு பேசி வருகிறீர்களா, நானும் பொறுப்பேற்றுக் கொண்டு பேச வருகிறேன். அந்தப் பத்திரிகையிலே எழுதியிருக்கிறார்கள் நமது பங்கை தரவில்லை என்று ஆந்திர அதிகாரிகள் சொல்கிறார்கள். அதனாலே அந்த அதிகாரிகள் தயக்கம் காட்டுகிறார்கள் என்று தமிழ்நாட்டின் பங்கை நாம் அளித்து 3 ஆண்டுகள் ஆகின்றன என்பதை இதன் மூலம் தெரிவித்துக்கொள்கிறேன். அதுதெரியாமலேகூட அந்தப் பத்திரிகை எழுதுகிறது பத்திரிகையில், வெளியில் என்ன எழுதுகிறார்கள் என்று எல்லாம் பார்க்கக்கூடாது பத்திரிகை செய்திகளுக்கு பொறுப்பேற்று இந்த மன்றத்தில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லத் தயாரா?

**டாக்டர் அ. செல்லக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆளுநர் உரையில் பேசுகின்றபோது மிகத் தெளிவாகக் கேட்டு இருக்கிறார்கள். இந்தச் செய்தி வந்திருக்கிற நேரத்தில் இந்தச் செய்தி உண்மையா என்பதைக் கண்டறிவதற்காக சட்டமன்ற உறுப்பினர் குழு ஒன்று அமைத்து அந்த இடத்திற்கு அழைத்துச் செல்வதற்கு . . . .

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** முடியாது. நான் பொறுப்புள்ள அமைச்சர். இந்த அவையில் சொல்கின்ற வார்த்தை ஒவ்வொன்றும் உண்மையாக இருக்கவேண்டும். இந்த இடத்தில் நான் தவறு செய்தால் என்மீது Privilege Motion கொண்டு வரலாம். என்னை நம்பாமலே, வாருங்கள் என்று சொல்லி தங்களை உல்லாசப் பயணத்திற்கு அழைத்துச் செல்லத் தயாராக இல்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு அக்கறை இருக்குமானால் ஸ்ரீசைலத்திலிருந்து கால்நடையாக பூண்டிக்கு வந்து, எந்த எந்த இடத்தில் கால்வாய் வெட்டவில்லை என்று சொல்லட்டும். எந்த இடம்?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ச. அழகிரி.

**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 4 ஆண்டு காலமாக நீர் வரும், வரும் என்று சொல்கிறார்கள். தண்ணீர் வரவில்லை. வந்த நீர், மழை நீர் என்று பத்திரிகைகளில் செய்திகள் வருகின்றன.



**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் திருப்பித் திருப்பி உண்மைக்கு மாறான ஒரு தகவலை சொல்கிறார். கிருஷ்ணா நீர் சென்னைக்கு வரவில்லை என்று சொல்கிறார். கிருஷ்ணா நீர் சென்னைக்கு வரவேயில்லை என்று சொல்கிறாரா. மாண்புமிகு அழகிரி, இதில் பொறுப்பேற்றுக் கொள்கிறாரா?

முற்பகல் 11-10

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இந்தப் பிரச்சினைபற்றி பல மணி நேரம் விவாதிக்கப்பட்டுவிட்டது. இன்னும் சொல்லப் போனால், பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் என் அறைக்கு வந்து, "தேவையில்லாமல் தினமும் பல பேர் இந்த மாதிரிப் பேசிக்கொண்டு வருகிறார்கள். நீங்கள் ஒரு provision-லே Half-an-hour discussion வைத்துக் கொள்ளுங்கள்; நான் எந்தக் கேள்விக்கும் பதில் சொல்வதற்குத் தயாராக இருக்கிறேன்" என்று சொல்லியிருக்கிறார்கள். ஆகையால், அவர் இதிலே மிகவும் தெளிவாக இருக்கிறார். நீங்கள் அதற்கு மேலும் வெட்டியாகப் பேசிக்கொண்டு இருப்பது எதற்கு என்று எனக்கு ஒன்றும் அர்த்தம் புரியவில்லை. உங்களை அமைச்சர், கிருஷ்ணா நீர் இதுவரைக்கும் வந்திருக்கிறதா, இல்லையா என்று கேட்கிறார். அதற்கு நீங்கள் என்ன பதில் சொல்லப்போகிறீர்கள்?

**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு சட்டமன்ற உறுப்பினர் வெட்டியாக எதையும் பேசுவதாக நான் கருதவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டியாகப் பேசுவது என்றால், மாற்றுக் கருத்து சொல்லிக்கொண்டே இருக்கிறீர்கள். அவர் மறுத்துக்கொண்டே இருக்கிறார். அதைத்தான் நான் சொல்கிறேன் உங்களுக்கு. நீங்கள் பொறுப்போடு இதை ஏற்றுக்கொள்ள முடியுமா? எந்த இடத்திலே வாய்க்கால் வெட்டப்படவில்லை; இதுவரைக்கும் கிருஷ்ணா தண்ணீர் வந்திருக்கிறதா, இல்லையா? இதற்குப் பதில் சொல்லுங்கள். நான் பொறுப்பேற்றுக்கொள்கிறேன் என்கிறார். இப்போது நீங்களே ஆரம்பித்துவிட்டு, வந்தது மழைத் தண்ணீர் என்கிறீர்கள்; இல்லை, கிருஷ்ணா நீர் வந்திருக்கிறது என்று அவர் சொல்கிறார். அதற்கு நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?

**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிரச்சினையே அங்கேதான் எழுகிறது. எதிர்க்கட்சிகள், மழைத் தண்ணீர் வந்திருக்கிறது என்று பத்திரிகைகள் மூலமாக வந்த செய்தியை வைத்து

நாங்கள் சொல்கிறோம். ஏனென்றால், எங்களுக்கு இருக்கிற செய்தி அதுதான். எங்களுக்கு அதற்குமேல் செய்திகள் கிடைப்பதற்கு வாய்ப்பு கிடையாது. (மணியடிக்கப்பெற்றது) நான் சொல்லிவிடுகிறேன்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கொஞ்சம் உட்காருங்கள். இது பல நூறு கோடி ரூபாய் பிரச்சினை. மாண்புமிகு உறுப்பினர், அழகிரி போன்ற உறுப்பினர், ஒரு பொறுப்பான உறுப்பினர், செய்திகளைத் தெரிந்துகொள்வதற்கு எங்களுக்கு வாய்ப்புக் கிடையாது என்று சொல்வது எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது. என்னைப் பொறுத்தவரைக்கும், எந்தப் பத்திரிகையிலே செய்தி வந்தாலும், பத்திரிகைகள் அரசியல் ரீதியான பத்திரிகைகள்தான். நீங்கள் வேண்டுமானால் சில பத்திரிகைகளை நடுநிலைப் பத்திரிகை என்று சொல்லலாம். அதை நான் ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லை. உங்களுக்கு என்ன கஷ்டம், நீங்கள் நேரில் சென்று பார்த்துவிட்டு வருவதற்கு? செலவிற்குப் பணம் இல்லையா?

**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களை அனுப்பி வைப்பதற்கு அரசாங்கத்திடம் பணம் இல்லையா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எதற்காகக் கொடுக்க வேண்டும்? உங்களுக்குச் சந்தேகம் இருந்தால் நீங்கள்தானே போய்ப் பார்த்துவிட்டு வரவேண்டும்? அதாவது, மாண்புமிகு அமைச்சர் தெளிவாக இருக்கிறார். இதுவரைக்கும் அவர் சொன்னதிலே எந்தத் தப்பு இருந்தாலும், இந்தப் பிரச்சினையை உரிமைக் குழுவிற்கு அனுப்புங்கள்; தனக்குத் தண்டனை கொடுங்கள்; அவர் அமைச்சராகக்கூட இல்லை என்கிறார். நீங்கள் அதற்குப் பொறுப்பேற்றுக்கொண்டு, அவர் சொல்வது தப்பு என்று சொல்லுங்கள். கிருஷ்ணா நீர் வந்திருக்கிறதா, இல்லையா என்று சொல்லுங்கள்.

**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிரச்சினையே அங்குதான் இருக்கிறது. நீங்கள் சொன்ன நேரத்தில் அந்தத் தண்ணீர் வந்திருந்தால் பிரச்சினையில்லை. நீங்கள் 1996-97 என்று சொன்னீர்கள். அப்போது நாங்கள் இதைக் கேட்கவில்லை. 1997-98 என்று சொன்னீர்கள்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. அப்பொழுது தோழமைக் கட்சியாக இருந்தீர்கள். இப்போது எதிர்க்கட்சியாகிவிட்டீர்கள்.

**திரு. ச. அழகிரி:** தோழமைக்கட்சியாக இருந்தபோதும் எதிர்த்தும் இருக்கிறோம், ஆதரித்தும் இருக்கிறோம். இப்போதும் முதலமைச்சருடைய பல திட்டங்களை ஆதரிக்கிறோம். (குறுக்கீடு)



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்ன, உங்கள் கட்சி உறுப்பினர் நிற்கிறார். நீங்கள் பின்னாலே பேசுகிறீர்கள்?

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலிலே கிருஷ்ணா தண்ணீர் வரவில்லை என்கிறார். அடுத்து என்ன சொல்கிறார் என்றால், சொன்ன நேரத்திலே வரவில்லை என்கிறார். அப்படியானால், ஒத்துக்கொள்கிறார். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் கொஞ்சம் இருங்கள். (குறுக்கீடுகள்) தயவு செய்து எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) தயவு செய்து எல்லோரும் உட்காருங்கள். நான் பேரவைத் தலைவர் என்ற முறையிலே, நானே ஒரு கோரிக்கை வைக்கிறேன். இதற்குத் தனி விவாதம் நடத்த அனுமதி தர நான் தயாராக இருக்கிறேன். நீங்கள் என் அறையிலே வந்து, அல்லது அடுத்த அலுவல் ஆய்வுக் குழுவிலே நாம் பேசி முடிவு செய்யலாம். ஏனென்றால், நீங்கள் இரண்டு பேரும் மாறுபட்ட கருத்து சொல்கிறீர்கள். என்னைப் பொறுத்த அளவில், இரண்டு பேரும் மரியாதைக்குரியவர்கள். வேண்டுமென்றே பொய்க் கருத்து சொல்வதாக என்னால் ஏற்றுக்கொள்ள முடியாது. அதனால் இந்தப் பிரச்சினையை இத்தோடு விட்டுவிடுங்கள். தனி விவாதத்திற்கு நான் அனுமதிக்கிறேன்.

**டாக்டர் அ. செல்லக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதே அவையிலே அமைச்சர் சொல்லியிருக்கிறார். என்ன சொல்லியிருக்கிறார் என்றால், ஸ்ரீசைலத்திலேயிருந்து சென்னமுகப்பள்ளி regulator வந்து, diversion பெற்று, அதிலேயிருந்து வக்கீல்ஓடை வழியாகத்தான் சோமசீலாவிற்குத் தண்ணீர் வந்திருக்கிறது என்று இங்கே சொல்லியிருக்கிறார்கள். இந்த அவையில் அமைச்சர் கொடுத்த பதில். எனவேதான், நான் மீண்டும் கேட்கிறேன். ஸ்ரீசைலத்திலிருந்து சோமசீலாவிற்கு கால்வாய் வெட்டப்பட்டிருக்கும் என்று சொன்னால், சென்னமுகப்பள்ளி regulator-க்குச் சென்று, வக்கீல் ஓடை வழியாக தண்ணீர் சோமசீலாவிற்கு வரவேண்டிய தேவையில்லை. இங்கே அப்படி தண்ணீர் வந்திருக்கிறது என்று பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் இந்த மன்றத்திலே தகவல் கொடுத்திருக்கிறார்கள். இதைத்தான் நாங்கள் கேட்கிறோம்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போதும் அதில் நான் மாறுபடவில்லையே? நான் உங்களிடம் கேட்ட கேள்வியை மீண்டும் நினைவுபடுத்துகிறேன். ஸ்ரீசைலத்திலிருந்து...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என் மூலமாகத்தான் கேட்க வேண்டும்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மன்னிக்க வேண்டும். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உங்கள் மூலமாகக் கேட்கிறேன். ஸ்ரீசைலத்திலிருந்து சோமசிலா வரையில் கால்வாய் வெட்டப்படவில்லை என்று சொன்னார்கள். நான் திருப்பிக் கேட்கிறேன்; எந்த இடத்தில் வெட்டப்படவில்லை; எந்த இடம் வருகிறது என்றால், அதற்கான காரணத்தை என்னால் சொல்லமுடியும்.

முற்பகல் 11-15

இப்போதுகூட, நீங்கள் என்ன சொல்கிறீர்கள் என்றால், இந்த 'patch' ஸ்ரீசைலம் முதல் போத்திரெட்டி, போத்திரெட்டி முதல் பலகச்சாலா, பலகச்சாலா முதல் வெலுகுடு, வெலுகுடு முதல் சென்னமுகப்பள்ளி, சென்னமுகப்பள்ளி முதல் பிரம்மஹாடுமடம், பிரம்மஹாடுமடம் முதல் சோமசிலா, சோமசிலா முதல் கண்டலேறு, கண்டலேறு முதல் நாசரேத்பேட்டை. இந்தப் பகுதிகளிலே எந்த இடத்திலே வெட்டவில்லை என்று நான் சொல்கிறேன்; உங்களுக்குப் புரியவில்லை என்றால், நானே உங்களுக்குச் சொல்லிக்கொடுக்கிறேன். சோமசிலாவிலிருந்து சென்னமுகப்பள்ளிக்கு 13 கிலோமீட்டர் உள்ளது. அந்த 13 கிலோ மீட்டருக்குத்தான் கால்வாய் வெட்டப்படவில்லை. அதற்கு இரண்டு காரணங்கள். நீங்கள் எந்தப் பத்திரிகையை நம்புகிறீர்களோ, அந்தப் பத்திரிகையிலே எழுதியிருக்கிறார்கள். 3, 5, 10 இலட்சம் அல்லது 15 இலட்சம் என்று கேட்கிறார்கள். இரண்டாவது, அதனுடைய எஞ்சினியர்கள் பார்க்கிறபோது, slope-ஆக, down-ஆக இருக்கிறது. கொஞ்சம் விட்டாலும் கீழே தண்ணீர் வந்து விழுந்துவிடும். அவ்வளவு பணம் கொடுப்பதும் நம்மால் இயலாது. நில ஆர்ஜிதம் குறித்து பல பேர் வழக்குப் போட்டு, அவை court-லே இருக்கிற காரணத்தால், அது முடிய நீண்ட நாட்களானாலும் ஆகும் இப்போது கை வைக்க முடியாது என்பதால்தான், வக்கீல்ஓடையிலே திருப்பிவிட முடியுமா, முப்புலவாகுவிலே திருப்பிவிட முடியுமா என்று விடுகிறோமே தவிர, வேறொன்றுமில்லை. ஆகையினால்தான், மாண்புமிகு உறுப்பினருக்குத் தெளிவாகச் சொல்கிறேன். சோமசிலாவிலிருந்து சென்னமுகப்பள்ளிக்குப் போகின்ற regulator-ஐக் கட்டுகிற இடத்திலே, அந்த 13 கிலோ மீட்டர் தூரத்திற்குத்தான் வெட்டவில்லை. காரணம் நன்செய் நிலங்கள், வழக்குகள், ஆர்ஜிதம் செய்வதிலே இருக்கிற தகராறுகள். அது ஒன்றும் பெரிய பிரச்சினை இல்லை. நாளைக்குக்கூட ஒப்புக் கொண்டால், கால்வாய் வெட்டாமலே தண்ணீர் ஓடி வரக்கூடிய இயற்கை சூழ்நிலை அங்கே இருக்கிறது.



**டாக்டர் அ. செல்லக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சொல்லிவிட்டார்கள். 13 கிலோ மீட்டர் கால்வாய் வெட்டவில்லை; நாளைய தினம் வேண்டுமானால் அங்கே வெட்டாமலேயே தண்ணீர் கொண்டுவர முடியும் என்று சொன்னால், வெட்டவில்லை என்றுதான் அர்த்தம். (கூச்சல்)

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரு. செல்லக்குமார் அவர்களுக்குச் சொல்கிறேன். இப்போதாவது தெளிவாக இருக்கிறீர்களா? இவ்வளவு நேரம் என்ன பேசினீர்கள் என்றால், ஸ்ரீசைலத்திலிருந்து சோமசிலாவிற்கு இதுவரையிலே கால்வாய் வெட்டவில்லை என்று சொன்னீர்கள். அது எந்த இடம் என்று கேட்டேன். உங்களால் சொல்ல முடியவில்லை. நண்பர் என்ற முறையிலே எந்த இடம் என்பதற்கு நானே ஒரு இடத்தை 'pin' செய்து, அந்த இடத்திற்கு reason-ம் சொல்லியிருக்கிறேன். ஆகவே, அது ஒரு பெரிய பிரச்சினை அல்ல. ஆனால், வெட்டாவிட்டாலும் தண்ணீர் வருவதற்கு இரண்டு வழி வைத்திருக்கிறோம். வெலுகுடு reservoir-க்கு முன்னால், முப்புலவாகுவிலே கொண்டு வருவதற்கு இருக்கிறோம். அங்கே வக்கீல் ஓடையிலே திருப்பி விடுகிறோம். ஆகையினால் தண்ணீர் வருவதற்கு வழியில்லாமல் இல்லை.

**டாக்டர் அ. செல்லக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு சென்னை நகரத்திலே இருக்கின்ற குடிநீர்ப் பஞ்சம்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 11 மணிக்கு உங்கள் பேச்சை ஆரம்பிக்க விட்டேன். 11-20-க்குள்ளே முடிக்க வேண்டும். நான் உங்களுடைய நன்மைக்காகச் சொல்கிறேன். நீங்கள் இன்னும் கிருஷ்ணா நதி நீரைப் பற்றி எவ்வளவு நேரம் பேசினாலும் எனக்கு ஒன்றும் ஆட்சேபனை இல்லை. நான் அதோடு உங்களுடைய பேச்சை நிறுத்தி விடுவேன். நான் உங்களுக்கு ஒரு வாக்குறுதியைக் கொடுத்திருக்கிறேன். அலுவல் ஆய்வுக் குழுவிலே வைத்து இந்தக் கிருஷ்ணா நதி நீர்ப் பிரச்சினையைப் பற்றி தனி விவாதத்திற்கு நான் அனுமதி கொடுக்கிறேன் என்று சொல்லியிருக்கிறேன. ஆகையினால் அடுத்த பிரச்சினைக்கு வாருங்கள்.

**டாக்டர் அ. செல்லக்குமார்:** பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயிகளுடைய கடன், அபராத வட்டியைத் தள்ளுபடி செய்ய வேண்டுமென்ற கோரிக்கையை தமிழ் மாநில காங்கிரஸ் சார்பாக நாங்கள் வைத்திருக்கிறோம். ஐக்கிய முன்னணி ஆட்சி இருந்தபோது, அன்றைக்குப் பிரதமராக இருந்த திரு. ஐ.கே. குஜ்ரால் அவர்கள் பஞ்சாப் மாநிலத்திலே

இதுபோன்று ஏறத்தாழ ரூபாய் 2 ஆயிரம் கோடிக்கான சலுகைகள் அங்கே வழங்கினார்கள். அதை நான் நினைவுபடுத்துகிறேன். இப்போது கோலப்பன் குழு அறிக்கையிலேகூட விவசாயிகள் ஓர் ஏக்கர் நிலம் வைத்து, நெல் சாகுபடி செய்ய வேண்டுமென்று சொன்னால், அதற்கான வருமானம் என்பது 1250 ரூபாய்தான் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இயற்கைச் சீற்றங்கள் காரணமாக, அவர்கள் பெற்ற அந்தக் கடனை, அவர்களால் திருப்பிச் செலுத்த முடியாத காரணத்தினால், அந்தக் கடனை ஒட்டுமொத்தமாக தமிழக அரசு தள்ளுபடி செய்வதற்கு முன்வர வேண்டும். நான் இதைச் சொல்கிறபோது, கேரள மாநிலத்திலே ஒரு திட்டம் இருக்கிறது. 'Floric card' என்று அவர்கள் ஒரு card கொடுத்திருக்கிறார்கள். அந்த card-லே பயன் பெறுகிற பயனாளிகள் வங்கியிலே குறைந்த வட்டியிலே, 6 சதவிகிதம் வட்டியிலே கடனைப் பெற்று, விவசாயம் செய்து, வட்டியைத் திருப்பிக் கட்டுகிற ஒரு வாய்ப்பு இருக்கிறது. அதனுடைய அடிப்படை என்னவென்றால், அரசாங்கமே ஒரு கோடி ரூபாய் ஒரு வங்கியிலே நிரந்தர வைப்புக் கணக்கில் Fixed Deposit வைக்கிறார்கள். அவ்வாறு வைத்துவிட்டு, அதன்மூலமாக அந்தப் பகுதியிலே இருக்கிற விவசாயிகளுக்கு அவர்கள் கடன் கொடுக்கிறார்கள். எனவே, நம்முடைய மாநிலீத்திலும், அதுபோன்ற ஒரு நல்ல திட்டத்தினைச் செயல்படுத்த வேண்டும். ஏனென்று சொன்னால், பல்வேறு கூட்டுறவு வங்கிகளிலே இப்போது surplus fund அதிகமாக இருக்கிறது என்று இந்த மன்றத்திலேகூட சொல்லப்பட்டிருக்கிறது. எனவே, விவசாயிகளுக்காக, அந்த 'Floric card' என்று சொல்கிற, கேரள மாநிலத்தினுடைய முன்னுதாரணத்தை வைத்துக்கொண்டு, அதேபோல், நம்முடைய மாநிலத்திலும் விவசாயிகளுக்காக ஒரு card கொடுத்து, அவர்களுக்கு இனிமேல் அதுபோன்ற நேரங்களில் குறைந்த வட்டியில் அவர்கள் விவசாயம் செய்கின்ற வாய்ப்பினைக் கொடுக்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்வதோடு, கடந்த காலத்திலே அவர்கள் கட்டவேண்டிய வட்டியையும் இரத்து செய்ய வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொன்றையும் நான் சொல்ல விரும்புகிறேன். சிறு குழந்தைகள், மழலைச் செல்வங்களுக்காக மாநில அரசு இப்போது சத்துணவு மாவு கொடுக்கிற ஒரு திட்டத்தை நடைமுறையிலே செயல்படுத்திக் கொண்டிருக்கின்றது. இந்தத் திட்டத்திற்கு உலக வங்கிகூட, ஒரு காலகட்டத்திலே 1998-க்கு முன்னர் உலக வங்கி நிதி கொடுத்ததாலே ஆலோசனைசொல்கிற இடத்திலே இருந்தது. 1998-க்குப் பிறகு இப்போது உலக வங்கி, அந்தத் திட்டத்திலேயிருந்து பின்வாங்கிக் கொண்டது.



இப்போது மாநில அரசு அதற்கான முழுமையான செலவுகளையும் ஈடு செய்து கொண்டிருக்கிறது. ஏறத்தாழ 40 இலட்சம் சிறு மழலைச் செல்வங்கள் அந்தச் சத்துணவு மாவைப் பெற்றுக் கொண்டிருக்கிறார்கள். ஒரு பொருளை வாங்க வேண்டுமென்று சொன்னால், அது எந்தப் பொருளாக இருந்தாலும், stores-க்கு என்று, அரசாங்கத்திற்கு என்று ஒரு Financial code என்ற ஒரு சட்ட வரையறைகள் நாம் வகுத்திருக்கிறோம்.

முற்பகல் 11-20

தமிழ்நாடு Financial Code-Article 125-லே மிகத் தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஒரு பொருள் ஒரு இலட்ச ரூபாய்க்கு மேலே வாங்கப்பட வேண்டுமென்று சொன்னாலே open tender கோரப்பட்டுத்தான், அந்தப் பொருள் வாங்கப்பட வேண்டுமென்ற வரைமுறை விதிக்கப்பட்டிருக்கிறது. இந்தச் சத்துணவு மாவைப் பொறுத்தவரை ஏறத்தாழ 30,000 centre-கள் இருந்தாலும், 20,000 centre-கள் ஒரு தனியாருக்குக் கொடுக்கப்பட்டபோது, ஏற்கெனவே கொடுத்த ஒப்பந்தத்தை அவர்களுடைய காலம் முடிந்த பிறகு, அதனை இரத்து செய்து மறுஒப்பந்தம் கோருவதற்குப் பதிலாக ஏறத்தாழ 14 மாதங்கள், அதைத் தொடர்ந்து extension கொடுத்து, அவர்களுக்கு நீட்டிப்பு கொடுக்கப்பட்டது. இதை நான் தவறு என்று சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஓர் இலட்சத்திற்கு அதிகமாகச் சென்று விட்டாலே open tender கோரவேண்டுமென்று சொல்கின்றபோது, ஏறத்தாழ 30, 40 கோடி ரூபாய்க்கு பொருட்கள் வாங்குகின்றபோது, அதற்கு நீங்கள் open tender பெற்றிருக்க வேண்டும். அப்படிச் செய்கின்றபோதுதான், நாம் தரமான உணவைப் பெற்றிருக்க வாய்ப்பு இருக்கிறது. ஏனென்று சொன்னால் இப்போது 20,000 centre-களுக்குத் தனியார்கள் கொடுக்கிறார்கள். ஆனால் 10,000 centre-களுக்கு Co-operative Society மூலமாக அந்தச் சத்துணவு மாவு தரப்படுகிறது. தனியாருக்குக் கொடுக்கின்ற rate அதிகமாக இருக்கிறது. ஆனால் Co-operative Society-க்குக் கொடுக்கின்ற rate குறைவாக இருக்கிறது. அந்த Co-operative Society-க்கு இன்னும் அதிகமான கட்டணத்தைக் கொடுத்தால் அவர்கள் சில வேளை தனியார்கள் செய்து கொடுப்பதை விட இன்னும் தரமான உணவை இன்னும் அதிகமாக சத்துமாவினை குழந்தைகளுக்குப் பெற்றுக் கொடுத்திருக்க முடியும். அதன்மூலமாக Co-operative Society-ஐ நம்பி வாழ்கின்ற 10,000 குடும்பங்கள் வாழ்ந்திருக்க வாய்ப்பிருக்கிறது. ஆனால்

அவற்றையெல்லாம் மீறி மூன்று முறை நமது முதலமைச்சர் அவர்கள் - extension-காலநீட்டிப்பிற்காக கையெழுத்து போட்டிருப்பதாக தகவல்கள் வந்து கொண்டிருக்கின்றன. நான் முதலமைச்சரைக் கேட்கிறேன். Financial Code என்ற இந்த அரசு விதிமுறையை வைத்து விட்டு, அதை மீறி செயல்படுவது என்று சொன்னால், இதைத் தவறு என்று முதலமைச்சர் சொல்கிறார்களா இல்லையா என்று தெரியவில்லை.

நான் ஏற்கெனவே இந்த மன்றத்திலே World Tel-ஐ பற்றி சொன்னேன். இதற்காக பல மாநிலங்களிலேயிருந்து ஒப்பந்தங்கள் கோரியிருப்பதாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டுச் சொன்னார்கள். internet இணைப்பிற்காக இப்போது இரயில்வே துறைகூட ஒப்பந்தம் போட்டிருக்கிறார்கள். இரயில்வே துறையை இணைப்பதற்காக இப்போது internet இணைப்பு வசதி செய்கிறார்கள். அந்த internet இணைப்பை அமைப்பதற்காக, கட்டமைப்பை உருவாக்குவதற்காக அவர்கள் பத்திரிகை வாயிலாக open tender என்ற முறையில் அழைப்பு கொடுத்திருக்கிறார்கள். அதைத்தான் நான் இந்த மன்றத்திலே நினைவுபடுத்த விரும்புகிறேன். எந்தத் திட்டமாக இருந்தாலும் ஓரளவிற்கு மேலே அதிகமாகக் கட்டணம் அதிலே குறிப்பிடப்படுகிறது என்று சொன்னால், அதிலே நிச்சயமாக tender கோரப்பட வேண்டும். இந்த ஆட்சியிலே Tender transparency வேண்டும் என்று Act கொண்டு வரப்பட்டு, நம்மாலேயே அந்த விதிமுறைகள் அத்தனையும் கடைபிடிக்க முடியவில்லை என்று சொன்னால் நாமே ஒரு தவறுக்கு முன்னுதாரணமாக, காரணமாக இருந்து விடுகிறோம் என்பதை நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த ஆட்சி பதவியேற்று நான்கு ஆண்டுகள் ஆகின்றன. 1996-லேயிருந்து 1998 வரை ஓய்வு பெற்ற பணியாளர்கள் அவர்களுடைய பல சலுகைகளைப் பெற முடியாமல் இருக்கிறார்கள். 30, 35 ஆண்டுகள் பணியாற்றி ஓய்வு பெற்ற பிறகு அவர்கள் தங்களுடைய குழந்தைகளின் திருமணம், கல்வி ஆகியவற்றுக்கெல்லாம், வாழ்க்கையை நெறிப்படுத்துவதற்கான அந்தப் பண உதவிகள் எல்லாம் இப்போது அரசின் நிதி நெருக்கடி காரணமாக அவர்களுக்கு முழுமையாக வந்து சேரவில்லை. அவர்களின் பிரதிநிதிகள்கூட ஆட்சியாளர்களை, பலமுறை முதலமைச்சரைக்கூட சந்தித்து மனுக் கொடுத்திருக்கிறார்கள். அவர்களுடைய Commutation-ஆக இருந்தாலும் சரி, அவர்களுக்கு வர வேண்டிய gratuity-ஆக இருந்தாலும் சரி, பல்வேறு சலுகைகளை அரசு உடனடியாக வழங்கவேண்டுமென்று கேட்டிருந்தார்கள். ஆனால் அரசு இன்றுவரை வழங்கவில்லை. அதன் மூலமே அரசினுடைய நிதி நெருக்கடி



எந்த அளவிற்கு இருக்கிறது என்பதை என்னாலே புரிந்துகொள்ள முடிகிறது. அதுமட்டுமல்ல, ஏற்கெனவே இந்த மன்றத்திலே சொல்லியிருக்கிறார்கள். வயது கடந்தவர்கள், முதியவர்கள் போன்றோருக்கு வழங்க வேண்டிய – தள்ளாத வயதிலே அந்த உதவித்தொகை மூலமாக வாழ்க்கை நடத்துகிறவர்கள் – அந்த உதவித்தொகையை அவர்கள் 6 மாதம், 8 மாதங்களுக்குப் பிறகுதான் பெறுகின்ற வாய்ப்பு இருக்கிறது. நான் ஆறு எட்டு மாதத்திற்கு....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்னும் 2 நிமிடத்தில் பேசி முடியுங்கள்.

**டாக்டர் அ. செல்லக்குமார்:** இப்போது அந்த உதவித்தொகைகள் காலாகாலத்திலே வழங்கப்படவில்லை என்பது மட்டுமல்ல. ஆதிதிராவிட மாணவர்களுக்கு வழங்கப்பட வேண்டிய கல்வி உதவித் தொகை, அவர்கள் கல்வி கற்கின்ற அந்த ஆரம்ப காலத்திலே அவர்களுக்கு வழங்குவதற்குப் பதிலாக, இறுதிகாலக் கட்டத்திலேதான் இதுபோன்ற நிதிகள் வழங்கப்படுகின்றன. அதனால் அவர்கள் நல்ல கல்வியைக் கற்க முடியாத ஒரு சூழ்நிலை இப்போது இருப்பதைப் பார்க்கின்றபோது, அரசினுடைய நிதிநிலையை என்னாலே புரிந்துகொள்ள முடிகிறது. இப்போது பல்வேறு சலுகைகளைப் பார்க்கிறோம். இளைஞர்களுக்கான வேலைவாய்ப்புக்கு எந்தவிதமான திட்டங்களும் இந்தக் கொள்கைக் குறிப்பிலே முழுமையாக இல்லை. கடந்த காலத்திலே சொல்லப்பட்டதுதான் தொடர்ந்து சொல்லப்பட்டிருக்கிறது என்று பலரும் சொல்லியிருக்கிறார்கள்.

நான் இந்த மன்றத்திலே சொல்ல நினைப்பது ஒன்று. இந்த நான்கு ஆண்டு காலத்திலே இந்த அரசினுடைய வேலைவாய்ப்பிற்கான செயல்பாட்டினைப் பற்றி இங்கே ஒப்பிட்டுப் பார்ப்பதற்கு....

முற்பகல் 11-25

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்னும் ஒரு நிமிடம். உங்களுடைய கருத்து எதுவாக இருந்தாலும், ஒரு நிமிடத்தில் பேசி முடியுங்கள். நான் அடுத்த உறுப்பினரைக் கூப்பிட்டுவிடுவேன்.

**டாக்டர் அ. செல்லக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்னும் ஒரு நிமிடத்தில் பேசி முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதுதான், இன்னும் ஒரு நிமிடம்தான் கொடுப்பேன்.

**டாக்டர் அ. செல்லக்குமார்:** இந்த அரசினுடைய செயல்பாட்டினை, ஒப்பிட்டுப் பார்ப்பதற்கு ஒரு நிகழ்ச்சியை, இந்த மன்றத்தில் நடந்த நிகழ்ச்சியை நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். அரசுப் பணிகள் நேர்மையான முறையில், அதிகார துஷ்பிரயோகம் இல்லாமல், ஆட்சியாளருடைய தலையீடு இல்லாமல் நேர்மையான முறையிலே, இந்த ஆட்சியை நடத்திக் கொண்டிருக்கின்றது என்று முதலமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். ஆனால், ஒரு மன்ற உறுப்பினர் ஒரு வேலைக்கு, தேர்வுக்காக, நேர்மையான தேர்வுக்காக, பல இலட்சங்கள், கோரிக்கைகள், தொகை கேட்டார்கள், பணம் கேட்டார்கள், இலஞ்சமாகக் கேட்டார்கள் என்று இந்த மன்றத்திலே சொன்னபோது முதலமைச்சரே சொல்லியிருக்கிறார், என்னிடம்கூட அந்தக் கோரிக்கையைக் கொடுத்தார்கள், இரண்டு பேருக்கு கொடுத்தார், ஆனால் இரண்டிலே ஒருவரைச் சொல்லுங்கள் என்று சொன்னேன், அவர் ஒருவரைச் சொன்னார். அந்த ஒருவருக்குப் பணி வழங்கப்பட்டிருக்கிறது, அதிலே இலஞ்சம் நடந்ததா என்று முதலமைச்சரே வாக்குமூலம் கொடுத்திருக்கிறார்கள். அதனால், இது இந்த மன்றத்திலே நடந்த நிகழ்ச்சிகள். நான் சுருக்கமாக...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதிலே என்ன தப்பு இருக்கிறது? (குறுக்கீடு) இல்லை, இல்லை, இதிலே என்ன தப்பு இருக்கிறது? ஓர் உறுப்பினர் குற்றச்சாட்டு சொன்னார், முதலமைச்சர் நடவடிக்கை எடுத்தார், இதிலே, என்ன தப்பு இருக்கிறது?

**டாக்டர் அ. செல்லக்குமார்:** பேரவைத் தலைவர் அவர்களே, ஆட்சி செய்து கொண்டிருக்கின்ற நீங்கள், இலட்சக்கணக்கான இளைஞர்கள், வேலைவாய்ப்பிற்காக, வேலைவாய்ப்பு அலுவலகத்தில காத்திருக்கும்போது...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதிலே என்ன தப்பு இருக்கிறது என்று சொல்லுங்கள். அவர் கேட்டார், முதலமைச்சர் போட்டுக் கொடுக்கிறேன் என்றார், போட்டுக் கொடுத்துவிட்டார். இதிலே என்ன தப்பு இருக்கிறது? எப்படியிருந்தாலும், நீங்கள் விரைவிலே பேசி முடியுங்கள். (குறுக்கீடு) எப்படியிருந்தாலும் நீங்கள் விரைவிலே பேசி முடியுங்கள்.

**டாக்டர் அ. செல்லக்குமார்:** இதுவே ஒரு முறைகேடு என்று சொல்கிறேன் நான். இதுவே ஒரு முறைகேடு. இலட்சக்கணக்கான மக்கள் சட்டமன்றத்திற்குள்ளே வருவதற்கு வாய்ப்பு இல்லாமல், சட்டமன்ற



உறுப்பினர்களை அணுகமுடியாமல், வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்துவிட்டு, தினசரி காலையிலும், மாலையிலும், நள்ளிரவிலும், அங்கே காத்துக் கொண்டிருக்கும்போது, அரசினுடைய பதவிகள் நிரப்பப்படுகின்றபோது, இங்கே சிபாரிசு...

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கூட, இப்படிப் பல விதிமுறைகளுக்கு மாறாக, விதிவிலக்குக் கோரி எத்தனையோ மனுக்களை என்னிடத்திலே கொடுத்திருக்கிறார். அவற்றை எல்லாம் நான் இங்கே படித்துக்காட்ட விரும்பவில்லை. அது நாகரிகம் ஆகாது. நேற்றைக்குக்கூட கொடுத்திருக்கிறார்.

**டாக்டர் அ. செல்லக்குமார்:** தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதையெல்லாம் நான் அனுமதிக்க முடியாது. நேர்முகத் தேர்விற்கு கூப்பிடப்பட்டவர்களில், வேலைவாய்ப்பு அலுவலகம் மூலமாக அனுப்பப்பட்ட பட்டியலில் கூப்பிடப்பட்டவர்களில் சம்பந்தப்பட்டவருக்கு ஏதாவது உதவி செய்ய முடியுமா என்று முதலமைச்சரைக் கேட்டார். முதலமைச்சர் உதவி செய்கிறேன் என்றார். இதிலே ஒன்றும் பெரிய பிரச்சினை கிடையாது. நீங்கள் சீக்கிரம் பேசி முடியுங்கள். இல்லாவிட்டால், நான் அடுத்த உறுப்பினரைக் கூப்பிடுவேன். ஒரே ஒரு நிமிடம் கொடுப்பேன். நான் ஒரு நிமிடம் என்று சொல்லி, நான்கு நிமிடம் அனுமதி கொடுத்திருக்கிறேன். நீங்கள் சீக்கிரம் பேசி முடியுங்கள்.

**டாக்டர் அ. செல்லக்குமார்:** பேரவைத் தலைவர் அவர்களே, நான் நேற்று முதலமைச்சரிடம் கொடுத்ததுகூட, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் அந்த விவரத்திற்குள் போக வேண்டாம். திரு. வி.பி. இராசன்.

**டாக்டர் அ. செல்லக்குமார்:** நான் பேசி முடித்துவிடுகிறேன்..

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் இப்படியே பேசிக்கொண்டிருந்தால் நான் அனுமதி கொடுக்க முடியாது.

**டாக்டர் அ. செல்லக்குமார்:** பேசி முடித்துவிடுகிறேன்..

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 11 மணிக்கு ஆரம்பித்து 11-27 ஆகிறது. முடிக்கிறேன், முடிக்கிறேன் என்றால் என்ன அர்த்தம்?

**டாக்டர் அ. செல்லக்குமார்:** ஒரே ஒரு நிமிடம்..

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் கொடுக்க முடியாது.

**டாக்டர் அ. செல்லக்குமார்:** ஒரு நிமிடம்தான்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒரு நிமிடம் என்றால் ஒரு நிமிடம்தான்.

**டாக்டர் அ. செல்லக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைய தினமணி பத்திரிகையிலே, ஒரு செய்தி வந்திருக்கிறது. தொழில் துறையிலே 12 நாட்களில், இரண்டு அரசாணைகள் அரசால் பிறப்பிக்கப்பட்டிருக்கின்றன என்று சொல்லி, அதிலே என்ன சொல்லியிருக்கிறார்கள் என்று சொன்னால், விற்பனை வரிச் சலுகை இரத்து செய்யப்படும் என்று அறிவிக்கப்பட்டதிலே குளறுபடிகள்—இரண்டுமுறை, இரண்டுவிதமான அரசாணைகள் பிறப்பிக்கப்பட்டிருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அதற்கு முதலமைச்சர் அவர்கள் தெளிவான பதிலைத் தர வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, டான்ஃபெட் திட்டம். இந்த டான்ஃபெட்டிலே முந்திரி கொள்முதல் செய்து, அதை விற்பனை செய்வதற்கு ஒப்பந்தம் போடுகிறார்கள். கடந்த ஆட்சியிலே ஒரு தவறு நடந்தது. நம்முடைய பகுதியிலே சாகுபடி செய்கின்ற விவசாயிகளிடமிருந்து, முந்திரி உற்பத்தி செய்பவர்களிடமிருந்து பெற்று அதைத்தான் விற்பனை செய்ய வேண்டும், process செய்ய வேண்டும் என்று சொல்லப்பட்டிருந்த விதிமுறைக்கு மீறி அன்றைக்குத் தனியாரிடம் ஒப்பந்தம் போட்ட காரணத்தினாலே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் ஒரு நிமிடம், அரை நிமிடம் என்று சொல்லிவிட்டு புதுப் புதுக் கருத்தாகப் பேசுகிறீர்கள். நீங்கள் தயவு செய்து உட்காருங்கள். இனிமேல் நான் அனுமதிக்க முடியாது.

**டாக்டர் அ. செல்லக்குமார்:** ஒரு சின்ன விளக்கத்தைக் கொடுத்துவிடுகிறேன்..

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது முறையல்ல, திரு. வி.பி. இராசன். (குறுக்கீடு) திரு. வி.பி. இராசன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் உட்காருங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.



**திரு. ஐ. கணேசன்:** Point of order.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் அனுமதிக்கவில்லை. நீங்கள் உட்காருங்கள். திரு. வி.பி. இராசன்.

முற்பகல் 11-30

**திரு. வி.பி. இராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வணக்கம். தமிழக மக்களுக்கு, தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் வழங்கியிருக்கிற இந்த நிதிநிலை அறிக்கை அனைத்துத் தரப்பு மக்களின் பாராட்டுதலைப் பெற்ற நிதிநிலை அறிக்கை என்பதை இந்த அவையில் இருக்கிற அனைத்து உறுப்பினர்களும் மறுக்காமல் ஒத்துக் கொள்வார்கள்.

**(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)**

இந்த நிதிநிலை அறிக்கை பறிக்காமல் விழுந்த பனம்பழம் என்று சொன்னால், அதை ஏற்றுக் கொண்டுதான் தீர வேண்டும். இதனுடைய ருசி ஏழை எளிய மக்களுக்குத்தான் தெரியும். இது ** தெரிய நியாயம் இல்லை. இன்னும் ஒருபடி மேலே சொன்னால், இந்த பட்ஜெட்டில் விவசாயிகளுக்கு எதுவுமே இல்லை என்று விவசாயத்தைப் பற்றி தெரியாதவர்கள் எல்லாம் பேசுகின்றபோதுதான் வருத்தமாக இருக்கிறது. ஆடுதுறை 27 நெல்லுக்கு அடி உரம் என்ன என்று கேட்டால், அதைப் பற்றி தெரியாதவர்கள் எல்லாம் விவசாயிகளைப் பற்றி பேசுகிறார்களே என்றுதான் வருத்தமாக இருக்கிறது. இந்த பட்ஜெட்டில் அலங்காரமான வார்த்தைகள்தான் அதிகமாக இருக்கின்றன என்று அவர்கள் சொல்லியிருக்கிறார்கள்.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ** என்று ஒட்டுமொத்தமாகச் சொல்லலாமா? அதை சபைக் குறிப்பிலேயிருந்து நீக்க வேண்டும். ** என்று சொல்வதை, தலைவர் அவர்களே நீங்கள் அனுமதிக்கலாமா?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்கள் உட்காருங்கள். அவர் சொன்னது ** (மேசையைத் தட்டும் ஒலி) உங்களை அல்ல, உட்காருங்கள்.

---

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[2000 மார்ச் 31

(திரு. ச. அழகிரி, திரு. மு. அப்பாவு, டாக்டர் அ. செல்லக்குமார், டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன், திரு. என்.ஆர். அழகராஜா ஆகியோர் ஒரே சமயத்தில் எழுந்து நின்றனர்)

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அவைக் குறிப்பிலேயிருந்து அதை நீக்குங்கள். நாங்களும், திருப்பிச் சொல்லலாமா, T.C. சட்டை போட்டவர்களுக்கு விவரம் இருக்கிறதா என்று திருப்பிச் சொல்லலாமா?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்கள் உட்காருங்கள் (குறுக்கீடுகள்) திரு. இராசன், நீங்கள் பேசுங்கள்.

**திரு. வி.பி. இராசன்:** இந்த நிதிநிலை அறிக்கையில் எண்ணற்ற நல்ல திட்டங்கள் இருப்பதை மறந்து பேசுகிறார்களே என்றுதான் வருத்தப்படுகிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் இராசன் அவர்கள் இப்போது சொன்ன கதர் என்பது மகாத்மா காந்தியடிகளால் கொடுக்கப்பட்ட ஒரு புனிதமான ஆடை. ** ஓர் ஒழுங்கற்ற வார்த்தையைச் சொல்லியிருந்தால், அவர்களே அதைத் தயவுசெய்து திரும்பப்பெற வேண்டும் என்று உங்களை நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. ஏ.வி.ஏ. நாசர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, Point of order. ஒரே ஒரு கருத்தைச் சொல்லி விடுகிறேன். கதர் என்பது காந்தியடிகள் கொடுத்ததாகச் சொன்னார்கள். காந்தியடிகளுக்கு அலி சகோதரர்களுடைய தாயார் தன்னுடைய கையாலே நெய்த புனிதமான ஒரு கைத்தறி ஆடையை, கதர் என்பது, கத்ர் என்ற அரபியிலே சொல்லக்கூடிய ஒரு மரியாதைக்குரிய வார்த்தை என்ற அடிப்படையிலே அந்த ஆடையை கதர் ஆடையாகப் போர்த்துவதாகக் கூறி காந்தியடிகளுக்குப் போர்த்தினார்கள். அதைத் தொடர்ந்துதான் அதற்கு கதர் ஆடை என்ற பெயரே வந்தது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



2000 மார்ச் 31]

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் இராசன் பேசும்பொழுது பயன்படுத்திய ** என்ற அந்த வார்த்தையை, இப்போது நான் திருப்பிச் சொன்னது உட்பட அவைக் குறிப்பிலேயிருந்து எடுத்துவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க அவைக் குறிப்பிலேயிருந்து நீக்கப்படுகிறது.

**திரு. ச. அழகிரி:** அதை நீங்களே நீக்கியிருந்தால் எவ்வளவு பெருந்தன்மையாக இருந்திருக்கும். முதலமைச்சர் வந்துதான் இந்தப் பெருந்தன்மையைத் தட்டிச்செல்ல வேண்டியிக்கிறதேயொழிய பேரவைத் துணைத் தலைவருக்கு இந்தப் பெருந்தன்மை இல்லாமல் போனது எவ்வளவு சங்கடம். (குறுக்கீடு)

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இந்தப் பிரச்சினை முடிந்து போய்விட்டது. திரு. இராசன் பேசட்டும். (குறுக்கீடு) பிரச்சினை முடிந்து போய்விட்டது. நீங்கள் ஆளுக்கு ஆள் குறுக்கீடு செய்து கொண்டிருந்தால், அவர் பேச வேண்டாமா? (குறுக்கீடு) டாக்டர் இராமன், உங்களுக்கு அனுமதி தரவில்லை. நீங்கள் உட்காருங்கள், அந்தப் பிரச்சினை முடிந்து போய்விட்டது. அவைக் குறிப்பிலேயிருந்து எடுத்தாகிவிட்டது. அடுத்து, திரு. வி.பி. இராசன், நீங்கள் பேசுங்கள்.

**திரு. வி.பி. இராசன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு கட்சியின் தலைமை இடுகிற கட்டளைக்குக் கட்டுப்பட்டு நடக்கிற தொண்டன் என்ற வகையில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் சொன்ன வார்த்தையை நானும் ஏற்றுக்கொள்கிறேன்.

முக்கடலும் சங்கமிக்கும் குமரி முனையில் சத்தமிடும் அலைகள், முத்தமிடும் பாறையில் வட்டமிடும் பருந்துகள் வலம் வரும் உயரத்தில் அய்யன் திருவள்ளுவருக்கு அற்புதமான சிலை எழுப்பி அந்தச் சிலை எழுப்புகின்ற விழாவில், அந்தச் சிலைத் திறப்பு விழாவில் என் மரியாதைக்குரிய தலைவர், முக்காலமும் உணர்ந்த ஞானி மூப்பனார்

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

அவர்கள் எங்கள் தலைவர் டாக்டர் கலைஞரிடம் 'You can win' என்ற ஓர் ஆங்கிலப் புத்தகத்தைப் பரிசாகத் தந்து 'உங்களால் ஜெயிக்க முடியும்' என்பதை, அது திருச்சி இடைத் தேர்தலாக இருந்தாலும் அல்லது நெல்லிக்குப்பம் இடைத் தேர்தலாக இருந்தாலும் அல்லது அறந்தாங்கி இடைத் தேர்தலாக இருந்தாலும், இல்லை வரவிருக்கின்ற 2001 பொதுத் தேர்தல் ஆனாலும் உங்களால் ஜெயிக்க முடியும் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை symbolic-ஆக உணர்த்தியிருக்கிற அந்தப் பெருந்தலைவர் மூப்பனார் வழி வந்தவர்கள் இங்கே சட்டமன்றத்தில் பேசுகின்ற வார்த்தைகளை, அவர்கள் சொல்லியிருக்கின்ற கருத்துக்களை....

முற்பகல் 11-35

**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எங்களுடைய தலைவர் மாண்புமிகு கலைஞர் அவர்களுக்கு you can win என்ற புத்தகத்தைப் பரிசாக அளித்ததற்குக் காரணம், இடைத் தேர்தல்களிலே நீங்கள் வாக்கு பெற்று ஜெயிக்க வேண்டுமென்பதற்காகக் கொடுத்தது அல்ல. மாண்புமிகு முதல்வர் அவர்கள் திருவள்ளுவர் சிலையைத் திறந்தால் அவருடைய உயிருக்கு ஆபத்து வரும் என்று சிலபேர் சொன்னார்கள். ஆனால் அவற்றை எல்லாம் மீறி, மிகுந்த தைரியத்தோடு வந்து அந்தச் சிலையை அவர் திறந்ததற்காக you can win என்ற புத்தகத்தை எங்களுடைய தலைவர் அவருக்குத் தந்தாரேயொழிய, நீங்களே தேர்தலில் வெற்றி பெற்று வர வேண்டுமென்பதற்காக அவர்கள் இதைத் தரவில்லை என்பதனை நான் நினைவுபடுத்த விரும்புகிறேன். (சிரிப்பு)

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** துணைத் தலைவர் அவர்களே, கொடுத்தது அவர், வாங்கியது நான். அதற்கு நீங்கள் ஏன் வியாக்கியானம் செய்து கொண்டிருக்கிறீர்கள் என்று தெரியவில்லை. (சிரிப்பு)

**திரு. வி.பி. இராசன்:** வர இருக்கின்ற 2001 பொதுத் தேர்தலிலும் எங்களுடைய தன்னிகரற்ற தலைவர், டாக்டர் கலைஞர் அவர்கள்தான் மீண்டும் முதலமைச்சராவார் என்பதற்கு எடுத்துக்காட்டாக, இந்த நாட்டு மக்களுக்காக நல்ல பல திட்டங்களை நிறைவேற்றியிருக்கிறார்கள். அதை நிறைவேற்றுகின்ற முகத்தான் 2001-லும் நாங்கள்தான் என்பதனை இந்த மாமன்றத்தில் நான் பதிய வைக்க விரும்புகிறேன்.

எங்கள் தன்னிகரற்ற தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள் இந்த பட்ஜெட்டில் நல்ல கருத்துகளைத் தந்திருக்கிறார்கள். குறிப்பாக, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இந்த ஆண்டுகூட 31,000 வீடுகள் கட்டித் தரப்படும் என்று சொல்லி, ரூ.99 கோடி அதற்காக ஒதுக்கியிருக்கிறார்கள்.



ஒரு காலத்தில் சென்னை வீதிகளில், பிளாட்பாரங்களில் படுத்துறங்க் இடமில்லாது தவித்துக் கொண்டிருந்த தாழ்த்தப்பட்ட மக்களுக்கெல்லாம் பொதுவுடைமைக் கட்சியின் மூத்த தலைவர் என்று சொல்லக்கூடிய மணலி கந்தசாமி அவர்கள் இந்தச் சம்பவத்தைப் பார்த்துவிட்டு, எங்கள் மதிப்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களை நேரிலே சந்தித்து, இந்த நாட்டில் மக்கள் வெயிலுக்கும், மழைக்கும் தன் வாழ்வைப் பலியிட்டு, வேதனைத் தீயில் கருகிக் கொண்டிருக்கிறார்கள். மாடாக உழைத்து, ஓடாகத் தேய்ந்து, நலிந்து, நலமிழந்து, வலுவிழந்து, பொலிவிழந்து, கூனிக் குறுகி, 8 அடிக் குடிசைக்குள் குந்திக் கொண்டிருக்கிறார்கள். ஓலைக் குடிசையிலே, ஒட்டிய வயிறோடும், கட்டிய துணியோடும் பட்டினியோடும், பசியோடும் நாதியற்றவனாய், நடைப்பிணமாய், வக்கற்றவனாய், வாழ வழியற்றவனாய் அலைந்து திரிந்து, இந்த இருள் சூழ்ந்த வாழ்க்கையில் ஒளி வீச ஓர் அகல் விளக்கு தோன்றாதா என்று எண்ணி ஏக்கமுற்றிருக்கின்ற இந்தத் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு, மாண்புமிகு முதல்வர் அவர்களே, நீங்களாவது அவர்களுக்கு ஒழுகாத, தீப்பிடிக்காத வீடுகள் கட்டித்தாருங்கள்; பாம்புக்குகூட புற்று இருக்கிறது. எலிக்குக்கூட வளை இருக்கிறது. கிளிக்குக்கூட கூண்டு இருக்கிறது. மாட்டுக்குக்கூட தொழுவம் இருக்கிறது. குதிரைக்குக்கூட லாயம் இருக்கிறது. ஆனால் இந்தப் பாழும் மனிதன் வாழ வகையில்லாமல் இருக்கிறானே, இவனுக்கு ஒரு வீடு கட்டித் தாருங்கள் என்று சொல்லி, மணலி கந்தசாமி அவர்கள் விடுத்த வேண்டுகோளை ஏற்று, எங்கள் தன்னிகரற்ற தலைவர், டாக்டர் கலைஞர் அவர்கள் இந்த 5 ஆண்டுகளில் கிட்டத்தட்ட 3 லட்சம் வீடுகள் கட்டித் தந்த பெருமைக்குரிய பட்ஜெட்டை, இந்த அவையில் நான் பதிய வைக்க விரும்புகிறேன். அந்தத் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வீடுகள் மட்டும் இல்லை. அவர்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் கடந்த காலத்தில் 2 சென்ட் என்று வழங்கினார்கள். ஆனால் மாண்புமிகு முதல்வர் அவர்கள் இப்போது ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு, அவர்களுக்கு 3 சென்ட் இடம் தந்து இலவச வீட்டுமனைப் பட்டாக்களை வழங்கியவரும் டாக்டர் கலைஞர் அவர்கள்தான். அடுத்து வெள்ளை அறிக்கை வேண்டும் என்று பலமுறை சட்டமன்றத்தில் கோரிக்கை வைக்கப்பட்டது. இந்த மாநில அரசு தந்திருக்கிற இடங்களில் அவர்களுக்கு இருக்கின்ற இடஒதுக்கீடு பற்றி விரிவாகச் சொல்ல வேண்டும். அது வெளிப்படையாகச் சொல்லப்பட வேண்டுமென்று வெள்ளை அறிக்கை கேட்டுக்கொண்டே இருந்தார்கள். அதற்கு தாழ்த்தப்பட்ட மக்கள், பழங்குடியினர், அதோடு மட்டுமல்லாமல், பிற்படுத்தப்பட்டவர்கள், மிகவும் பிற்படுத்தப்பட்டவர்கள், அத்தனை பேருக்கும் வெள்ளை அறிக்கை வழங்கப்படும் என்று சொல்லி

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,.....

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,.....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இப்படி ஆள் ஆளுக்கு எழுந்து நின்றால் எப்படி? டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் செல்லக்குமார் அவர்கள் பேசுகின்றபோது பொதுப் பணித் துறை அமைச்சரை, சட்டமன்ற உறுப்பினர் குழுவை நீங்கள் அனுப்பி வையுங்கள் என்று கேட்டார்கள். அதற்கு பொதுப் பணித் துறை அமைச்சர் மிகவும் கொச்சையாக நீங்கள் picnic போவதற்கான ஏற்பாடு செய்யட்டுமா என்று.....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இதை நீங்கள் point of order என்று அப்பொழுதே எழுப்பியிருக்க வேண்டும். இந்தப் பிரச்சினை முடிந்து, அடுத்து இரண்டு உறுப்பினர்கள் பேசியாகிவிட்டது. உட்காருங்கள். (குறுக்கீடு) இல்லை. அனுமதி கிடையாது. திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் இராசன் அவர்கள் பேசுகின்றபோது இங்கு இருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லாம் விவசாயத்தைப் பற்றி எதுவுமே தெரியாதவர்கள்; தெரிந்துகொள்ளாதவர்கள், விவசாயிகளுடைய பிரச்சினையைப்பற்றிப் பேசிக்கொண்டிருக்கிறார்கள் என்று குறிப்பிட்டார். இங்கு பேசியவர்கள் எல்லாம் என்றால் இங்கு இருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர்கள்தான்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அவரே பதில் சொல்கிறார்.

**திரு. வி.பி. இராசன்:** துணைத் தலைவர் அவர்களே, நான் டாக்டர் செல்லக்குமார் அவர்களைப்பற்றி தான் சொன்னேன் எல்லோரையும் நான் சொல்லவில்லை.

**டாக்டர் அ. செல்லக்குமார்:** துணைத் தலைவர் அவர்களே, என் பெயரை mention பண்ணியிருக்கிறார்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** விவசாயத்தைப் பற்றித் தெரியாதவர்கள் என்று பேசினார். அவருடைய கருத்தை அவர்



சொல்லியிருக்கிறார், நீங்கள் பேசும்போது எவ்வளவு கருத்து சொன்னீர்கள்? உட்காருங்கள். திரு. பி.ஆர். சுந்தரம், பேசுங்கள்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே....

முற்பகல் 11-45

**டாக்டர் அ. செல்லக்குமார்:** ஒரேயொரு நிமிஷம்......

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இல்லை, திரு. பி.ஆர். சுந்தரம் பேசுங்கள்.

**டாக்டர் அ. செல்லக்குமார்:** இல்லை, எனக்கு விவசாயம் தெரியாது என்று என்னுடைய பெயரைச் சொல்லி.....

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தப் பட்ஜெட் விவாதத்திலே பேச....

**டாக்டர் அ. செல்லக்குமார்:** என் பெயரைச் சொல்லி......

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உறுப்பினர் இராசன் என்ன சொன்னார்? விவசாயத்தைப்பற்றித் தெரியாதவர் என்று சொன்னார். நீங்கள் எனக்குத் தெரியும் என்று சொல்லிவிட்டுப் போங்கள். திரு. பி.ஆர். சுந்தரம், பேசுங்கள்.

**டாக்டர் அ. செல்லக்குமார்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மைக் தந்தால்தானே சொல்ல முடியும்?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சரி, மைக் தருகிறேன். சொல்லுங்கள்.

**டாக்டர் அ. செல்லக்குமார்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் இராசன் அவர்கள் பேசுகின்றபோது எனக்கு விவசாயம் தெரியாது என்று சொன்னார்கள். எனக்கு விவசாயத்தைப்பற்றி நன்றாகத் தெரியும்; விவசாயிகளுடைய அவலங்களைப் பற்றியும் தெரியும். இந்த ஆட்சியில் நீங்கள், விவசாயிகளுக்குச் சலுகை செய்யவில்லை என்பதைப் பற்றியும் மிகத் தெளிவாகத் தெரிந்து வைத்திருக்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. பி.ஆர். சுந்தரம் குறுக்கீடு.

**திரு. வி.பி. இராசன்:** தலைவர் அவர்களே, ஒரேயொரு நிமிஷம்...... Point of order....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சுந்தரம், பேசுங்கள்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த பட்ஜெட் விவாதத்திலே பேச அனுமதி அளித்தமைக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த பட்ஜெட்டைப் பொறுத்தவரையில், விவசாயிகள், நெசவாளர்கள், தொழிலாளர்கள், சாதாரண ஏழை எளிய நடுத்தர மக்கள் ஆகியோரின் முன்னேற்றத்திற்கு எந்தவிதமான வழிவகையும் இல்லாத கடந்த கால நிதிநிலை அறிக்கையின் மலிவுப் பதிப்பாக இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கை இருக்கிறது என்று எங்களது கழகப் பொதுச் செயலாளர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஏற்கெனவே அறிவித்திருக்கின்றார்கள். அது எப்படி இதற்குப் பொருந்தும் என்று சொன்னால், நீங்கள் சென்ற முறை என்ன கூறினீர்களோ, அதிலே பல அம்சங்கள் இந்த அறிக்கையிலே இருக்கின்றன. அவற்றையெல்லாம் செய்யாமல் விட்டுவிட்டு அதையேதான் இதிலே திரும்பக் கூறியிருக்கின்றீர்கள்.

அடுத்தபடியாக ரேஷன் அரிசிக்கு மத்திய அரசு விலையை உயர்த்தியதற்கு எதிர்ப்புத் தெரிவித்து அனைத்துக் கட்சிகளும் நாடாளுமன்றத்தில் ஆர்ப்பாட்டம் நடத்தியபோது வாய்மூடி அமர்ந்திருந்தவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய உறுப்பினர்கள். இப்போது அதனுடைய தலைவர் அவர்கள் சமர்ப்பித்திருக்கின்ற நிதிநிலை அறிக்கையில் மத்திய அரசைக் கண்டிக்கின்ற திராணியில்லை. ரேஷன் அரிசி விலையை மத்திய அரசு உயர்த்தியிருப்பதை ரத்து செய்ய வேண்டுமென்று ஆணித்தரமாகக் கேட்கும் நிலையிலே இன்றைய முதல்வர் அவர்கள் இல்லை என்பதை இந்த நிதிநிலை அறிக்கை தெளிவாகத் தெரிவிக்கின்றது.

அடுத்தபடியாக, முந்திரி சாகுபடி என்ற பெயரில் தங்களுக்கு வேண்டியவர்களுக்கு கடற்கரையை நீண்டகாலக் குத்தகைக்கு விடுவதற்கு இந்த நிதிநிலை அறிக்கையைப் பயன்படுத்தியிருப்பது கண்டிக்கத்தக்கது. தமிழக அரசின் வனத் துறையால் இந்த முந்திரிச் சாகுபடித் திட்டத்தை நிறைவேற்ற ஏராளமான வாய்ப்புகள் இருக்கும்போது தனியாருக்கு விடும் முடிவு மக்களை ஏமாற்றும் வேலையாகும்.



அடுத்தபடியாக, கடந்த ஆண்டு தஞ்சாவூர் மாவட்டத்தில் காவிரி ஆற்றுப் பாசனக் கால்வாய்களைத் தூர் எடுப்பதாகக் கூறி 50 கோடி ரூபாயை ஒதுக்கியிருந்தீர்கள்.

** இன்று அதே 50 கோடி ரூபாயை மீண்டும் ஒதுக்கியிருக்கிறீர்கள். பாசனக் கால்வாய்களைக் கோடை காலங்களில் தூர் எடுக்காமல்....

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சென்ற ஆண்டு காவிரி டெல்டா பகுதிகளில் தூர் வாருவதில் 50 கோடி ரூபாய் செலவழித்து ** என்று சொல்ல வேண்டும். சென்ற ஆண்டு நாங்கள் தூர் வாரியிருக்கிறோம். இந்த மாமன்றத்திலே எல்லாம் தெரிந்த உறுப்பினர்கள் இருக்கிறார்கள். பத்திரிகைகள் இருக்கின்றன. இதுவரையில் காவிரியில் தூர் வாருவதில் இன்ன ஒழுங்கீனம் நடந்தது என்று சொன்னவர்கள் உண்டா? ஆக, ஒன்று அவர்கள் அதைத் திரும்பப் பெற வேண்டும்; இல்லாவிட்டால் நிரூபிக்க வேண்டும்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, என்னிடம் ஆதாரங்கள் இருக்கின்றன. அதை நான் உங்களிடம் தனிப்பட்ட முறையிலே கொடுப்பதற்குத் தயாராக இருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ஆதாரங்களை முன்கூட்டியே என்னிடம் கொடுத்துவிட்டு அதற்குப் பிறகு பேச வேண்டும்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே நம்முடைய பேரவைத் தலைவர் அவர்கள், ஆதாரங்கள் காட்டுவதாக இருந்தால் முன்கூட்டி சபாநாயகரிடத்திலே அவற்றைத் தரவேண்டுமென்று குறிப்பிட்டிருக்கிறார். இப்போது திரு. சுந்தரம் ஆதாரத்தைப் பின்னர் தருவதாகச் சொல்கிறார். அது தவறு. ஆதாரத்தைத் தந்துவிட்டுப் பேசுவதுதான் முறை.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** அடுத்தபடியாக, நாகப்பட்டினம்-காயிதே மில்லத்—

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, அதனால் அந்த ** என்பதை அவைக் குறிப்பிலிருந்து நீங்கள் நீக்க வேண்டும். இல்லாவிட்டால் அவரே அதை வாபஸ் பெற வேண்டும்.

---

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** நான் ஆதாரத்தைக் கொடுக்கிறேன் என்றுதான் சொல்கிறேன். அதாவது, ஆதாரத்தை நான் உங்களுக்குத் தருகிறேன் என்றுதான் நான்....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இல்லை, இல்லை, குற்றச்சாட்டு சுமத்துவதாக இருந்தால், முன்கூட்டியே பேரவைத் தலைவரிடம் அவற்றைக்காட்டி, அனுமதி வாங்கி அதன்பிறகு இங்கே சொன்னால்தான் அவர்கள் பதில் சொல்வதற்கு ஏதுவாக இருக்கும். அதைவிட்டு, பொத்தாம் பொதுவாகச் சொல்லிவிட்டு ஆதாரத்தை நான் நாளைக்கு எடுத்து வந்து தருகிறேன் என்று சொல்வதெல்லாம் சரியாக இருக்காது. ஆகவே, அது அவைக்குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

முற்பகல் 11-50

**திரு. பி.ஆர். சுந்தரம்:** அடுத்தபடியாக நாகப்பட்டினம் காயிதே மில்லத், தஞ்சாவூர் போன்ற மாவட்டங்களில் மாதிரிப் பயிர் காப்பீடு திட்டத்திற்கு மத்திய மாநில அரசுகள் உரிய பங்குத் தொகையை செலுத்தாத காரணத்தினால் சில மாதங்களுக்கு முன்பு பெய்த பெருமழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு உரிய காப்பீட்டுத் தொகை கிடைக்கவில்லை. இதனைப் பெற்றுத் தருவதைப் பற்றி இந்த அறிக்கையிலே எந்தவிதமான அறிவிப்பும் தெரிவிக்கப்படவில்லை.

அடுத்தபடியாக வெளிநாட்டு நிறுவனங்கள், தமிழகத்தில் தொழில் தொடங்குவது பற்றியும், உற்பத்தியைத் தொடங்கியிருப்பதுபற்றியும் இப்போது நூற்றுக்கணக்கான பஞ்சாலைகள் மூடப்பட்டிருப்பதுபற்றியும் மற்ற மூடப்பட்ட தொழிற்சாலைகளைத் திறப்பதுபற்றியும், ஒரு வரிகூட இந்த நிதிநிலை அறிக்கையிலே குறிப்பிடப்படவில்லை. விவசாயத்திற்கு அடுத்தபடியாக பெரிய தொழிலாக இருக்கின்ற நெசவுத் தொழிலுக்குத் தேவையான நூல்களை வழங்கி, அந்தக் கூட்டுறவு நூற்பாலைகள் மூடப்பட்டிருப்பது குறித்தும் அவற்றை மீண்டும் திறப்பதுபற்றியும் எந்தவிதமான அறிவிப்பும் இந்த நிதிநிலை அறிக்கையிலே இல்லாத காரணத்தினால்தான் எங்களுடைய கழகப் பொதுச் செயலாளர், புரட்சித் தலைவி அவர்கள் இந்த நான்கு ஆண்டு காலத்தினுடைய மலிவு பதிப்பு என்று இதைக் கூறியிருக்கிறார்கள்.

அடுத்தபடியாக நான் சொல்ல வேண்டும் என்றால் எங்களுடைய ஆட்சிக் காலத்தில், எங்களுடைய புரட்சித் தலைவி அவர்கள் 5 ஆண்டு காலம் ஆட்சி செய்தபோது அவர்கள் சாதித்த சாதனைகள் ஏராளம்



அவர்கள் அந்த 5 ஆண்டு காலம் முதல்வராக இருந்தபோது முதன்முதலிலே அவர்கள் கோட்பிலே போட்ட கையெழுத்து மலிவு விலை மதுவை ஒழிக்க வேண்டும் என்பதற்காக.

அடுத்தபடியாக தமிழகத்தை அமைதிப்பூங்காவா ஆக்கிக் காட்டினார்கள். விடுதலைப்புலிகளை தமிழகத்தை விட்டு ஓட்டிக் காட்டினார்கள். ஆனால் உங்களுடைய ஆட்சிக் காலத்தில் விடுதலைப்புலிகள் நடமாட்டம் இருந்து, பத்மநாபா கொலை செய்யப்பட்டு அதில் சம்பந்தப்பட்டவர்களை, கொலையாளிகளை எல்லாம் தப்பவிட்டது உங்கள் ஆட்சியில்தான் என்று நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்தபடியாக 69 சதவிகித இடஒதுக்கீட்டைப் பொறுத்தவரையில் சட்டமன்றத்திலே அதை நிறைவேற்றி நாடாளுமன்றத்திற்கு அனுப்பி ஜனாதிபதியின் ஒப்புதலைப் பெற்று 9-வது அட்டவணையிலும் சேர்த்தவர் எங்களுடைய புரட்சித் தலைவி அவர்கள் என்று சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து தொட்டில் குழந்தைகள் திட்டம். தொட்டில் குழந்தைகள் திட்டத்தைப் பொறுத்தவரையில் அன்னை தெரசா அவர்கள் பாராட்டி இருக்கிறார்கள். அறிவொளி இயக்கம், யுனஸ்கோ நிறுவனம் பாராட்டி இருக்கிறது. மகளிர் காவல் நிலையம், இப்படி எண்ணற்ற திட்டங்கள்....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** 9-வது அட்டவணையில் சேர்க்கப்பட்டது (குறுக்கீடு) அதை உச்சநீதிமன்றத்தில் சொல்லவில்லை. அதனால்தான் இவ்வளவு பிரச்சினை.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** ஆனால் தற்போது இந்த ஆட்சியிலே நிர்வாகம் ஸ்தம்பித்து நிற்கிறது. முதல்வர் அவர்களே ஒரு பேட்டி கொடுக்கும்போது, எனக்கு அனுப்ப வேண்டிய கடிதங்கள், எனக்கு அனுப்ப வேண்டிய தகவல் எதுவாக இருந்தாலும் நீங்கள் தலைமைச் செயலகத்திற்கு அனுப்ப வேண்டியதில்லை. என்னுடைய வீட்டிற்கு அனுப்புங்கள் என்று ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்திருக்கிறார்கள். அப்படி என்றால் இந்த ஆட்சி அவருடைய கையைவிட்டு, அவர்கள் வகிக்கின்ற உள்துறை, அவருடைய கையைவிட்டுச் சென்றுவிட்டது என்றுதான் நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இப்போதுகூட ஒரு D.R.O. பிரச்சினை. அந்த D.R.O. பிரச்சினை, சேலத்திலே இருந்த அந்த உயர் அதிகாரி இங்கே மாற்றப்பட்டு, அங்கே

[திரு. பி. ஆர். சுந்தரம்] [2000 மார்ச் 31

சேலத்திலே அந்த D.R.O. அவருடைய பதவியை மீண்டும் அவர் பெறமுடியாத ஒரு சூழ்நிலையிலேதான் இருக்கிறார். இடையிலே என்ன—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** ஏதோ ஒரு பத்திரிகையிலே வந்த பெஞ்சு செய்தியைப் படித்துவிட்டு நம்முடைய நண்பர் பேசுகிறார். அந்த D.R.O. விவரத்தைச் சொன்னார் என்றால் நன்றாக இருக்கும் என்ன விவரம் என்று. அப்படி என்ன நாங்கள் செய்தோம் அதிலே என்று தெரிந்து கொள்ளலாம்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** D.R.O.-விற்கு இங்கே இருந்து, நீங்கள் transfer பண்ணி order போட்டிருக்கிறீர்கள். அங்கே சேலத்திலே அவர்....

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** எங்கேயிருந்து டி.ஆர்.ஓ.-வை எங்கே transfer பண்ணி order போட்டோம். அது என்ன ஆயிற்று? என்ன order? அந்த order-க்கு என்ன கதி ஏற்பட்டது? அதை எல்லாம் சொல்ல வேண்டும்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** சேலம் மாவட்ட வருவாய் அதிகாரி நடராஜன். அவரை மூன்று நாளைக்கு முன்பு transfer செய்து அரசு உத்தரவு பிறப்பித்தது. அதைப்பற்றி நான் பேசுவதாக இருந்தால் இன்னும் நிறைய பேச வேண்டியிருக்கும் நான் அதற்கு.....

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** நீங்கள் நிறைய பேச நேரம் வாங்கித் தருகின்றேன் சபாநாயகரிடமிருந்து, பேசுங்கள். நான் வாங்கித் தருகின்றேன். நான் சிபாரிசு பண்ணுகின்றேன் உங்களுக்கு, தயவுசெய்து பேசுங்கள்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** முதல்வர் தலையிட்டு பிறப்பித்த உத்தரவை மீறி உயர் அதிகாரியின் மாற்றல் உத்தரவு ரத்து செய்யப்பட்டுள்ளது.....

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** பத்திரிகையைப் படிக்காதீர்கள், சொல்லுங்கள்; பத்திரிகையை வைத்துவிட்டு நீங்கள் என்ன சொல்ல வேண்டுமோ அதைச் சொல்லுங்கள்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** சேலம் மாவட்ட வருவாய் அதிகாரி நடராஜன் அவர்களை 3 நாளைக்கு முன்பு transfer செய்து அரசு உத்தரவு பிறப்பித்தது. அவர். . . .

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, நடராஜனை 3 நாளைக்கு முன்பு transfer செய்ததற்கு ஏதாவது ஆதாரம் இருக்கிறதா? அந்த ஆதாரத்தைக் காட்ட முடியுமா?



2000 மார்ச் 31]

முற்பகல் 11-55

**திரு. பி.ஆர். சுந்தரம்:** பத்திரிகையிலே வந்தது, பத்திரிகையிலே வந்த செய்தியைப் படித்துக்கொண்டிருக்கிறேன். நேற்றைக்குக்கூட......

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** அந்தப் பத்திரிகையிலே வந்த செய்தி பொய் செய்தி. இந்த நேரத்திலே பொய் என்பதை இங்கே பயன்படுத்தலாம். ஓர் உறுப்பினர் பேசுவது பொய் என்றுதான் சொல்ல முடியாது. ஏதோ பத்திரிகையிலே வந்ததை பொய் என்று சொல்லலாம். அந்தப் பொய்ச் செய்தியை நம்பிக்கொண்டு நீங்கள் இங்கே பேசுகிறீர்களா, இல்லையா?

**திரு. பி.ஆர். சுந்தரம்:** பத்திரிகைச் செய்தி தவறாக இருந்தால் நீங்கள் சொல்வதை நான் ஏற்றுக்கொள்கின்றேன்.

நேற்றைக்குக்கூட இங்கே பொதுவிவாதத்திலே உறுப்பினர்கள் எல்லாம் பேசினார்கள். அடுத்த ஆண்டு இந்த மாமன்றத்திலே தற்போதைய முதல்வர் அவர்கள் பட்ஜெட்டை சமர்ப்பிப்பார்கள் என்று கூறினார்கள். நான் அழுத்தந்திருத்தமாகக் கூறுகின்றேன். இந்த பட்ஜெட்டிலே நீங்கள் கூறியிருப்பதைப் பொறுத்தவரையில் இது மக்களுக்கு எதுவுமே பயன்தராத பட்ஜெட். ஆகவே இந்த பட்ஜெட்டைப் பார்த்து மக்கள் உங்களுக்கு 2000-லே தேர்தல் வந்தாலும் சரி, 2001-லே தேர்தல் வந்தாலும் சரி, உங்களுக்கு வாக்கு அளிக்கமாட்டார்கள். 2000-லே பட்ஜெட் சமர்ப்பித்தாலும் சரி, 2001-லே பட்ஜெட் சமர்ப்பித்தாலும் சரி எங்களுடைய புரட்சித் தலைவி அவர்கள் அடுத்த பட்ஜெட்டைச் சமர்ப்பிப்பார்கள் என்று நான் நேற்று பேசியவர்களுக்கு, என்னுடைய பதிலாகச் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

இன்றைக்கு இந்த ஆட்சியிலே எதிர்க்கட்சிகள் மீது பொய் வழக்கு போட்டுக் கொண்டிருக்கிற சூழ்நிலைதான் நிறைய இருக்கின்றது. இரண்டு நாட்களுக்கு முன்பு சென்னை மாநகராட்சியிலே, பட்ஜெட் விவகாரத்திலே, ஒரு மணி நேரத்திற்கு முன்பாக அந்த பட்ஜெட் leak ஆகிவிட்டது. வெளியிடப்பட்டு விட்டது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ஏற்கெனவே இது எழுப்பப்பட்டு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அதற்கெல்லாம் விரிவான பதிலைச் சொல்லி முடித்துவிட்டார்கள். திரும்ப அதைப் பற்றியே பேசிக்கொண்டிருந்தால் என்ன அர்த்தம்?

**திரு. பி.ஆர். சுந்தரம்:** முதலமைச்சர் சொன்னது, அது பட்ஜெட் அல்ல. வெற்றுக் காகிதம் என்றுதான் கூறினார்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அதுமட்டுமல்ல, அது யாரோ கோமாளித்தனமாகச் செய்த காரியம்.

**திரு பி.ஆர். சுந்தரம்:** அந்த வெற்றுக் காகிதம் வெளியாகியிருந்தால், ஏன் அந்த உறுப்பினர்மீது நீங்கள் வழக்கு போட வேண்டும்? பட்ஜெட் வெளியாகியிருந்தால் நீங்கள் வழக்கு போடலாம். வெற்றுக் காகிதம் வெளியானதற்கு நீங்கள் ஏன் வழக்கு போட வேண்டும்? மேலும் முதலமைச்சர் அன்றைக்குப் பேசும்போது.....

**திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சுந்தரம் அவர்கள் ஏன் வழக்கு போட்டீர்கள் என்ற ஒரு கேள்வியைக் கேட்டிருக்கிறார்கள். வழக்கு போட்டிருப்பது, மாநகராட்சி அலுவலகத்திலேயிருந்து ஒரு சில குறிப்புகள் வெளியே போயிருக்கின்றன. அதுகுறித்துதான் வழக்கு பதிவாகியிருக்கிறது என்பதை நான் இந்த மன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு.பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் அன்றைக்குப் பேசும்போது அது வெற்றுக் காகிதம் என்று சொன்னார். மேலும் அவர்கள் பேசும்போது யாரோ ஒரு கோமாளி என்று கூறினார்கள். ஒரு கட்சியினுடைய உறுப்பினர், ஓர் அரசியல் கட்சியினுடைய உறுப்பினர்.....

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** இப்படிச் செய்வது கோமாளித்தனம் என்ற பொருளில் சொன்னேன். கோமாளி என்று சொல்ல வேண்டிய ஆசை உங்களுக்கு இருந்தால் இன்னும் பத்து தடவை சொல்லுங்கள், கேட்டுக்கொண்டிருக்கிறோம்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நீங்கள் சற்று பின்னோக்கிப் பார்க்க வேண்டும். (மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பின்னால் திரும்பிப் பார்த்தார்கள்.) (பலத்த சிரிப்பு)

கடந்த காலத்தை நீங்கள் பின்னோக்கிப் பார்க்க வேண்டும். அன்றைக்கு புரட்சித் தலைவர் பொன்மனச்செம்மல் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது பால் கமிஷன் ரிப்போர்ட்டை ** அந்த பால் கமிஷன் அறிக்கையை. . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** நான் கேட்கிறேன். ** என்று சொன்னால் என்ன அர்த்தம்?

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,....

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பால் கமிஷன் ரிப்போர்ட் வெளியானது குறித்து வழக்கு போட்டார்கள். ஆனால், ஒரு முதலமைச்சர்மீது அந்த அரசாங்கம் வழக்கு போட்டு, அந்த வழக்கை முதலமைச்சர் சந்தித்து, அதற்குப் பிறகு அந்த அரசாங்கம் வழக்கிலிருந்து ஓடிவிட்டது நாட்டுக்குத் தெரியும். தேர்தலுக்காக சொந்தக்கட்சிக்காரர்கள் கொடுக்கின்ற பணத்திலே வீடு வாங்கக்கூடியவர்கள் எல்லாம் இப்படிப்பட்ட பேச்சைப் பேசுவது சரி அல்ல.

நண்பகல் 12-00

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அவர் யாரோ ஒரு கோமாளி அந்த அறிக்கையை....

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** Point of order. மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே ** என்று சொன்ன வார்த்தையை நீங்கள் அவைக் குறிப்பிலிருந்து நீக்கியாக வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** அந்த பால் கமிஷன் அறிக்கை மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு எப்படிக் கிடைத்தது? எப்படி அவர்கள்.....

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எந்த கமிஷன் அறிக்கையையும் அரசு வெளியிடாவிட்டால், பத்திரிகைக்காரர்களோ மற்றவர்களோ எடுத்து வெளியிடுவது என்பது நாடு முழுவதும் நடைபெற்று வருகிற காரியம். அரசு மறைத்த ஒரு காரியத்தை வெளியிட வேண்டுமென்று எதிர்க்கட்சி சார்பாக வெளியிடப்பட்டது, அது நாட்டுக்காகச் செய்யப்பட்ட பெரிய நீதியைக் காப்பாற்றுகிற ஒரு காரியம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** அந்த பால் கமிஷன் அறிக்கையை நீங்கள் எடுத்து அதை வெளியிட்டது தவறு என்பதற்குப் பிறகுதான் நீங்கள் அதிலே சிறைத் தண்டனையும் பெற்றீர்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அது எப்போதோ நடைபெற்றது. பால் தயிராகி, மோர் ஆகி, வெண்ணெய் ஆகி, நெய் ஆகி முடிந்து போய்விட்டது. அடுத்த point-க்கு வாருங்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** சிறை தண்டனை பெற்றார்கள் என்று சொல்கிறார். எந்தத் தீர்ப்பிலே யார் சிறைக்குப் போனது? ஒரு பொய் வழக்கு போட்டு, அந்த வழக்கு நடைபெற்றுக் கொண்டிருகிறது, அரசாங்கம் அந்த வழக்கை நடத்தவில்லை. முதலமைச்சருக்கு ஒன்றும் தண்டனை கொடுக்கவில்லை. இப்படி தவறான தகவல் கொடுத்துக்கொண்டு இருந்தால் இது அவையா? என்ன?

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, என்னைப் பற்றிப் பேசும்போது, மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள், ஒரு தவறான தகவலைக் கூறியிருக்கிறார்கள். அதை எந்த ஆதாரத்தில் கூறியிருக்கிறார்கள்? நீங்கள் அதை அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** என்ன தவறான தகவல் சொன்னார்? என்ன தவறான தகவல் சொன்னார் என்பதைக் கேட்கிறேன்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** நான் வீடு வாங்கியிருக்கிறேன் என்று எதை வைத்து அவர் சொல்கிறார்?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உங்களைக் குறிப்பிட்டுச் சொல்லவில்லையே! உங்கள் பெயரைக் குறிப்பிட்டுச் சொல்லவில்லை.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தேர்தலுக்காக, கட்சிப் பணத்தை கொடுத்தவர்கள், சிலர் தனக்காக வீடுகள் வாங்கிக் கொண்டவர்கள் எல்லாம் இந்த நாட்டிலே குற்றம் சுமத்துகிறார்கள் என்று சொன்னேன். இதை யார் சொன்னார்கள். யாரைப்பற்றி சொன்னார்கள் என்பது பத்திரிகையிலே வந்திருக்கிறது. நான் குறிப்பிட்டு சுந்தரம் அவர்களை, அ.தி.மு.க. தேர்தல் பணத்தை நீங்கள் வாங்கி வீடு வாங்கி விட்டீர்கள் என்று சொன்னால் அது தவறு. ஆனால் அ.தி.மு.க. வினுடைய தலைவி ஜெயலலிதா அவர்கள் அந்தச் செயல் வீரர்கள் கூட்டத்திலே சொல்லி, பத்திரிகையிலே வந்த செய்தியை நான் இங்கே குறிப்பிட்டேன்.



**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே.....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சுந்தரம் பேசி முடிக்கட்டும். இதிலே உங்களுக்கு என்ன இருக்கிறது? உட்காருங்கள். சுந்தரம் பேசட்டும், நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) இல்லை, இல்லை, திரு. சுந்தரம், பேசுங்கள்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** அந்த பால் கமிஷன் அறிக்கையிலே கூறப்பட்டுள்ள, அவர்தான், ஆர்.எம். வீரப்பன்.....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மறுபடியும் பால் கமிஷன் அறிக்கையிலே இருந்துகொண்டிருக்கிறீர்கள். அது எப்போதோ நடந்து முடிந்துபோன விவகாரம். அடுத்த point-க்கு வாருங்கள்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** யார் மீது, முதல்வர் அவர்கள் யாரைக் குறித்து குறை கூறினார்களோ, குற்றம் சாட்டினார்களோ அவர்தான் இன்றைக்கு இவருடைய கூட்டாளியாக இருந்துகொண்டிருக்கிறார் என்பதைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, விவசாயிகளுடைய பிரச்சினையைப் பற்றி அனைவருமே பேசிவிட்டார்கள். விவசாயிகள் பிரச்சினையைப் பொறுத்தவரையில் கரும்புக்கு டன் ஒன்றுக்கு 1000 ரூபாய் கொடுப்போம் என்று கூறிய அரசு... (மணியடிக்கப்பெற்றது) இதிலே 5 ஆண்டுகாலம் நாங்கள் இருந்தால் கொடுப்போம் என்று கூறினீர்கள். இப்போது 4 ஆண்டுகாலம் ஆகிவிட்டது. நீங்கள் இதைப்பற்றி நினைக்கவில்லை. அதேபோல விலையைத்தான் உயர்த்திக் கொடுக்க முடியவில்லை. அந்த விவசாயிகள் மீது தடியடி நடத்தியிருக்கிறீர்கள். சென்ற ஆட்சிக் காலத்தில்......

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவரவர்களே, நேற்று ஆரம்பித்து இதுவரையிலே விவசாயிகள் மீது தடியடி நடத்தினோம் என்ற ஒரு தவறான தகவலை இந்த மன்றத்திலே சொல்லி வருகிறார்கள். எந்த விவசாயி மீதும், கரும்புக்கு அதிக விலை கேட்ட எந்த விவசாயி மீதும் தடியடி நடத்தப்படவில்லை என்பதை நான் உறுதிபடச் சொல்கின்றேன். இது வேண்டுமென்றே சொல்லப்படுகிற ஒரு அபவாதம்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** உங்களுடைய ஆட்சிக் காலத்தில் மின்சாரக் கட்டணத்தை உயர்த்தியதற்காகப் போராடிய விவசாயிகள்மீது துப்பாக்கிச்சூடு நடத்தியவர்கள்தான் நீங்கள். அதற்காக அந்த விவசாயிகள்

. . .

[2000 மார்ச் 31

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்**: விவசாயிகள் என்று சொல்கிறீர்கள், மின்சாரக் கட்டணம் என்று சொல்கிறீர்கள். ஒன்றுக்கொன்று முரண்பாடாகப் பேசுகிறீர்கள். முதலில் நீங்கள் விவசாயிகள்தான் என்று சொன்னீர்கள். விவசாயிகள்மீது தடியடி நடத்தினார்கள் என்று சொன்னீர்கள். எந்த இடத்தில், எந்த விவசாயிகள் மீது எப்போது தடியடி நடத்தினார்கள் என்று முதலமைச்சர் கேட்டார். அதற்குப் பதில் சொல்லுங்கள். அதை விட்டுவிட்டு மறுபடியும் மின்சாரக் கட்டணத்திற்காக என்று பேசுகிறீர்கள்?

**திரு. பி.ஆர். சுந்தரம்:** ஆமாம், விவசாயிகள்மீது நீங்கள் அராஜகமாக தாக்குதல் நடத்தினீர்கள், முன்னர் துப்பாக்கிச் சூடு நடத்தினீர்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அதுதான் எங்கே நடந்தது?

**திரு. பி.ஆர். சுந்தரம்:** அதனால்தான் உங்களுடைய ஆட்சி வீட்டிற்கு அனுப்பப்பட்டது. அந்த விவசாயிகளுடைய கோபம் உங்கள்மீது இன்றைக்கு திரும்பியிருக்கிறது. அந்த விவசாயிகள்......

பிற்பகல் 12-05

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, விவசாயிகள் இந்த ஆட்சியை, ஏற்கெனவே நடைபெற்ற ஆட்சியை வீட்டுக்கு அனுப்பியதாக மாண்புமிகு உறுப்பினர் சொல்கிறார். மறுபடியும் அதே விவசாயிகள்தான் இந்த ஆட்சியை ஏற்படுத்தியதன் மூலம், இடைக்காலத்திலே இருந்த ஆட்சியினுடைய கேடுகளைத் துடைக்கும்படி முதலமைச்சருக்கு ஆதரவு அளித்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. பி.ஆர். சுந்தரம்:** அப்படி ஆதரவு அளித்த விவசாயிகளை நீங்கள் வஞ்சித்துவிட்டீர்கள். அதைத்தான் சொல்கின்றேன். அவர்களுக்கு கொடுத்த வாக்குறுதியை நீங்கள் செயல்படுத்தாத காரணத்தால்தான், எந்த விவசாயிகள் உங்களை ஆட்சியில் அமர்த்தினார்களோ, அந்த விவசாயிகளே உங்களை வீட்டுக்கு அனுப்புவதற்குத் தயாராக இருக்கின்றார்கள். இந்த ஆட்சியினுடைய நாட்கள் எண்ணப்படுகின்றன.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, விவசாயிகளுக்கு அந்த உரிமை உண்டு. எந்த ஆட்சியையும் வீட்டுக்கு அனுப்பலாம். குற்றவாளிகளாக இருந்தால் ஜெயிலுக்கு அனுப்புவதற்கும் அவர்களால் முடியும். (மேசையைத் தட்டும் ஒலி)



2000 மார்ச் 31]

**திரு. பி.ஆர். சுந்தரம்:** இன்றைக்கு கிருஷ்ணா குடிநீர்த் திட்டப் பிரச்சினைபற்றி பலரும் பேசியாகிவிட்டது. நான் இதிலே...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஆர். காந்தி.

**திரு. ஆர். காந்தி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அண்ணா வழியில் அயராது பாடுபட்டு, தமிழுக்கும் தமிழக மக்களுக்கும்....(குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அதிக நேரம் ஆகிவிட்டது. 20 நிமிடங்கள் பேசியிருக்கிறீர்கள்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** ஒன்றே ஒன்று. இரண்டே நிமிடங்கள் கொடுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சரி, பேசுங்கள்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** கிருஷ்ணா குடிநீர்ப் பிரச்சினை பற்றி நான் அதிகமாகப் பேச விரும்பவில்லை. அனைவரும் பேசியாகிவிட்டது. இறுதியாக முதலமைச்சர் அவர்கள் இங்கே வாக்குறுதி கொடுத்திருக்கின்றார்கள், ஏப்ரல் 15ஆம் தேதி கிருஷ்ணா குடிநீர் சென்னைக்கு வரும் என்று. ஏப்ரல் 15 அல்ல. ஏப்ரல் 30 ஆம் தேதி என்று வைத்துக் கொள்வோம். ஏப்ரல் 30 ஆம் தேதி முழுமையாக கிருஷ்ணா குடிநீர் சென்னைக்கு வரவில்லையென்றால் முதலமைச்சரும் பொதுப் பணித் துறை அமைச்சரும் இதற்குப் பொறுப்பேற்கத் தயாரா என்பதைக் கேட்க விரும்புகிறேன்.

இப்போது பாண்டிச்சேரியிலே ஆரம்பித்திருக்கிறது, அது தமிழகத்திலும் தொட்டும். அதேபோல, எங்கள் மீது போடப்பட்டுள்ள தனி நீதிமன்றங்கள் உங்களுக்கும் பொருந்தும். அந்தத் தனி நீதிமன்றத்தில் நீங்கள் அனைவருமே குற்றவாளிகளாக நிற்பீர்கள் என்பதை மட்டும் கூறிக்கொண்டு, நீங்கள் எத்தனை பொய் வழக்குகள் போட்டாலும், எங்களுடைய புரட்சித் தலைவி அவர்கள் மீண்டும் தமிழகத்தின் முதல்வராக வருவார்கள், வருவார்கள் என்று கூறி விடைபெறுகின்றேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** துணைத் தலைவர் அவர்களே, சுந்தரம் கடைசியாக, புரட்சித் தலைவி மீண்டும் வருவார்கள், வருவார்கள் என்று என்னை மாத்திரமல்ல, இந்த நாட்டிலே உள்ள 6 கோடி தமிழ் மக்களையும் பயமுறுத்தியிருக்கிறார். (சிரிப்பு)

**திரு. பி.ஆர். சுந்தரம்:** புரட்சித் தலைவி அவர்கள் தமிழகத்தின் முதல்வராக மீண்டும் இங்கே ஆட்சி அமைக்க வருவார்கள், வருவார்கள் என்று மீண்டும் மீண்டும் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** அதுதான் பயமுறுத்தியிருக்கிறார் என்று சொன்னேன், அவ்வளவுதான்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஆர்.காந்தி.

**திரு. ஆர். காந்தி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அண்ணா வழியில் அயராது பாடுபட்டு தமிழுக்கும் தமிழ் மக்களுக்கும் அரும் பணியாற்றும் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களே, வணக்கம். கலைஞர் அளித்த 2000-2001 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கை, அனைத்து தரப்பு மக்களையும் மகிழ்ச்சிகொள்ள வைக்கும் அறிக்கையாகும். அதற்காக தலைவர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். மனசாட்சி உள்ள அனைவரும் ஒத்துக்கொள்ளக்கூடிய அறிக்கை, பிற மாநில முதல்வர்களும் வியந்து பாராட்டும் அறிக்கை. ஆனால், மனசாட்சி இல்லாத சில ** கூப்பாடு போடுகிறார்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்**: நானே சொல்லிவிடுகிறேன். ** என்ற வார்த்தை நீக்கப்படுகிறது.

பிற்பகல் 12-10

**திரு. ஆர். காந்தி:** நமது சட்டமன்ற உறுப்பினர்கள் பலர் இந்த அறிக்கையைப் பாராட்டி சட்டமன்றத்திலே பேசி உள்ளார்கள். நானும் அதேமாதிரி பேசுவது சொன்னதையே சொன்னதுமாதிரியிருக்கும். அதனால், இதுபற்றி நான் எதுவும் பேசவில்லை. ஆனாலும், சட்டமன்றத்தில் நமது மாண்புமிகு டாக்டர் குமாரதாஸ் அவர்களும், மாண்புமிகு அழகிரி அவர்களும், மாண்புமிகு சுப்பராயன் அவர்களும் பேசினால் எப்பொழுதுமே நான் மிகவும் கவனிப்பேன். ஆனால், நேற்று நமது டாக்டர் குமாரதாஸ் பேசும்போது கொடுத்த தகவல் அவரையே அறியாமல் பேசியது என்று நினைக்கிறேன். காரணம் என்னவென்றால் டாக்டர் குமாரதாஸ் நல்ல தெள்ளத் தெளிவாக பேசுவார். த.மா.கா. தலைவர்கள், இங்கே வந்திருப்பவர்கள் நல்ல தரமான தலைவர்கள், நன்றாகப் பேசக்கூடியவர்கள்.

ஆனால் இப்பொழுது என்னவென்று தெரியவில்லை. தடுமாறித் தடுமாறிப் பேசிக்கொண்டிருக்கிறார்கள். நேற்று டாக்டர் குமாரதாஸ் பேசும்போது சொன்னார். இந்தச் சென்னையை சிங்காரச் சென்னையாக

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



ஆக்கிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் கிராமங்களுக்கு வேலை ஒன்றும் செய்யவில்லை என்று சொன்னார், அதுபோல் இன்னொன்றும் சொன்னார் அம்மையார், புண்ணியவதி அம்மையார் பற்றிப் பேசினார்கள். அம்மையார் ஆட்சிக் காலத்திலே வருமானம் 10 ஆயிரம் கோடி, இப்போது 21 ஆயிரம் கோடி. ஆனால் எந்த வேலைகளும் நடக்கவில்லையென்று சொன்னார்கள். உண்மைதான். டாக்டர் குமாரதாஸ் சொன்னதில் ஒன்றும் தப்பே கிடையாது. அம்மையார் ஆட்சியிலே 10 ஆயிரம் கோடி இப்போது 21 ஆயிரம் கோடி அல்ல -- அவர் சொன்னது 21 ஆயிரம் கோடி -- ஆனால் 18,500 கோடி. என்ன காரணம்? மீதிப் பணம் இதற்கு முன்பு எங்கே போயிற்று? **அந்தக் கால்வாய், கலைஞர் வந்தவுடன் அந்தக் கால்வாயைக் கஜானாவிற்குத் திருப்பிவிட்டார். அதுதான் 18,500 கோடி, (மேசையைத் தட்டும் ஒலி) டாக்டர் குமாரதாஸ் சொன்னபோது சொன்னார்கள். (குறுக்கீடு) டாக்டர் குமாரதாஸ் அவர்களுக்கு நான் சொல்லிக் கொள்கிறேன். (குறுக்கீடு) இந்த 18,500 கோடி என்றதனால் சொல்கிறேன். என்னைப் பொறுத்தவரையில், என் தொகுதிக்கு வாருங்கள். உங்களை நான் கூட்டிக் கொண்டுபோகிறேன். (குறுக்கீடு)

கலைஞர் ஆட்சிக் காலத்திலே எந்தக் கிராமத்திலே வேலை நடக்கவில்லை என்று சொல்லுங்கள். என் தொகுதியிலே (குறுக்கீடு) இரண்டு நகராட்சிகள் இருக்கின்றன. ஒரு நகராட்சிக்கு த.மா.கா. தலைவர்தான் இருக்கிறார்.

**திரு. இரா. தாமரைக்கனி:** என்ன ஆதாரத்தோடு சொல்கிறார்? (குறுக்கீடு)

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, இரண்டு மூன்று வாக்கியங்களில் விளக்கி, பிறகு வேண்டுமானால் மாண்புமிகு உறுப்பினர் திரு. காந்தி பேசிய அந்தச் சொல்லை எடுத்துவிடலாம் என்று நான் தங்களுக்கு சிபாரிசு செய்கிறேன். ஆனால் அவைக் குறிப்பிலே ஏறினாலும் ஏறாவிட்டாலும், ** என்பதற்கு என்ன ஆதாரம் என்று தாமரைக்கனி கேட்கிறார். மற்ற உறுப்பினர்களும் கேட்கிறார்கள். அ.தி.மு.க. உறுப்பினர்களும் கேட்கிறார்கள். பெரிய ஆதாரம் எதுவும் தேவையில்லை. Raid நடந்தபோது அங்கிருந்து எடுக்கப்பட்ட ஏறத்தாழ பல கோடி ரூபாய் சொத்துக்கள், நகைகள், ஆபரணங்கள் இவை எல்லாம்தான். ஆதாரங்கள். இந்த ஆதாரங்கள் நீதிமன்றத்திலே வைக்கப்பட்டிருக்கின்றன. அவர்கள்

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

அதை வங்கியிலே வைத்துப் பூட்டியிருக்கிறார்கள். விசாரணை நடைபெறும்போது எல்லாம் பெட்டி பெட்டியாய்த் தூக்கிக்கொண்டு, பெரிய பெரிய லாரிகளிலே தூக்கிக் கொண்டுவந்து வீடியோக்களிலும், சினிமாக்களிலும் காட்டிக் கொண்டிருக்கிறார்கள். அதுதான் ஆதாரம். இருந்தாலும்கூட, அது** என்று சொல்லாமல், போகக்கூடாத இடத்திற்குப் போயிற்று என்று சொல்லியிருந்தால் பொருத்தமாக இருந்திருக்கும். எனவே ** என்ற அந்த வாசகத்தை அவைக் குறிப்பிலிருந்து நீக்கி விட வேண்டுமென்று தங்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அவைக் குறிப்பிலிருந்து அது நீக்கப்படுகிறது. (குறுக்கீடு) அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது என்று சொல்லியாயிற்று. அதோடு விட்டுவிடுங்கள்.

**திரு. ஆர். காந்தி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நமது மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் குமாரதாஸ் அவர்களின் சந்தேகத்தைப் போக்க வேண்டுமென்றால் நிச்சயமாகவே, அவர்கூட சேர்ந்த உறுப்பினர்கள் யாராக இருந்தாலும் எனது தொகுதிக்குக் கூட்டிக் கொண்டு போகிறேன். இரண்டு Municipality-கள், இரண்டு பேரூராட்சிகள் இருக்கின்றன. என் தொகுதியில், அங்கு வந்து பார்க்கட்டும். ஒரு Municipality-க்கு த.மா.கா. தலைவர்தான். அம்மையார் ஒருவர் இருக்கிறார். ஒரு பேரூராட்சிக்கு த.மா.கா. தலைவர். 5 வருடங்களிலே புண்ணியவதியைப் பற்றிப் பேசினார்கள் அல்லவா? என்னென்ன வேலைகள் நடந்தன என்று பேசினார்கள் அல்லவா? இந்த நான்கு வருடங்களிலே கலைஞர் ஆட்சியிலே என்னென்ன திட்டங்களை நிறைவேற்றி இருக்கிறோம் என்று பார்க்கட்டும். அதிலே ஏதேனும் தவறு இருந்தால் எந்த நிபந்தனைக்கும் நான் தயார். M.L.A. பதவியை ராஜினாமா பண்ணத் தயார். இந்த 4 ஆண்டு காலத்திலே ஏதாவது நடந்திருந்தால், எல்லாவற்றுக்கும் நான் தயார். எந்தப் பந்தயத்திற்கும் தயார். மொட்டை அடித்துக் கொண்டு ஊர் சுற்றலாமா? சொல்லுங்கள். வாருங்கள், போகலாம்.

பிற்பகல் 12-15

அதுமட்டுமல்ல, தமிழ்நாட்டிலே ஒவ்வொரு பகுதியிலும், எங்கு போனாலும் சொல்கிறேன் இந்த 4 ஆண்டு காலத்திலே கலைஞர் ஆட்சியிலே திட்டங்களை நிறைவேற்றாமல் சும்மா இருந்தார்களா? சும்மாவே இங்கே உட்கார்ந்து கொண்டு கிருஷ்ணா நீர் பற்றி கேட்கிறார்கள். எதற்காக இங்கே கேட்க வேண்டும்? மேலே போய், 4

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



பேர் சேர்ந்து போய்ப் பார்க்க நம்மிடம் பணமா இல்லை? அங்கே போய் பார்த்துவிட்டு வந்து பேசுங்களேன். அது இல்லையே இங்கே நானும் பார்க்கிறேன். நாங்கள்தான் பேசாதவர்கள்; சும்மாவே பேசினால் தூக்கம் வருகிறது சார். இங்கே வந்தால், daily பேசியதையே பேசி Bore அடித்துக்கொண்டிருக்கிறார்கள் (சிரிப்பு). அவர்கள் போய் அங்கேப் பார்க்கட்டுமே. அதைவிட்டுவிட்டு, சவால் விடுகிறார்கள். எதற்கு அவர்களை அரசு அனுப்ப வேண்டும்? அவர்கள் அங்கு போய்விட்டு வரட்டும் அல்லது நான் சொல்கிறேன், என்னோடுகூட 10 பேர் வரட்டும்; அழைத்துப் போகிறேன்; ஒவ்வொரு இடத்திலும் என்னென்ன வேலை நடந்து இருக்கிறது என்பதைக் காட்டுகிறேன்.

இப்போது நமக்கு நாமே திட்டத்தின்கீழ் என் தொகுதியில் 1½ கோடி ரூபாய் வரை வேலைகளைச் செய்து இருக்கிறேன். அந்தத் திட்டத்தின்கீழ் செய்திருக்கிற வேலைகளை வந்து பாருங்கள் (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் காந்தி அவர்கள் இங்கே பேசுகிறபோது, நம்மிடம் என்ன பணமா இல்லை; வாங்க போகலாம்; போய்ப் பார்த்துவிட்டு வரலாம் என்றெல்லாம் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். எதிர்க்கட்சி என்கிற வகையிலே பொறுப்போடு நாங்கள் கேட்கிற கேள்விகள் எல்லாம்—1996-ஆம் ஆண்டே 3 T.M.C. தண்ணீரைக் கொண்டுவருவோம் என்று சொன்னார்கள்; 2000 ஆண்டுக்குள் 12 T.M.C. தண்ணீர் சென்னைக்கு வந்துவிடும் என்று சொன்னார்கள்; நிதிநிலை அறிக்கையிலே சொன்னதையெல்லாம் காற்றில் பறக்க விட்டுவிட்டார்கள், இன்னும் தண்ணீர் வரவில்லை என்பதற்காக நாங்கள் எங்களுடைய வாதத்தை எடுத்து வைக்கிறோம்; அவர்கள் பக்கம் என்ன வாதம் இருக்கிறது என்று சொல்லலாமேயொழிய, அவர்கள் இந்த அவையிலே எதிர்க்கட்சிகள் எல்லாம் ஏதோ சும்மா பேசிக் கொண்டிருக்கிறார்கள் என்று சொல்வது —இது அவையை மதிக்கக்கூடிய ஒன்றாக எனக்குத் தெரியவில்லை; அவையை அவமானப்படுத்துவதுபோல் பேசிக்கொண்டிருப்பதை நீங்கள் அனுமதிக்கலாமா; அதை நீங்கள் அவைக் குறிப்பிலிருந்து எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

**திரு.ஆர். காந்தி:** அதில் தப்பு ஒன்றும் இல்லையே, நமக்கு நாமே திட்டம் கலைஞர் கொண்டுவந்து இருக்கிறார். நமக்கு நாமே திட்டம் நன்றாகச் செயல்படவில்லை என்று சொல்கிறீர்கள். என் பகுதியில்

அத்திட்டம் நடக்கிறது. நீங்கள் வாருங்கள், அந்தத் திட்டத்தைப் போய் பார்ப்போம். அடுத்தது, வருமுன் காப்போம் திட்டம்பற்றி நீங்கள் சொல்லி இருக்கிறீர்கள். அத்திட்டம்பற்றி நேற்று உறுப்பினர் திரு. குமாரதாஸ் அவர்கள் சொன்னார்கள்..

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, பேசுவதில் ஒவ்வொருவருக்கும் ஒரு பாணி. காந்தியினுடைய பாணி என்ன என்பது நம்முடைய ஞானசேகரனுக்கு நன்றாகத் தெரியும், ஏனென்றால், நாமெல்லாம் ஒன்றாக இருந்தபோது, அவர் இங்கே பேசி இருக்கிறார்; அப்பொழுது பயன்படுத்தக் கூடாத வார்த்தைகளை எல்லாம்கூட பயன்படுத்தி பேசி இருக்கிறார். சத்துணவுக் கூடத்திற்குப் போனால், எது நல்லா இருக்கிறது என்று ஒன்று சொன்னார். (சிரிப்பு) அப்போது ஞானசேகரனுக்கு ரொம்ப இனிப்பாக இருந்தது; (சிரிப்பு) அது Parlimentary word ஆக தெரிந்தது; இப்போது தெரியவில்லை. இருந்தாலும், காந்தி தன்னுடைய பாணியை கொஞ்சம் அடக்கமாக மாற்றிக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். (சிரிப்பு)

**திரு. ஆர். காந்தி:** வருமுன் காப்போம் திட்டம் இருக்கிறது. அத்திட்டத்தின்கீழ் அங்கே என்ன நடக்கிறது என்பதைக் காண வாருங்கள் போய் பார்ப்போம். சும்மாவே, அங்கே எதுவுமே செய்யவில்லை; கலைஞர் ஆட்சியிலே ஒன்றும் நடக்கவில்லை என்று சொன்னார்கள். குமாரதாஸ் அவர்கள் சொன்னார்கள். 21 இலட்சம் மாணவர்களுக்கு இருக்கிற வியாதிகளை அவர் சொன்னார். இந்தமாதிரி திட்டங்களை கலைஞர் ஆட்சியிலே இல்லாமல், அதற்கு முன்னால் காங்கிரஸ் ஆட்சியில் இருந்தே நீங்கள் நிறைவேற்றியிருந்தால், யாருக்குமே வியாதி வந்து இருக்காது. இப்போதுதான் கலைஞர் அவர்கள் அந்தத் திட்டத்தைக் கொண்டுவந்து இருக்கிறார்கள். மாணவர்களை check பண்ணிய உடனே இத்தனை பேர்களுக்கு வியாதி இருக்கிறது என்று சொல்கிறார்கள். வியாதியை போக்குவதற்குத்தான் வருமுன் காப்போம் திட்டம், இந்தத் திட்டத்தை நீங்கள் முதலிலேயே காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலேயே... (குறுக்கீடு) (சிரிப்பு) சிரிக்காதீர்கள் (குறுக்கீடு).

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே..

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** He is not yielding.



**திரு. ஆர். காந்தி:** அந்தத் திட்டம் உங்களுக்கு ஒரு கேலிக்கூத்தாக இருக்கிறது. ஆனால், பொது மக்கள் அதை ரொம்ப வரவேற்கிறார்கள்; அதை நீங்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும். (மணி அடிக்கப்பெற்றது) நான் எப்போதும் பேசுவதில்லை, அதனால் 10 நிமிடம் கொடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். அது போதும், நிறைய திட்டங்கள் இருக்கின்றன. பொதுவாக, இந்தமாதிரி நல்ல திட்டங்களை இதற்கு மேலே யாராலே செய்ய முடியும்? நிச்சயமாக முடியாது. திரு. சுந்தரம் நிச்சயமாகச் சொல்கிறேன், கலைஞர் ஆட்சியைத் தவிர, இந்த மாதிரி திட்டங்களை நீங்கள் எங்கு தேடிப் பார்த்தாலும் கிடைக்காது, இன்னும் ஒன்று சொல்கிறேன். அம்மையாரைபற்றி நீங்கள்கூட சொன்னீர்கள், அடுத்து அந்த அம்மையார்தான் அறிக்கை வாசிப்பார். (குறுக்கீடு) என்று சொன்னீர்கள். இது போன்ற நல்ல திட்டங்களை தலைவர் கலைஞர் அவர்களைத் தவிர வேறு யாராலும் செய்ய முடியாது.

**திரு. பி. ஆர். சுந்தரம்:** துணைத் தலைவர் அவர்களே..

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இல்லை, இல்லை, அவர் முடித்த உடனே வாய்ப்புத் தருகிறேன்.

**திரு. ஆர். காந்தி:** இந்த நிதிநிலை அறிக்கை மீதான விவாதத்தின் மூலமாக நான் சொல்லிக்கொள்கிறேன். திரு. சுந்தரம் சொன்னார்; அடுத்தது, "அம்மையார்தான் 2000 ஆண்டானாலும், 2001 ஆம் ஆண்டானாலும் அறிக்கையை எங்கள் அம்மையார்தான் வாசிப்பார்" என்று சொன்னார். நிச்சயம் அது பொய்யே கிடையாது, ஜெயிலில் வாசிப்பார்கள்; இங்கு Assemblyயில் இல்லை. (குறுக்கீடு) ஜெயிலில் தான் வாசிக்க முடியுமே தவிர, இங்கு வாசிக்க முடியாது.

பிற்பகல் 12-20

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** டாக்டர் க. கிருஷ்ணசாமி (குறுக்கீடு) திரு. பி.ஆர். சுந்தரம்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 2000, 2001ஆம் ஆண்டில் ஜெயிலுக்குப் போவது யார் என்று பார்த்துக்கொள்வோம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** டாக்டர் க. கிருஷ்ணசாமி.

***டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடந்த 5 சட்டமன்றக் கூட்டத் தொடர்களிலேயும் நான் தொடர்ந்து வலியுறுத்தி வந்த தாழ்த்தப்பட்ட மக்களுக்கான இட ஒதுக்கீடு குறித்த வெள்ளை அறிக்கையை இந்த மாமன்றத்திலே வைப்பதற்கு முடிவெடுத்து, இந்த நிதிநிலை அறிக்கையிலே அறிவித்திருக்கிற மாண்புமிகு முதல்வர் அவர்களை புதிய தமிழகம் கட்சியின் சார்பாக நான் பாராட்டுகின்றேன். நன்றியையும் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இந்த நிதிநிலை அறிக்கையிலே சொல்லப்பட்டிருக்கக்கூடிய பல அம்சங்களில், குறிப்பாக மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபைச் சேர்ந்த, 3ஆம் வகுப்பிலிருந்து 5ஆம் வகுப்பு வரை படிக்கும் மாணவிகளுக்கு ஆண்டிற்கு 500 ரூபாய் ஊக்க உதவி நிதி கொடுக்கப்படும் என அறிவித்திருப்பதும், அதைப்போல 6ஆம் வகுப்பு படிக்கக்கூடிய 30,000 மாணவியருக்கு மாதமொன்றுக்கு 100 ரூபாய் வழங்கப்படும் என்று அறிவித்திருப்பதையும் நான் வரவேற்கிறேன். ஆனால், அதே நேரத்திலே நாட்டிலே இன்னும் மேலாடைகூட உடுத்த வழி இல்லாமல் இருந்து கொண்டிருக்கக்கூடிய தாழ்த்தப்பட்ட, ஏழையெளிய மாணவிகளுக்கு ஏன் அந்த ஊக்க உதவி நிதி வழங்கப்படக் கூடாது, அந்த மாணவிகள் என்ன பாவம் செய்தார்கள் என்ற வினாவினை இந்த மாமன்றத்திலே எழுப்பக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆதிதிராவிடர் நலத் துறையின் சார்பாக கடந்த ஆண்டே, ஆதிதிராவிடர் நலத் துறையின்கீழ் படிக்கக்கூடிய மாணவ, மாணவியர்களுக்கு 'தடைபடா பெண் கல்வித் திட்டம்' என்ற நல்ல திட்டத்தினை மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். அதன் மூலமாக, 90,000 மாணவ, மாணவியர்கள் பயனடைந்து வருகிறார்கள். அதற்காக 6 கோடி ரூபாயும் ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆதிதிராவிடர் நலன் காப்பதில் இந்தியாவுக்கே முதல்வராக விளங்கக்கூடிய (மேசையைத் தட்டும் ஒலி) நம்முடைய முதல்வர் அவர்கள் ஆதிதிராவிடர் நலத் துறைக்கு அளித்த பிறகுதான் பிற்பட்டோர் நலத் துறைக்கு இத்திட்டத்தினை அளித்திருக்கிறார்கள் என்ற விவரத்தையும் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தாழ்த்தப்பட்ட மாணவிகளுக்கும் ஊக்க உதவித் தொகை கொடுக்கக்கூடிய திட்டத்திற்கு நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.



இந்த நிதிநிலை அறிக்கையிலே குறிப்பாக, தாழ்த்தப்பட்ட, ஏழையெளிய மக்களுக்கு பயனளிக்கக்கூடிய தொகுப்பு வீடுகளின் எண்ணிக்கை கடந்த ஆண்டைக்காட்டிலும் இந்த ஆண்டு பாதிக்கும் மேலாக குறைக்கப்பட்டிருக்கிறது. தொகுப்பு வீடுகள் கிராமப்புறங்களில் வாழ்கின்ற ஏழையெளிய தாழ்த்தப்பட்ட மக்களுக்கு பயன்பட்டு வருகிறது. ஒவ்வொரு கிராமத்திற்கும் சட்டமன்ற உறுப்பினர்களெல்லாம் மக்களுடைய குறைகளைக் கேட்பதற்குச் செல்கின்றபோது, மக்கள் வைக்கக்கூடிய மிக முக்கியமான கோரிக்கை, ஒவ்வொரு கிராமத்திலும் தொகுப்பு வீடுகள் வேண்டுமென்பதுதான். ஆகையால் தொகுப்பு வீடுகளின் எண்ணிக்கையைக் கூட்டுவதற்குப் பதிலாக பாதியாகக் குறைத்திருப்பது எந்தவிதத்திலும் நியாயமில்லை. மத்திய அரசினுடைய நிதி இதற்கு வரவில்லை என்ற காரணம் சொல்லப்பட்டாலும்கூட, மத்திய அரசு எவ்வளவு நிதி கொடுக்கவில்லையோ, அந்த நிதியை தமிழ்நாடு அரசே ஏற்றுக்கொண்டு, கடந்த ஆண்டைப்போல, இந்த ஆண்டும் 60,000 வீடுகள் கட்டிக்கொடுக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் வலியுறுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்தபடியாக, 1996 ஆம் ஆண்டு இதே சட்டமன்றத்திலே மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் ஏழையெளிய மக்கள், குறிப்பாக, குடிசைகளில் வாழ்கின்ற மக்கள் பயன்பெற 1 இலட்சம் வீடுகளுக்கு ஒற்றை விளக்கு மின்சாரம் இலவசமாக அளிப்பதாக அறிவித்தார்கள். அப்படி 1 இலட்சம் வீடுகளுக்கு இலவச ஒற்றை விளக்கு மின்சாரம் அளிப்பதற்குப் பதிலாக, பல்லாண்டுகளாக இலவசமாகக் கொடுக்கப்பட்டு வந்த ஒற்றை விளக்கு மின்சாரத்தையும் இரத்து செய்து, மீட்டர் பொருத்துவதற்கு மின்சார வாரியம் மூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக நான் அறிகிறேன். பல கிராமங்களில் குறிப்பாக...

பிற்பகல் 12-25

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் கிருஷ்ணசாமி அவர்கள் சொல்வது உண்மை அல்ல. கடந்த காலங்களில் எப்படி குடிசைகளில் ஒரு விளக்கு வைத்திருக்கின்றவர்களுக்கு இலவசமாக மின்சாரம் தந்து கொண்டிருந்தோமே அதே நிலைதான் இப்போதும் நீடிக்கிறது. கலைஞர் ஆட்சி இருக்கின்ற வரையிலும் அதேநிலைதான் நீடிக்கும், அவர்களில் யாருக்கும் மீட்டர் பொருத்தவில்லை. ஆனால், சிலர் ஒரு விளக்கு திட்டத்தின்கீழ் மின்சாரத்தைப் பெற்றுக்கொண்டு டி.வி. வைத்துக்கொண்டிருக்கிறார்கள், ரேடியோ

[திரு. ஆற்காடு நா. வீராசாமி] [2000 மார்ச் 31

வைத்துக்கொண்டிருக்கிறார்கள். Washing Machine கூட வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்களுக்குத்தான் மீட்டர் பொருத்தப்படுகிறதே தவிர, ஒரு விளக்கு மட்டும் என்பது 40 வாட்ஸ் என்பதற்குப் பதிலாக 100 வாட்ஸ் பல்பாக இருந்தாலும், அவர்களுக்கு மீட்டர் வைப்பது கிடையாது.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திருநெல்வேலி மாவட்டத்தில் தென்கலம் பகுதியில் ஒற்றை விளக்கு இருக்கக்கூடிய வீடுகளுக்குக்கூட மின்சார இணைப்பு துண்டிக்கப்பட்டு, அவர்கள் மீட்டர் பொருத்துவதற்கு வற்புறுத்தப்பட்டிருக்கிறார்கள். இதை நான் அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவரக் கடமைப்பட்டிருக்கிறேன். அப்படி தவறாக அவர்களின் மின் இணைப்பு துண்டிக்கப்பட்டிருந்தால், மீண்டும் அவர்களுக்கு மின் இணைப்புக் கொடுப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் வலியுறுத்த விரும்புகிறேன்.

தென் மாவட்டங்களுடைய வளர்ச்சிக்காக தாங்கள் எடுத்திருக்கக்கூடிய முயற்சிகளை பாராட்டுகிறேன். அதே நேரத்திலே, ஏறக்குறைய 10, 11 மாவட்டங்கள், தென்மாவட்டங்கள், குறிப்பாக, திருநெல்வேலி, தூத்துக்குடி, விருதுநகர், இராமநாதபுரம், மதுரை, திண்டுக்கல், தேனி, சிவகங்கை மற்றும் புதுக்கோட்டை போன்ற இந்த மாவட்டங்களுக்கு ஒட்டுமொத்தமாக திருநெல்வேலி மாவட்டத்திலே இருக்கக்கூடிய நாங்குநேரி பகுதியிலே மட்டும் ஒரு குறிப்பிட்ட தொழிற்சாலையைக் கொண்டுவருவதன் மூலமாக ஒட்டு மொத்தமாக வேலைவாய்ப்பின்மையைப் போக்கிவிட முடியாது. ஒட்டப்பிடாரம் தொகுதியிலே, குறிப்பாக, வறட்சிக்கு ஆளான பகுதி, அந்தப் பகுதியில் தென் மாவட்டங்களில் அதிகமாக கலவரங்களுக்கு ஆளான அந்தப் பகுதியில், ஒரு தொழிற்சாலை தொடங்க வேண்டுமென்று நான் தொடர்ச்சியாகச் சொல்லி வந்திருக்கிறேன். ஆனால், இந்த நிதிநிலை அறிக்கையில் குறிப்பிட்டு சொல்லக்கூடிய அளவுக்கு அதற்கு எந்த நிதியையும் ஒதுக்காதது வருத்தமளிக்கிறது, வேதனையளிக்கிறது. எனவே, முதல்வர் அவர்கள் இதைக் கருத்திலே கொண்டு 500 பேருக்கோ அல்லது 1000 பேருக்கோ வேலையளிக்கக்கூடிய தொழிற்சாலைக்கு நிதி ஒதுக்குமாறு இந்த நேரத்திலே வற்புறுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

வன்முறை தவிர்த்து வறுமையை வென்றிட ஆதிக்கமற்ற சமுதாயம் அமைத்திட வேண்டும் என்ற நோக்கம்தான் தங்களுடைய நோக்கமாக இருக்கிறது என்று சொல்லியிருக்கிறீர்கள். நான் அதைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அதே நேரத்திலே, இந்த நாட்டிலே வாழ்ந்து



2000 மார்ச் 31] [டாக்டர் க. கிருஷ்ணசாமி]

கொண்டிருக்கக்கூடிய தாழ்த்தப்பட்ட மக்களில் நூற்றுக்கு தொண்ணூறு பேர் நிலமற்ற கூலித் தொழிலாளர்களாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். குறிப்பாக, தஞ்சை மாவட்டம், திருவாரூர் மாவட்டம், நாகப்பட்டினம் மாவட்டம், கடலூர் மாவட்டம் ஆகிய இடங்களில் வாழக்கூடிய அத்தனை விவசாயத் தொழிலாளர்களும் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்களாக இருக்கிறார்கள். ஆனால், ஏற்கெனவே ஆதீனங்கள் இடத்திலே, கோயில் இடத்திலே இருக்கக்கூடிய நிலங்களை எல்லாம் ஆதிக்க சாதியினரும், ஆதிக்க சக்திகள் மட்டுமே அந்த நிலங்களை எல்லாம் வைத்திருக்கிறார்களே தவிர, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு என்று ஒரு துண்டு நிலம்கூட கடந்த 10, 20 ஆண்டுகாலமாக செல்லாது இருப்பது வேதனை அளிக்கக்கூடியதாக இருக்கிறது. இன்னும் அவர்கள் 50 ரூபாய் கூலிக்கும், 55 ரூபாய் கூலிக்கும் மட்டுமே வேலை செய்து தங்களுடைய காலங்களைக் கழிக்க வேண்டிய நிலையில் இருந்துகொண்டிருக்கிறார்கள். எனவே, இந்த நாட்டிலே வன்முறை தவிர்த்து வறுமையை வென்றிட வேண்டுமென்றால், நாட்டிலே வாழ்ந்துகொண்டிருக்கக்கூடிய ஏழைத் தொழிலாளர்கள், கூலித் தொழிலாளர்கள், நிலமற்ற விவசாயிகள், குறிப்பாக, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு நிலங்கள் வழங்குவது ஒன்றுதான் வன்முறை தவிர்த்து வறுமையை வென்றிடக்கூடிய வழியாக இருக்கும் என்று சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நாட்டிலே ஒரு தனி மனிதனுக்கு உணவில்லை என்றால் இச்செகத்தினை அழித்திடுவோம் என்று பாரதியார் சொல்லி எத்தனையோ ஆண்டுகாலம் ஆகியும்கூட இன்னும் கூலித் தொழிலாளர்களாக எத்தனை ஆண்டுகாலம் இந்த நாட்டில் இருக்கக்கூடிய தாழ்த்தப்பட்ட மக்கள் வாழ்ந்து கொண்டு இருப்பார்கள் என்பதை இந்த மாமன்றத்திற்குச் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இங்கே மிக முக்கியமான ஒரு பிரச்சினை, தொழிலாளர்களுடைய வாரியம். அதுவும், குறிப்பாக, unorganised sector என்று சொல்லக்கூடிய தொழிலாளர்களுக்கு வாரியம் அமைப்பதுபற்றி சொல்லியிருக்கிறீர்கள். ஆனால், இந்த நாட்டிலே வாழ்ந்து கொண்டிருக்கக்கூடிய தோட்டத் தொழிலாளர்கள் பல இலட்சம் பேர் மாஞ்சோலை ஹைவேஸ், வால்பாறை, நீலகிரி போன்ற பகுதிகளில் வாழ்ந்து கொண்டிருக்கக்கூடிய தோட்டத் தொழிலாளர்கள் ஏறக்குறைய 10 இலட்சத்திற்கு மேற்பட்டவர்கள் வாழ்க்கையை முன்னேற்றுவதற்கு தோட்டத் தொழிலாளர்கள் வாரியம் ஒன்றைத் தொடங்குவதற்கு இந்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். ஏனென்றால் இன்னும் பல தோட்டத் தொழிலாளர்கள் குறைந்த கூலிக்கு, 35 ரூபாய் கூலிக்குக்கூட வேலை

செய்து கொண்டிருக்கிறார்கள். நான் மாஞ்சோலை பிரச்சினையை எடுத்தபோது, நான் விமர்சிக்கப்பட்டேன், என்னுடைய போராட்டங்கள் கொச்சைப்படுத்தப்பட்டன. இருந்தாலும்கூட, நான் இன்னும் இந்த மாமன்றத்திற்குச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த அரசு மாஞ்சோலை தோட்டத் தொழிலாளர் பிரச்சினை அத்தனையையும் முடிவுக்குக் கொண்டு வந்ததாக ஏற்கெனவே செய்தித்தாள்களில் தகவல் கொடுக்கப்பட்டிருக்கிறது. இருந்தாலும்கூட இன்றுவரையிலும் அரசு அந்த நிர்வாகத்திற்கு அறிவுரை சொல்லியும், எத்தனையோ முயற்சிகள் எடுத்தும்கூட, இந்த நாட்டிலே அரசினுடைய நிலங்களை அபகரித்து 10,000 ஏக்கருக்கும் மேற்பட்ட நிலங்களை வெறும் 10 ரூபாய்க்கு குத்தகைக்கு எடுத்து வைத்துக்கொண்டு, தொழிலாளர்களை சுரண்டி விடக்கூடிய அந்த நிர்வாகம் அரசினுடைய அறிவுரைகளை ஏற்றுக்கொள்ளாமல், இன்னும் 2000-க்கு மேற்பட்ட தொழிலாளர்களை வேலைக்கு எடுத்துக்கொள்ளாமல் வைத்திருக்கிறார்கள்.

பிற்பகல் 12-30

இயந்திரங்களை அமல்படுத்தமாட்டோம், புகுத்த மாட்டோம் என்று அரசு சொன்ன அறிவுரையை அன்று ஏற்றுக்கொண்ட நிர்வாகம், இன்று இயந்திரங்களைப் புகுத்தி, தொழிலாளர்களுக்கு வேலையில்லாமல் செய்கிறார்கள். அதுமட்டுமல்ல, அன்று அரசு கொடுத்த வாக்குறுதி, தொழிலாளர்கள் வீட்டில் இருந்து வேலைக்காட்டிற்கு செல்வதற்கு 30 நிமிட நேரம் அன்று grace period என்று கொடுக்கப்பட்டது. ஆனால், இன்று காலை 7.30 மணிக்கே வேலைக்கு வர வற்புறுத்தப்படுகிறார்கள். இயந்திரங்களைப் பயன்படுத்த மறுக்கக்கூடிய தொழிலாளர்களுக்கு 7 நாள் சம்பளத்தை, முன்பு வேலை செய்த சம்பளத்திலிருந்து பிடித்தம் செய்கிறார்கள். இப்படி கொடுமை எல்லாம் நடந்து கொண்டிருக்கிறது. இன்னும்..

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எங்களுடைய தொழிலாளர் நலத் துறையைப் பொறுத்தவரையில் முதலாளிகளுக்கும், தொழிலாளிகளுக்கும் பிரச்னை வருகிறபோது, எங்களுடைய தொழிலாளர் நலத் துறையைப் பொறுத்தமட்டில் பாதுகாப்பதிலே மிகுந்த அக்கறையுடன் இருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் சொல்வது உண்மையான செய்திகளுக்கு அப்பாற்பட்டது. வேலை நிறுத்தத்தின் காரணமாக போனசும், பண்டிகை முன்பணம் தர மறுக்கப்பட்ட நேரத்திலே நாங்கள் கொடுத்திருக்கிறோம். அதற்கு ஏற்பாடு செய்திருக்கிறோம். இதுபோலவே, வேலை



நிறுத்தத்தின்போது, 716 தொழிலாளர்கள் suspend செய்யப்பட்டார்கள். பேச்சுவார்த்தை நடத்தி, அவர்களை மீண்டும் வேலைக்கு அமர்த்தினோம். அதைப்போலவே, நான் ஒவ்வொன்றாக சொல்லிக்கொண்டே போகலாம். ஆனால், சில கோரிக்கைகள் பேச்சு வார்த்தையின் மூலமாகத்தான் தீர்க்கப்படவேண்டும். காரணம், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதுபோல் இல்லாமல், ஏற்கெனவே 18(1) settlement போட்டு சம்பள பிரச்சினை தீர்க்கப்பட்டிருக்கிறது. ஒரு சில பிரச்சினைகள் இருந்தால், அதனைத் தொடர்ந்து 4, 5 முறை பேசியிருக்கிறோம். இப்போதுகூட, 18 ஆம் தேதி பேசவிருக்கிறார்கள். ஆக இத்துறை, நிர்வாகத்தை கட்டாயப்படுத்தி கோரிக்கைகளை நிறைவேற்ற எல்லா முயற்சிகளையும் செய்து வருகின்றது.

**டாக்டர். க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் அமைச்சர் அவர்களுடைய முயற்சியை குற்றம் சொல்லவில்லை. அமைச்சர் அவர்கள் நிர்வாகத்திற்கு அறிவுரை சொல்லியும், ஒத்துக்கொண்டும்கூட இன்று வரை ஒரு கோரிக்கையைக் கூட நிர்வாகம் ஏற்று அமலாக்கவில்லை என்பதுதான் என்னுடைய குற்றச்சாட்டு. தொழிலாளர்கள் அத்துமீறி நடந்தால் தவறான கலாச்சாரம், என்று சொல்கிறார்கள். ஆனால், நிர்வாகம் தவறான கலாச்சாரத்திற்குச் செல்லலாமா? இது வேறு எங்காவது கொண்டு செல்லுமா, இல்லையா? தொழிலாளர்கள் எத்தனை நாளைக்குத்தான் பட்டினி கிடப்பார்கள். நான் புதிய கோரிக்கை ஒன்றும் வைக்கவில்லை. ஏறத்தாழ 1998 ஆகஸ்ட் மாதத்தில் இருந்தே இந்த ஒரே பிரச்சினையைச் சொல்லிக்கொண்டிருக்கிறேன். எனக்குகூட சங்கடமாக இருக்கிறது. ஆனால், குறிப்பிட்ட காலம் நிர்ணயம் செய்து ஒத்து வரவேண்டுமென்று இந்த அரசு சொல்லப்போகிறதா இல்லையா என்பதுதான் என்னுடைய கேள்வி. பேச்சுவார்த்தை என்பதற்கும் ஒரு எல்லை வேண்டுமா? இல்லையா?

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு உறுப்பினர் வைத்த கோரிக்கைகள் எல்லாமே தீர்வு காணப்பெற்று ஒரே ஒரு கோரிக்கை, அது Tribunal-ல் இருக்கிறது. காரணம், 8 மணி நேரம் வேலை செய்ய வேண்டுமென்ற கணக்கை அவர்கள் 7 மணி நேரமாகப் புரிந்து கொண்டு ஒரு மணி நேரம் வேலைக்குப் போகவில்லை. எனவே, standing order-ஐக் காட்டி நிர்வாகம் அந்த ஒரு மணி நேரத்திற்குச் சம்பளம் தர இயலாது என்று அரை நாள் சம்பளத்தைப் பிடித்தார்கள். No work, No Pay என்று அதையும் நாங்கள் மாற்றி, ஒரு மணி நேரத்திற்கு வந்தார்கள். அந்த ஒரு மணி நேர பிடித்தத்தையும் ஏற்றுக்கொள்ளாமல், அது சரிதானா

[திரு. ஆர். இரகுமான்கான்] [2000 மார்ச் 31

என்று tribunal-க்கு அனுப்பியிருக்கிறோம். அந்த ஒரு பிரச்சினை தவிர மற்றபடி உறுப்பினர் சொல்லி இருக்கக்கூடிய எல்லாப் பிரச்சினைகளும் தீர்க்கப்பட்டிருக்கின்றன. strike-க்குப் பின்னால் உறுப்பினர் சில கோரிக்கைகள் வைத்திருக்கிறார். Temporary Labourers சில பேரை மீண்டும் வேலைக்கு எடுத்துக்கொள்ள வேண்டும், 8 மணி நேரத்திற்குள் 900 கவாத்து வெட்ட வேண்டுமென்று கட்டளை பிறப்பிக்கக்கூடாது போன்ற ஒரு சில கோரிக்கைகள் வைத்திருக்கிறார். அந்தக் கோரிக்கைகள் குறித்து பேச்சுவார்த்தை நடத்தி வெற்றிகரமாக முடிக்க முடியும்.

பிற்பகல் 12-35

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இலையைப் பறிப்பது, கவாத்து வெட்டுவது போன்ற பணிகளில் இயந்திரமயமாக்குதல் கூடாது என்ற தொழிற்சங்கத்தின் கோரிக்கையை அரசின் தலையீட்டால் நிர்வாகம் ஏற்றுக்கொண்டது என்று கடந்த ஆகஸ்ட் மாதத்திலே அறிவிக்கப்பட்டும்கூட, பிப்ரவரி மாதம் இந்த இயந்திரத்தைப் புகுத்தி 900 செடிகளை மதியம் 1½ மணிக்குள் வெட்டாமல் இருந்த தொழிலாளர்களிடமிருந்து 7 நாட்கள் சம்பளத்தைப் பிடிப்பதற்கு notice கொடுத்து சம்பளத்தையும் பிடித்திருக்கிறார்கள். எனவே, தொடர்ச்சியாக அந்தத் தொழிலாளர்களை துன்புறுத்துவதையே நோக்கமாக அந்த நிர்வாகம் செய்து கொண்டிருக்கிறது என்பதை நான் வலியுறுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். எனவே, இதிலே ஒரு தீர்க்கமான முடிவு எடுக்கப்பட வேண்டும் என்பது என்னுடைய வேண்டுகோள்.

தோட்டத் தொழிலாளர்கள் கொத்தடிமைகளாக நடத்தப்படுகிறார்கள் என்று நான் சொன்னபோது, அதை இந்த அவையிலேயே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுத்தார்கள். ஆனால், நான் இந்த மாமன்றத்தின் வாயிலாக தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன், நிரந்தரம், நிரந்தரமற்ற, பகுதி நேரம் என்று அழைக்கப்படுகின்ற ஏறத்தாழ 10 இலட்சத்திற்கும் மேற்பட்ட தோட்டத் தொழிலாளர்கள் தமிழ்நாட்டிலே இருக்கிறார்கள். ஒவ்வொருவரும் எப்படி அரசியல் கட்சியிலே விருப்பப்படி இருக்கலாமோ, அதைப்போல ஒருவர் இந்த ஆண்டு ஒரு தொழிற்சங்கத்திலே இருக்கலாம், அடுத்த ஆண்டு வேறு தொழிற்சங்கத்திற்குச் செல்லலாம். ஆனால், சமீபத்திலே, கடந்த ஜனவரி மாதம், 12, 13, 14 ஆகிய தேதிகளில் போடப்பட்ட சம்பள ஒப்பந்தத்தில் எங்களுக்கு எந்தவிதமான உடன்பாடும் கிடையாது என்று பல இலட்சம் தொழிலாளர்கள் எதிர்ப்புத் தெரிவித்தார்கள். அந்தத் தொழிலாளர்களுடைய எதிர்ப்பையும் மீறி ...



2000 மார்ச் 31]

**மாண்புமிகு திரு-அ. இரகுமான்கான்:** 36 தொழிற்சங்கங்கள் ஒப்பந்தத்திலே கையெழுத்திட்டிருக்கின்றன. C.I.T.U., A.I.T.U.C., புதிய தமிழகம்தான் கையெழுத்திடவில்லை.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** தொழிலாளர்களுடைய ஆதரவற்ற தொழிற்சங்கங்கள் கையெழுத்திட்டிருக்கின்றன. தொழிலாளர்களுடைய பெரும்பாலான ஆதரவு பெற்ற தொழிற்சங்கங்கள் கையெழுத்திடவில்லை. என்னுடைய மிக முக்கியமான கோரிக்கை, தொழிலாளர்களுடைய விருப்பத்திற்கு மாறாக, ஒவ்வொரு தொழிலாளியிடத்திலேயிருந்தும், குறிப்பாக, புதிய தமிழகத்திலே இருக்கக்கூடிய தொழிற்சங்கத் தொழிலாளர்களிடத்திலேயிருந்துகூட நூறு ரூபாயை பிடித்தம் செய்து பிற தொழிற்சங்கங்களுக்குக் கொடுப்பதற்கு ஒப்பந்தம் போட்டிருக்கிறார்களே அது சட்ட விதிகளை மீறியது ஆகாதா? (மணியடிக்கப்பெற்றது) அது மனித உரிமைகளை மீறியது ஆகாதா? சம்பள ஒப்பந்தத்திற்கு ஏற்ற கொள்கையல்லவே?

**மாண்புமிகு திரு-அ. இரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அடிப்படை தொழிற்சங்கப் பிரச்சினைகளை புரிந்துகொள்ளாததனால் ஏற்பட்டிருக்கக்கூடிய கோளாறு இது. 18(1) ஒப்பந்தமாக இருந்தாலும், 12(3) ஒப்பந்தமாக இருந்தாலும், நிர்வாகமும் union-ம் அவர்களுடைய arrears-லேயோ அல்லது சம்பளத்திலேயோ union சார்பாக 100 ரூபாயோ, 200 ரூபாயோ, ஒரு தொகையை பிடித்தம் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்பது சட்டத்திற்கு உட்பட்டது. இது விருப்பத்தின் அடிப்படையிலே செய்யப்பட வேண்டும். இது agreement-லே, 6-வது ஷரத்திலே தெளிவாக இருக்கிறது.

"At the request of the Unions, it is agreed that an amount of Rs.100 only will be deducted from the arrears due from each worker and paid over to the Unions of the respective workmen" என்று தெளிவாக இருக்கிறது. உறுப்பினர் அவர்களது சங்கத்தின் சார்பாக பிடித்தம் செய்யக்கூடாது என்று கோரிக்கை வைத்தவுடனே, எங்களுடைய ஆணையர் அவர்கள் 29-3-2000 அன்று தொழிலாளர்கள் இசைவின்றி, அவர்களுடைய ஒப்புதலின்றி, அவர்களுக்கு வழங்கப்பட வேண்டிய தொகையில் பிடித்தம் செய்வது சட்டவிரோதமானது. எனவே, எந்த ஒரு தொழிலாளியிடமிருந்தும் அவரது இசைவு மற்றும் ஒப்புதலின்றி அவர்களுக்கு வழங்கப்பட வேண்டிய தொகையிலிருந்து எதனையும் பிடித்தம் செய்யக்கூடாது என்று உத்தரவு போட்டிருக்கிறார்கள்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** அப்படி உத்தரவு ஒன்று போடப்பட்டிருந்தால் அதற்காக நான் பாராட்டுகிறேன். ஆனால், அந்த உத்தரவு இன்றுவரையிலே வெளியாகவில்லை. எந்த நிர்வாகத்திற்கும் அந்த உத்தரவு செல்லவில்லை. எனவே, அந்த உத்தரவை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எல்லா நிர்வாகங்களுக்கும் வலியுறுத்த வேண்டும். அதை அமலாக்க வேண்டும். எந்தத் தொழிலாளர்கள் தங்களுக்குப் பிடித்தம்....

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** தவறான தகவல் கூடாது. 29-3-2000 அன்று உத்தரவு போடப்பட்டிருக்கிறது. தொழிலாளர் இணை ஆணையர், கோவை, தொழிலாளர் துணை ஆணையர், கோவை, தொழிலாளர் உதவி ஆணையர் (சமரசம்), கோவை ஆகியோருக்கு அனுப்பப்பட்டுவிட்டது.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** ஆனால், அந்த உத்தரவை ஏற்று, இன்றுவரையிலும் எந்த ஒரு நிர்வாகமும் அந்த நூறு ரூபாயை திருப்பித் தரவில்லை எனவே, திருப்பித் தருவதற்கு மீண்டும் அமைச்சர் அவர்கள் வலியுறுத்தவேண்டும். வலியுறுத்துவார்களா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன். (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** உத்தரவுப்படி நடவடிக்கை எடுக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** போதும், 20 நிமிடங்களுக்கு மேல் பேசியிருக்கிறீர்கள்

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** ஒரு நிமிடத்தில் பேசி முடித்துவிடுகிறேன். ஏனென்றால் ரூ. 1, ரூ. 2 இல்லை ஏறக்குறைய 10, 15 கோடி ரூபாய்க்கு மேல் இப்படி தொழிலாளர்களிடமிருந்து பிடித்திருப்பதை இந்த அரசு ஏற்றுக்கொள்ளக் கூடாது, கடுமையான நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, மிக முக்கியமானது எங்களுடைய புதிய தமிழகத்தினுடைய கோரிக்கையான பூரண மதுவிலக்கை தமிழ்நாடு அரசு அமல்படுத்தவேண்டும். கள்ளுக்கடைகள் திறக்கப்படுமா என்ற சந்தேகம் கிளப்பிவிடப்பட்டிருக்கிறது. கள்ளுக்கடைகளைத் திறக்கக்கூடாது, ஏற்கெனவே இருக்கக்கூடிய கள்ளச் சாராயம் ஒழிக்கப்படவேண்டும். இதுபோல, பூரண மதுவிலக்கையும் இந்தத் தொடரிலே கொண்டுவர வேண்டும் என்பதுதான் புதிய தமிழகத்தின் வேண்டுகோள்.



பிற்பகல் 12-40

அதேபோல, இந்த நாட்டிலே உள்ள சுரண்டல் லாட்டரிகள். இதனாலே மக்கள், குறிப்பாக, ஏழை எளிய மக்கள் பாதிக்கப்படுகிறார்கள். லாட்டரிகள் மூலமாக வருமானம் வருவது ஒரு வழியாக இருந்தாலும்கூட, இந்த லாட்டரிகளாலே இலட்சக்கணக்கான குடும்பங்கள், அதுவும் குறிப்பாக, சுரண்டல் லாட்டரிகளில் நடக்கக்கூடிய முறைகேடுகளால் இந்த மக்கள் பாதிக்கப்படுகிறார்கள். எனவே, லாட்டரிகளை ஒழிப்பதற்கும் இந்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். அதேபோல, சமீபத்திலே மத்திய அரசு மண்ணெண்ணெய் விலையைக் கூட்டியிருக்கிறது. அந்த மண்ணெண்ணெய் விலையைக் கூட்டியிருக்கின்ற காரணத்தினாலே, குறிப்பாக, கிராமப்புறத்திலே வாழ்கிற ஏழை மக்கள் மிகவும் அல்லல்படுகிறார்கள். எந்த அளவிற்கு மண்ணெண்ணெய் விலையை மத்திய அரசு கூட்டியிருக்கிறதோ அந்த விலையை தமிழ்நாடு அரசே ஏற்றுக் கொண்டு, ஏழை மக்களுக்குக் கடந்த காலத்திலே எவ்வளவு விலைக்கு விற்கப்பட்டதோ, அதே அளவில் விற்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்த மாமன்றத்திலே வலியுறுத்தி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஆர். சிவானந்தம்.

**திரு. ஆர். சிவானந்தம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 2000-2001 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையிலே பேசுகின்ற வாய்ப்பினை உருவாக்கித் தந்த தமிழினத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களை வணங்கி என் உரையைத் தொடங்குகின்றேன்.

தமிழக முதல்வர் அவர்கள் அளித்திருக்கின்ற நிதிநிலை அறிக்கையை தமிழகத்திலுள்ள அனைத்துத் தரப்பு மக்களும் பாராட்டிப் போற்றுகின்றனர். படித்தவர்கள், பண்பாளர்கள், நல்லவர்கள், நாணயமானவர்கள், ஏழையெளிய மக்கள் அனைவரும் தங்களுக்கு ஒரு வரப்பிரசாதமான பட்ஜெட் என்று பாராட்டிப் போற்றுகின்றனர். ஆனால், இந்த மாமன்றத்திலே, எதிர் அணியிலே உள்ள நண்பர்களெல்லாம் விவசாயிகளுக்கு என்ன செய்தாய், ஒன்றுமேயில்லை, விவசாயிகளுக்கு ஒன்றுமே இல்லை என்று சொல்லி, இங்கே கூக்குரல் இடுகிறார்கள். காரணம், இவர்கள்தான் விவசாயிகளுக்கு ஏதோ பாதுகாவலர்களைப் போலக் காட்டிக்கொள்கிறார்கள். நான் அவர்களுக்கு ஒன்றைச் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். தமிழினத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள், கடந்தகால ஆட்சியானாலும், நிகழ்கின்ற

இந்தக்கால ஆட்சியானாலும் அவர் மட்டும்தான் விவசாயிகளுக்கு செய்திருக்கிறார் என்று இந்த நேரத்திலே நான் உறுதிபட சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

கடந்த கால கலைஞருடைய ஆட்சியில், பசுமைப் புரட்சி என்ற திட்டத்தைக் கொண்டுவந்து, விவசாயப் பெருமக்களுக்குப் புதிய கிணறுகளை வெட்ட வேண்டுமானாலும், அவற்றை ஆழப்படுத்த வேண்டுமானாலும், மின் இணைப்புத் தர வேண்டுமானாலும், மோட்டார், ஆயில் எஞ்சின் போன்றவற்றையெல்லாம் வாங்குவதற்காக மானியக் கடன்களை வழங்கியவர் தமிழினத் தலைவர் டாக்டர் கலைஞர்தான் என்பதை இங்கே நான் பதிய வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். அதேபோல, இப்பொழுதுகூட, இந்த நிதிநிலை அறிக்கையைத் தயாரிப்பதற்கு முன்பாக விவசாயிகள் சங்கத் தலைவர்களையெல்லாம் அழைத்துப்பேசி, அதற்குத் தலைவராக கலைஞர் அவர்களும், பொதுப் பணித் துறை அமைச்சர், வேளாண்மைத் துறை அமைச்சர் ஆகியோரும், விவசாயிகள் சங்கத் தலைவர்களெல்லாம் உறுப்பினர்களாக இருந்து, பல நல்ல திட்டங்களை இங்கே நிறைவேற்ற, இந்த நிதிநிலை அறிக்கையிலே குறிப்பிட்டிருக்கிறார்கள்.

விவசாயிகள் உற்பத்தி செய்கின்ற பொருட்களைப் பாதுகாப்பதற்காக குளிர்பதனக்கூடங்களை, வேளாண்மைத் துறை மூலமாகவும், கூட்டுறவுத் துறை மூலமாகவும், தனியார் துறை மூலமாகவும் கட்டுவதற்காகத் திட்டங்கள் தீட்டப்பட்டிருக்கின்றன. உலர் களங்கள் அமைப்பதற்காக, சிமெண்ட் உலர் களங்கள் அமைப்பதற்காக வழிவகைகள் செய்யப்பட்டிருக்கின்றன. விவசாயிகள் உற்பத்தி செய்கின்ற பொருட்களைப் பாதுகாத்து சேமிக்க, சேமித்துப் பாதுகாக்கும் திட்டம் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

பாசன நீரைப் பயன்படுத்தக் குழு அமைக்கப்பட்டிருக்கிறது. நபார்டு திட்டத்தின் உதவியோடு 44 சிறு பாசன ஏரிகளைத் தூர் வார ஆணையிடப்பட்டிருக்கிறது. அதேபோன்று, விவசாயிகளுடைய அபராத வட்டியைத் தள்ளுபடி செய்வதற்கும், கடன்களை முழுமையாகச் செலுத்துகின்றவர்களுக்கு ஊக்குவிப்புத் தொகை தருவதற்கும் விவசாயிகளுக்குத் திட்டங்கள் அறிவிக்கப்பட்டிருக்கின்றன.

தனியார் சர்க்கரை ஆலைகளில் தரப்பட வேண்டிய பாக்கிகளையெல்லாம் தீர்ப்பதற்காக அரசாங்கம் அவர்களை அழைத்துப்பேசி, தீர்க்க வழிவகை செய்யப்பட்டிருக்கிறது. இவர்கள்,



கரும்பை மட்டுமே முதன்மையாகக் கொண்டு விவசாயிகளுக்கு கரும்புக்கு டன் ஒன்றுக்கு ஆயிரம் ரூபாய் தரவில்லை என்று இங்கே பேசுகிறார்கள். நான் அவர்களைக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். எங்கள் பகுதியில் இருக்கக்கூடிய விவசாயப் பெருமக்கள் ஆம்பூர் சர்க்கரை ஆலைக்கு கரும்பினை அனுப்புகிறார்கள், அந்த ஆம்பூர் சர்க்கரை ஆலையிலே, கட்டுமானத் தரத்தின் அடிப்படையிலே 860 ரூபாய் டன் ஒன்றிற்குத் தரப்படுகிறது. இந்த பட்ஜெட்டிலேகூட, கலைஞர் அவர்கள் அதை ஆயிரம் ரூபாயாகக் கொடுக்க இருக்கிறார்கள் என்று நான் நம்புகிறேன். அந்தக் கரும்பு விலை ஒன்றையே வைத்துக்கொண்டு, விவசாயிகளுக்கு எதையும் செய்யவில்லை; எதையும் செய்யவில்லை என்று சொல்கிறார்களே, இவர்களுக்கு விவசாயிகளைப் பற்றிப் பேசுவதற்கு என்ன அருகதை இருக்கிறது?

1989ஆம் ஆண்டிலே தலைவர் கலைஞர் அவர்கள், விவசாயிகளுக்கு இலவச மின்சாரம், பம்பு செட்களுக்கு இலவச மின்சாரம் அளித்த பின்பு மீண்டும் ஆட்சிக்கு வந்த ஜெயலலிதா அவர்கள், மின் கட்டணத்தைக் கொண்டுவருவதற்காக முயற்சி எடுத்தபோது, தமிழினத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களும், பாட்டாளி மக்கள் கட்சி நிறுவனர் டாக்டர் ராமதாஸ் அவர்களும் ஒன்றாக இணைந்து ஒரு போராட்டத்தை அறிவித்து, சிறைச்சாலையை நிரப்பி, வர இருந்த மின் கட்டணத்தைத் தடுத்து நிறுத்தியவர்கள்தான் இந்தக் கலைஞர் அவர்கள் என்பதை அவர்களுக்கு நான் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இப்படி விவசாயிகளுக்காக அனைத்து வசதிகளையும் செய்கின்ற கலைஞர் அவர்களைப் பார்த்து, இந்த நிதிநிலை அறிக்கையிலே விவசாயிகளுக்கு ஒன்றுமில்லை, ஒன்றுமில்லை என்று, இவர்களுக்கு ஏதோ விவசாயிகளெல்லாம் ஆதரவாக இருப்பதைப்போல காட்டிக் கொள்வதற்காக இங்கே பேசுகின்றார்களே, அவர்களுக்கு நான் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்; விவசாயிகள் என்றென்றும் கலைஞர் அவர்களைத்தான் நம்பியிருக்கிறார்கள். அதற்கு எடுத்துக்காட்டாகத்தான், நடைபெற்ற மூன்று சட்டமன்ற இடைத்தேர்தலிலே கலைஞர் அவர்களுக்குப் பெருவாரியான வாக்குகளை அளித்து, அவர்களுக்கு ஆதரவு தெரிவித்திருக்கிறார்கள் என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 12-45

அருமை நண்பர் திரு. செல்லக்குமார் அவர்கள், இங்கே பேசுகின்றபோது, இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பிலே எந்த வழிவகையும்

[திரு. ஆர். சிவானந்தம்] [2000 மார்ச் 31

செய்யவில்லை என்று சொன்னார். ஆசிரியர்கள் 6,000 பேரும், சிருடைப் பணியாளர்கள் 4,000 பேரும் நியமிக்கப்படவிருப்பதாக இந்த நிதிநிலை அறிக்கையிலே அறிவிக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் எல்லாம் இளைஞர்கள் இல்லையா? இவருடைய பார்வைக்கு, அவர்கள் எல்லாம் முதியோர்களா? ஆகவே, இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கவில்லையா என்பதை நான் இங்கே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தொழில் துறையிலே 6.6 சதவிகிதமாக இருந்த உற்பத்தி, 13 சதவிகிதமாக உயர்த்துவதற்கு வழிவகை செய்யப்பட்டிருக்கிறது. கடலூரிலே தொழிற்பூங்கா, நாங்குநேரியிலே உயர் தொழில்நுட்பப் பூங்கா, ஓசூரிலே மலர்ப் பூங்கா, எண்ணூரிலே ரூ. 6,000 கோடியிலே பெட்ரோ கெமிக்கல்ஸ் தொழிற்சாலை, இவற்றையெல்லாம் உருவாக்கியிருப்பது, இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு இல்லையா? இப்படி பல நல்ல திட்டங்களையெல்லாம் ஆட்சியிலே தந்திருக்கிற கலைஞர் அவர்களை நாடே போற்றுகிறது, நல்லவர்கள் போற்றுகிறார்கள்.

இந்த நிதிநிலை அறிக்கையிலே ரூ. 1,685 கோடி மாநில நெடுஞ்சாலைகள், தேசிய சாலைகள், ஊரக சாலைகள் ஆகியவற்றை அமைப்பதற்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது. தொலைத் தொடர்புத் துறையில் முதலீடாக ரூ. 2,285 கோடி ஒதுக்கப்பட்டிருக்கிறது. மின் உற்பத்திக்காக மின் வாரியத்தின் மூலம் ரூ. 1,034 கோடியும், தனியார் மூலம் ரூ. 1,332 கோடியும் ஒதுக்கப்பட்டு, மின் உற்பத்தியைப் பெருக்கி இந்த நாட்டினுடைய விவசாயிகளைப் பாதுகாப்பதற்காகவும், மின் உற்பத்தியைப் பெருக்குவதற்காகவும், தொழிற்சாலைகளைப் பெருக்குவதற்காகவும் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டது அவர்களுக்குத் தெரியவில்லையா?

ஊராட்சி அமைப்புகளுக்காக, உள்ளாட்சிகளுக்காக ரூ. 2,401 கோடி ஒதுக்கீடு செய்து, பாதுகாக்கப்பட்ட குடிநீர், மக்களுடைய அடிப்படை வசதிகளை நிறைவேற்றுவதற்கான அனைத்துப் பணிகளையும் நிறைவேற்றுகிற ஒரு அரசு கலைஞருடைய அரசு என்று இன்று கிராமப்புற மக்கள் எல்லாம் போற்றுகிறார்கள். கிராமப்புறத்திலே உள்ளவர்கள் எல்லாம், கிராமங்கள் அனைத்தும் இன்று நகர்ப்புறங்கள்போல அனைத்து வசதிகளையும் பெறுகின்றன என்று நல்ல பாராட்டுதல்களைத் தந்து கொண்டிருக்கிறார்கள் என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

900 கோடி ரூபாயை ஒதுக்கி, 11,600 கிலோமீட்டர் தார்ச்சாலை, 5,000 கிலோமீட்டர் சிமெண்ட் சாலை இப்படி கிராமச் சாலைகளையெல்லாம் சிமெண்ட் சாலைகளாக மாற்றுகின்ற ஒரே அரசு கலைஞருடைய அரசுதான்.



2000 மார்ச் 31] [திரு. ஆர். சிவானந்தம்]

இந்தியாவில், எங்கும் இல்லாத நல்ல புதுமையான திட்டங்களை எல்லாம் கிராமப்புற மக்களுக்காக வழங்குகிற ஆட்சி கலைஞர் ஆட்சி என்பதை நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும்.

இங்கே கிட்டப் பார்வை பட்ஜெட் என்று குறிப்பிட்டுச் சொன்னார்கள், அவர்களுக்கு, நான் ஒன்றைச் சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். ஐ.நா. சபையின் மூலமாக சுற்றுப்புறச் சூழல் குழுவும், நெதர்லாந்து நாட்டின் இரண்டாவது உலகத் தண்ணீர் மன்றமும், இந்தியாவில் 6 மாநிலங்களில் தண்ணீர் பற்றாக்குறை ஏற்படும் என்றும், அது 2050 ஆம் ஆண்டில் வரும் என்றும் சொல்கிற அந்தக் குறிப்பையும் எடுத்துக்கொண்டு, தமிழக முதலமைச்சர் அவர்கள், மழை நீரை வீணாக்காமல், நிலத்தடி நீரைப் பெருக்குவதற்காக, திட்டங்களைத் தீட்டியிருக்கிறார்களே, இது என்ன கிட்டப் பார்வை பட்ஜெட்டா? உங்கள் பார்வைக்கு அப்படித் தெரிகிறதா? இது தொலைநோக்கோடு போடப்பட்ட பட்ஜெட் அல்லவா? இதை நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும் என்று நான் உங்களை வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

இங்கே தமிழ் மாநில காங்கிரஸ் நண்பர்கள் எல்லாம், ஜெயலலிதாவோடு கூட்டு சேர்ந்த காரணத்தினால், அவருக்குக் கொத்தடிமைகளாக பலபேர் இங்கே பேசுகிறார்கள். அவரை ஆதரித்துப் பேசுகிறார்கள். நீங்கள் உங்கள் மனசாட்சியை மறந்து விட்டீர்களா? 3 ஆண்டு காலமாக எங்களோடு இருந்து, கலைஞரைப் போற்றிய நீங்கள், இன்று கலைஞரைத் தூற்றிப் பேசுகிற காலம் வந்திருக்கிறதே என்று நான் உங்களை எண்ணி வேதனைப்படுகிறேன். (மணியடிக்கப்பெற்றது)

அதுமட்டுமல்லாமல், 2001-லே காமராஜர் ஆட்சியை அமைப்போம் என்று சொல்கிறீர்களே, கர்மவீரர் காமராஜர் ஆட்சியை கலைஞர் மூலமாக நீங்கள் பார்க்க விரும்பவில்லையா? அப்படி இல்லையென்றால் காமராஜரைப்போல் திருமணமே ஆகாத ஜெயலலிதா மூலம் காமராஜர் ஆட்சியை நீங்கள் பார்க்க விரும்புகிறீர்களா? எப்படி உங்களால் காமராஜர் ஆட்சியை அமைக்க முடியும்? ஜெயலலிதாவோடு நீங்கள் கூட்டு சேர்ந்திருக்கிறீர்கள். நீங்கள் சிறுபான்மை; அவர்கள் பெரும்பான்மை. இதைச் சொன்னால், உடனே நீங்கள் சொல்வீர்கள். 'நீங்கள் B.J.P.-யோடு கூட்டு சேரவில்லையா' என்று தமிழகத்தைப்

பொறுத்தவரையிலே, B.J.P.-யோடு நாங்கள் சேரவில்லை. எங்களோடு B.J.P. சேர்ந்திருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். காரணம், நடைபெற்ற தேர்தலிலேகூட, பெரும்பான்மையான சீட்டுகளை நாங்கள்தான் எடுத்துக் கொண்டோம்; அவர்களுக்குச் சிறுபான்மையாகக் கொடுத்தோம். ஆனால், நீங்கள் ஜெயலலிதோவோடு சேர்ந்து** கேட்கின்ற நிலை ஏற்பட்டிருக்கிறது என்பதை நான் உங்களுக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். எனவே, உங்களால் எந்தக் காலத்திலும் காமராஜர் ஆட்சியைக் காண முடியாது என்பதை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து என்னுடைய தொகுதியைப் பற்றி..

பிற்பகல் 12-50

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம், (குறுக்கீடுகள்), திரு. எஸ். வி. திருஞானசம்பந்தம்.

**டாக்டர் பத்மா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

**திரு. எஸ். என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

**திரு. எஸ். வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 2000 ஆண்டு... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அவர் பேசி விட்டார். நான் திரு. திருஞானசம்பந்தம் அவர்களைப் பேசச் சொல்லியிருக்கிறேன்.

**திரு. எஸ். என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நான் கூப்பிட்டது திருஞானசம்பந்தம் அவர்களை. பிறகு நீங்களே பேசிக் கொண்டிருந்தால் என்ன அர்த்தம். (குறுக்கீடு) என்ன இதிலே கேட்கிறீர்கள்? point of order ஆ? point of clarification ஆ? என்ன அது?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



**திரு. எஸ். என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பேசுகின்றபோது** எடுக்கின்றார்கள் என்று சொன்ன சொல்லை அவைக் குறிப்பிலேயிருந்து நீக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அது அவைக் குறிப்பிலேயிருந்து நீக்கப்படுகிறது. நீங்கள் உட்காருங்கள். திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்.

**திரு. எஸ். வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 2000-2001 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையிலே தமிழ் மாநில காங்கிரஸ் சார்பாக எனது கருத்துகளைத் தெரிவிக்க வாய்ப்பளித்தமைக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். நமது நாட்டில் 80 சதவிகிதம் மக்கள் விவசாயத்தை நம்பியிருக்கின்றார்கள். இந்த நிதிநிலை அறிக்கையிலே விவசாயத்திற்கு எந்தவித புதிய திட்டங்களோ, சலுகைகளோ அறிவிக்காதது வருத்தத்திற்குரியதாகும். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், ஆளுநர் உரையிலே பதில் அளித்துப் பேசுகின்ற போது, இந்த அரசு தஞ்சாவூர் அரசு என்று சொன்னார்கள். சொன்னதோடு இல்லாமல், தமிழகத்திலே இருக்கின்ற விவசாயிகளையும், தஞ்சை மாவட்டத்து விவசாயிகளையும், நிதிநிலை அறிக்கைக்கு முன்பு அழைத்துப் பேசியபோது, தமிழகத்திலே இருக்கின்ற விவசாயிகள் எல்லாம் மகிழ்ச்சியோடு, நமது கஷ்டமான இந்த வாழ்க்கைக்கு விரைவிலேயே ஒரு விடிவு காலம் பிறக்கப்போகிறது என்று எண்ணிக் கொண்டிருந்த வேளையிலே, இந்த நிதிநிலை அறிக்கை அவர்களுக்கெல்லாம் மிகப் பெரிய ஏமாற்றத்தைத் தந்திருக்கிறது.

குறிப்பாக ஒரு விவசாயி நான்கு ஆண்டுகளுக்கு முன்பு வாங்கிய கடன்கள், தற்போது அசலுக்கு நிகராக வட்டியும், வட்டிக்கு நிகராக அபராத வட்டியும் உயர்ந்து கொண்டே இருக்கிறது. அவற்றையெல்லாம் முறையாக உரிய காலத்திலே கட்ட வேண்டுமென்று சொன்னால் அந்த விவசாயி, எந்த நிலத்திற்கு விவசாயம் செய்ய கடன் வாங்கினாரோ, அந்த நிலத்தையே விற்று விட்டு கூலித் தொழிலாளியாக சென்னை போன்ற பெருநகரத்திற்கு வரவேண்டிய ஒரு அவல நிலை ஏற்படும் என்பதைத் தெரிவித்து கொள்கிறேன்.

எனவே, விவசாயிகளுடைய பிரச்சினையைக் கருத்திலே கொண்டு, மாண்புமிகு முதல்வர் அவர்கள் கருணையோடு, விவசாயிகளுடைய கடன்களையும், வட்டியையும், அபராத வட்டியையும் முழுமையாக

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

தள்ளுபடி செய்து, கடன் தொகையை தவணை முறையிலே செலுத்துவதற்கு உதவ வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு, தமிழகத்திலே இருக்கின்ற விவசாயிகளுக்கு சற்று ஆறுதலாக இருப்பது தென்னை விவசாயம். இந்த தென்னையைப் பொறுத்தமட்டிலே, கடந்த ஓர் ஆண்டு காலமாக தமிழகத்திலே இருக்கின்ற தென்னைகளுக்கும், தஞ்சை மாவட்டத்திலே இருக்கக்கூடிய தென்னைகளுக்கும் இருக்கின்ற சிலந்தி நோயின் தாக்குதலால் பெருமளவிலே தேங்காய் உற்பத்தி குறைந்திருக்கிறது. அருகில் இருக்கின்ற கேரளாவில் அந்த தென்னை நோயைக் கட்டுப்படுத்துவதற்கு அரசின் சார்பாக மருந்துகள் எல்லாம் அடிக்கப்பட்டிருக்கின்றன. ஆனால், அந்தப் பணியை இங்கே செய்யவில்லை. மூன்று மாதங்களுக்கு முன்பு, மத்திய அரசின் சார்பில் ஒரு குழு தஞ்சை மாவட்டத்திற்கு வருகை தந்து பாதிக்கப்பட்டிருக்கின்ற மரங்களையெல்லாம் பார்த்துச் சென்றார்கள். ஆனால், இதுவரை அவர்கள் எந்தவித நடவடிக்கையையும் எடுக்கவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். வருங்காலத்தில் இந்த நோய்க்கு கேரள அரசு என்ன செய்கின்றதோ, அதுபோன்ற மருந்துகளை தமிழக அரசின் சார்பாக இலவசமாக அடிப்பதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தற்போது, எண்ணெய் இறக்குமதி வெளி மாநிலங்களிலிருந்தும், வெளிநாட்டிலிருந்தும் செய்யப்படுவதாலே, இங்கு தேங்காயினுடைய விலை மிகவும் வீழ்ச்சி அடைந்திருக்கிறது. எனவே, வெளிநாடுகளிலிருந்து எண்ணெய் இறக்குமதி செய்வதைக் கட்டுப்படுத்தினால், இங்கே ஓரளவு தேங்காய் விலை உயர்வதற்கு வாய்ப்பிருக்கும் என்று சொல்லிக் கொள்வதோடு, அரசே தேங்காய் கொப்பரைகளைக் கொள்முதல் செய்ய வேண்டுமென்றும், குறிப்பாக ஒரு கிலோ கொப்பரைக்கு ரூ. 35 வழங்க வேண்டுமென நான் கேட்டுக்கொள்கிறேன். தொடர்ந்து, இந்த மாமன்றத்திலே நான்கு ஆண்டுகாலமாக எங்கள் தமிழ் மாநில காங்கிரஸ் சார்பாக, கரும்புக்கு டன் ஒன்றுக்கு...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.



*** மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தென்னை மரத்திலே ஏற்பட்டிருக்கின்ற வியாதிபற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டார்கள். கேரளாவிலே செய்ததைப் போல தமிழகத்திலே செய்யவேண்டுமென்றும் கேட்டார்கள். கேரள அரசு மத்திய அரசிடம் National Calamity Relief Fund என்ற அந்த நிதியிலேயிருந்து மாநில அரசுக்கு உதவ வேண்டுமென்று கேட்டிருந்தார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சார்பாக நான் அந்த National Calamity Relief Fund Committee என்ற குழுவில் கலந்து கொள்வதற்காகச் சென்றிருந்தேன். அந்தக் குழுவிலே தென்னைக்கு ஏற்பட்டுள்ள நோயை National Calamity என்று அறிவிக்க வேண்டுமென்று கேட்டேன். சென்ற கூட்டத்திலே ஒப்புக் கொண்டார்கள். ஆனால், இந்தக் கூட்டத்தில் கேரள அரசினுடைய அந்த கோரிக்கையை ஏற்க முடியாது என்ற ஒரு குறிப்பு வந்தது. அதை மீண்டும் நான் அந்தக் கூட்டத்திலே எடுத்துச் சொன்னேன். ஏற்கெனவே நடந்த கூட்டத்தில் National Calamity-ஆக இதை எடுத்துக்கொள்ள வேண்டுமென நான் கேட்டேன். ஏற்கெனவே இருந்த விவசாயத் துறை அமைச்சர் அவர்கள் இதனை ஏற்றுக்கொண்டார்.

பிற்பகல் 12-55

அவர்தான் இந்தக் குழுவிற்குத் தலைவர். இப்போது புதிய தலைவர் இருக்கிறீர்கள். எனவே, இதை மறுபடியும் நீங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று வலியுறுத்தினேன். அதை, அந்தக் கோரிக்கையை, இப்போது, திட்டக் குழுவிற்கு (Planning Commission) மறுபரிசீலனைக்காக, மத்திய அரசு, அனுப்பி இருக்கிறது. கேரளாவுக்கு என்ன கிடைக்கிறதோ, அது தமிழ்நாட்டிற்கும் கிடைக்கும்.

**திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** தொடர்ந்து நான்கு ஆண்டுகாலமாக கரும்பிற்கு டன்னிற்கு 1000 ரூபாய் வழங்க வேண்டுமென்று, இந்த மாமன்றத்திலே எங்கள் தமிழ் மாநில காங்கிரஸ் சார்பாக, தொடர்ந்து வலியுறுத்தி வருகிறோம். அண்மையிலே, இருக்கின்ற பல்வேறு மாநிலங்களிலே, கரும்பிற்கு என்ன விலை கொடுக்கிறார்கள் என்பதை, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும், மாண்புமிகு உறுப்பினர் அண்ணன் அழகிரி போன்றவர்கள் எல்லாம், இந்த மாமன்றத்திலே விளக்கியிருக்கின்றார்கள். இனியும் காலதாமதம் செய்யாமல், தமிழக அரசு நீதிமன்றத்திற்கு முறையான விளக்கத்தைக் கொடுத்து, விரைவிலே கரும்புக்கு 1000 ரூபாய் வழங்குவதோடு, தமிழகத்திலே இருக்கின்ற பல்வேறு தனியார் சர்க்கரை ஆலைகளால் பிடித்தம் செய்யப்பட்ட

பணங்களையெல்லாம் விரைவிலே வழங்குவதற்கு, இந்த அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

நெடுஞ்சாலைத் துறையைப் பொறுத்தமட்டிலே, பல்வேறு தொலைதூர சாலைகள்தான் தற்போது பராமரிக்கப்படுகின்றன. ஆனால், கிராமப்புறங்களிலே இருக்கின்ற நெடுஞ்சாலைத் துறைக்குச் சொந்தமான சாலைகள் எல்லாம் முற்றிலுமாக புறக்கணிக்கப்பட்டிருக்கின்றன. குறிப்பாக, எங்களுடைய தொகுதியிலே ஏறக்குறைய 200 கிலோமீட்டர் கிராமப்புறங்களிலே நெடுஞ்சாலைத் துறைக்குச் சொந்தமான சாலைகள், இந்த மூன்று ஆண்டு காலத்திலே எந்தவிதப் பராமரிப்பும் இல்லாமல் இருக்கின்ற காரணத்தினாலே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கருத்திலே கொண்டு, அதுபோன்ற கிராமப்புறங்களிலே இருக்கின்ற சாலைகளுக்கு முன்னுரிமை வழங்கவேண்டுமென கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் காலையிலேகூட, கேள்வி நேரத்தின்போது சொன்னேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், இந்தக் கிராமப்புறத்திலேயிருக்கக்கூடிய நெடுஞ்சாலைத் துறைக்குச் சொந்தமான சாலைகள் — Other District Roads- அவற்றை மேம்படுத்துவதற்கு 400 கோடி ரூபாய் ஒதுக்கித் தந்திருக்கிறார்கள். அதிலே, 159 கோடி ரூபாய்க்கு இப்போது tender வைக்கப்பட்டு பணிகள் நடைபெறுகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய தொகுதியிலேயும், பல சாலைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. மிச்சமுள்ள சாலைகள் ஏப்ரலுக்குப் பிறகு எடுக்கப்படும். நான் குறிப்பாகச் சொன்னேன். சராசரியாக, ஒரு தொகுதியில் கட்சி வித்தியாசம் இல்லாமல், 40 கி.மீட்டரிலிருந்து 50 கி. மீட்டர் வரையில் செப்பனிடுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. நிச்சயமாக செய்யப்படும்.

**திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதிநிலை அறிக்கையிலே, மீனவர்களுக்குப் பயன்படுகிற வகையிலே, மீனவர் அங்காடி தொடங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. இதை நான் வரவேற்கின்றேன். இருந்தாலும், இந்த மீனவர் அங்காடிகளுக்கு கிராமப்புறங்களிலிருந்து மீன்களை கொண்டு வருவதற்கு, சரியான சாலை வசதி இருக்கவேண்டும். தமிழகத்திலே ஏறக்குறைய 442 மீனவ கிராமங்கள் இருக்கின்றன. இந்த அரசு பொறுப்பு ஏற்ற, இந்த 4 ஆண்டு காலத்திலே—அரசு பொறுப்பினை ஏற்ற அந்த முதலாம் ஆண்டு ஒருசில கிராமங்களிலே சாலை வசதி



செய்யப்பட்டது. ஆனால், மூன்று ஆண்டுகாலத்திலே எந்தக் கிராமத்திலேயும், எந்தச் சாலை வசதியும் செய்யப்படவில்லை. இனி வர இருக்கின்ற ஆண்டு காலத்திலே அனைத்து மீனவ கிராமங்களுக்கும் சாலை வசதிகளுக்கு அதிக நிதி ஆதாரம் ஒதுக்கப்பட வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன்.

அதுபோல, தஞ்சை மாவட்டத்திலே இரண்டு ஆண்டுகளாக, ஏரிகள், குளங்கள் எல்லாம் தூர் வாரப்படுகின்றன. இருந்தாலும், அந்தப் பணிகள் எல்லாம் முறையாகவும், ஒழுங்காகவும் நடைபெறுவதற்கு அந்தப் பகுதிகளிலே இருக்கின்ற விவசாயப் பிரதிநிதிகளை, மக்கள் பிரதிநிதிகளைக் கொண்ட ஒரு குழு அமைத்து அவற்றையெல்லாம் பார்வையிட்டால் எந்தவிதத் தவறுகளும் நடைபெறாமல் இருப்பதற்கு வசதியாக இருக்கும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

தஞ்சை மாவட்டத்தினுடைய கல்லணை கால்வாயின் கடைமடைப் பகுதியாக இருக்கின்ற எனது தொகுதியிலே, பட்டுக்கோட்டை ஒன்றியத்தைச் சேர்ந்த ஏறக்குறைய, 10 ஊராட்சிகளுக்கு கல்லணைக் கால்வாயிலே தண்ணீர் திறக்கப்பட்டு, காலதாமதமாக செல்வதால், அந்த ராஜாமடை வாய்க்காலிலே காலதாமதமாகச் செல்வதால், அந்தப் பகுதியிலே இருக்கக்கூடிய விவசாயிகள், விவசாயம் செய்வதற்கு கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அந்தப் பகுதியிலே மகராசா சமுத்திரம் என்ற ஒரு காட்டாறு ஓடுகிறது. அதிலே அதிகமான தண்ணீர் கடலுக்கு வீணாகச் செல்கின்ற காரணத்தினாலே, அந்தப் பகுதியிலே இருக்கின்ற மக்களுடைய விவசாயப் பிரச்சினையைத் தீர்க்கின்ற வண்ணம் அந்தக் காட்டாற்றிலே ஒரு — நீரேற்றுத் திட்டம் Pumping Scheme நிறைவேற்றித் தந்தால் அந்த 10 ஊராட்சிகளிலே இருக்கின்ற மக்களுக்கு விவசாயம் செய்வதற்கு வசதியாக இருக்கும் என்பதைத் தெரிவித்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வருகின்ற நிதியாண்டிலே, அந்த மகராசா சமுத்திரம் பகுதிக்கு ஒரு நீரேற்றும் திட்டத்தை நிறைவேற்றித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

அதைப்போல மின்சாரத்தைப் பொறுத்தவரையிலே, தற்போது தஞ்சை மாவட்டத்திலே கல்லணை கால்வாயின் கடைமடைப் பகுதி புறக்கணிக்கப்பட்டிருக்கிறது. கல்லணைக் கால்வாயின் கடைமடைப் பகுதிக்கு முன்னுரிமை வழங்க வேண்டும்.

பிற்பகல் 1-00

மேலும், பட்டுக்கோட்டை பேராவூரணி பகுதியிலே ஏறக்குறைய 5 ஆண்டுகளாக விவசாயிகளுக்கு வழங்கப்பட வேண்டிய இலவச மின்சார இணைப்பு வழங்கப்படாமல் இருக்கிறது. ஏறக்குறைய 500 பேர் பதிவு செய்து, பதிவுப் பட்டியலிலே இருக்கிறார்கள். எனவே, அந்தப் பகுதிக்கு மாண்புமிகு அமைச்சர் முன்னுரிமை வழங்குவதோடு தற்போது அந்தப் பகுதியிலே இருக்கின்ற விவசாயிகள் எல்லாம் filter point மற்றும் ஆழ்குழாய் கிணறுகளை நம்பி விவசாயம் செய்ய ஆரம்பித்திருக்கிறார்கள். ஆனால், அந்தப் பகுதியிலே மின்வெட்டிருக்கிறது. பகலிலே ஏறக்குறைய 4 மணி நேரம், 5 மணி நேரம் தொடர்ந்து மின்சாரம் இல்லாமல் இருக்கின்ற காரணத்தினாலே அந்தப் பகுதியிலே இருக்கின்ற விவசாயிகள் சிரமப்படுகிறார்கள். எனவே, விரைவிலே அந்தப் பகுதியிலே தொடர்ந்து மின்சாரம் வழங்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு, பேராவூரணி தனி வட்டமாக உருவாக்கப்பட்டு ஏறக்குறைய கால் நூற்றாண்டுகளுக்கு மேல் ஆகிறது. அங்கே இன்னும் நீதிமன்றம் தொடங்கவில்லை. இந்த அரசு பொறுப்பேற்றதற்குப் பின்பு 2 ஆண்டுகளுக்கு முன்பு தஞ்சை மாவட்டத்தினுடைய தலைமை நீதிபதி வருகை தந்து அந்த நீதிமன்றம் தொடங்குவதற்கான இடங்களையெல்லாம் தெரிவு செய்து சென்றார். இதுவரை அங்கே நீதிமன்றம் தொடங்கவில்லை. இந்த நிதி ஆண்டிலே நீதிமன்றம் தொடங்க வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன். அதோடு பேராவூரணி தொகுதி.....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்கள் பேசி முடித்துக் கொள்ளுங்கள். அடுத்து திரு. துரை. சந்திரசேகரன். (குறுக்கீடு)

**திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** ஒரே நிமிடத்தில் பேசி முடித்துக்கொள்கிறேன். பேராவூரணி பகுதி முற்றிலும் தென்னையைச் சார்ந்திருக்கின்ற பகுதி. கன்னியாகுமரிக்கு எப்படி இரப்பருக்கு முக்கியத்துவம் கொடுத்து அந்தப் பகுதியிலே இரப்பரை மூலப் பொருளாகக் கொண்டு ஒரு தொழிற்சாலை தொடங்கயிருக்கிறதோ அதேபோல, தஞ்சை மாவட்டத்திலே இருக்கிற பேராவூரணி, பட்டுக்கோட்டைப் பகுதியிலே தென்னையை மூலப் பொருளாகக் கொண்டு ஒரு தொழிற்சாலை தொடங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, பேராவூரணியிலே இருக்கின்ற பல்வேறு அரசு அலுவலகங்களில் பணியாற்றுகின்ற அரசு அலுவலர்களுக்கு இதுவரை



வீட்டு வசதி இல்லை. அரசின் சார்பாக வீட்டு வசதி ஏற்படுத்தித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்வதோடு, அந்தப் பகுதியிலே படித்த மாணவர்களுக்கும், இளைஞர்களுக்கும் வேலை வாய்ப்பு ஏற்படுத்துகின்ற வகையிலே பேராவூரணித் தொகுதியிலே ஒரு தொழிற்பேட்டை தொடங்க வேண்டுமென்று கேட்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி அமர்கின்றேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. துரை. சந்திரசேகரன்.

***திரு. துரை. சந்திரசேகரன்:** மாண்புமிகு பேரவை துணைத் தலைவர் அவர்களே, 2000-2001 ஆம் ஆண்டின் நிதிநிலை அறிக்கையில் விவாதத்தில் பங்கேற்கின்ற வாய்ப்பை வழங்கிய தங்களுக்கும், மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும் என் நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு முதல்வர் வழங்கிய நிதிநிலை அறிக்கையை தமிழகத்தில் அனைத்துப் பிரிவினரும் வரவேற்றுள்ளனர். பத்திரிகைகள் பாராட்டியுள்ளன. குறிப்பாக, தினமணி தலையங்கத்தில் முந்தைய ஆட்சிக் காலத்தில், தொழில் பொருளாதாரத் துறைகளில் ஏற்பட்ட மந்த நிலையையும், பின்னடைவையும் சரிக்கட்டி புதிய உயிர்ப்பைப் பாய்ச்சியதுடன் முன்னேற்றத்திற்கு முறையான பாதை வகுக்கப்பட்டுள்ளது என்று குறிப்பிட்டுள்ளதை சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இந்த மாமன்றத்தில் கடந்த 4 ஆண்டுகளாக மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினர்களின் பேச்சைக் கேட்டிருக்கிறேன். இப்போதும் கேட்டேன். சுருதியும், தாளமும் மாறியிருக்கின்றன. விவசாயிகளுக்கு இந்த பட்ஜெட்டில் ஒன்றுமே இல்லை என்றார்கள். தொலைநோக்குப் பார்வையில்லை என்றார்கள். விவசாய சங்கப் பிரதிநிதிகளை அழைத்து கருத்துக்கேட்ட முதல் முதலமைச்சர் கலைஞர் இல்லையா? புதிய வேளாண்மைக் கொள்கையை உருவாக்க, கண்காணிக்க முதல்வர் தலைமையிலே உயர்நிலைக் குழு அமைத்தது விவசாய நலனுக்காக இல்லையா? விவசாயிகள் உற்பத்தி செய்த காய்கறிகள், பழங்கள் வீணாகாமல் பாதுகாக்க குளிர்பதனக் கூடங்கள் அமைப்பது விவசாய நலனுக்காக இல்லையா? சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டம் விவசாயிகளுக்காகப் போடப்படவில்லையா? பாசன நீர் பயன்படுத்துவோர் குழுக்கள் அமைத்து பாசனத்தை இயக்க, பராமரிக்க, வழங்க சட்டம் கொண்டு வந்தது விவசாயிகளுக்காக இல்லையா? சிமென்ட் களங்கள் அமைப்பது விவசாயிகளுக்காக இல்லையா? நபார்டு நிதி நிறுவனத்தின் சார்பில் சிறுபாசன ஏரிகள்—Minor Irrigation Tanks சீர்படுத்துவது விவசாயிகளுக்காகத்தான்.

[திரு. துரை. சந்திரசேகரன்] [2000 மார்ச் 31

திருவையாறு தொகுதியிலே பூதலூர் ஒன்றியத்தில் 13 ஏரிகள் இதைப்போல உள்ளன. அதையும் சீர்படுத்தித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோல, பட்டியலில் இல்லாத ஏரிகள் — Unclassified Tanks இருக்கின்றன. அதையும் இந்தத் திட்டத்தில் சேர்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நில உரிமை பதிவேடு (Patta Pass Book) முதன்முதலாக, தமிழக விவசாயிகளுக்கு வழங்கியது கலைஞர் அரசுதான். அபராத வட்டியைத் தள்ளுபடி செய்து விவசாயிகளின் கடன் சுமையை இறக்கிய தமிழக முதல்வருக்கு தஞ்சை மாவட்டத்தினுடைய விவசாயிகளின் சார்பிலே நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். கோலப்பன் குழு பரிந்துரையை ஏற்று விவசாயத் தொழிலாளர் நல வாரியம் உருவாக்கியது விவசாயத் தொழிலாளர்கள் நலனுக்காக இல்லையா? தரிசு நில மேம்பாடுத் திட்டத்தின்கீழ் கடந்த ஆண்டு 10 மாவட்டங்களில் 25,000 ஏக்கரில் முந்திரி, வேம்பு பழச்செடிகள் பயிரிடப்பட்டுள்ளன. வரும் ஆண்டில் 75,000 ஏக்கரில் தரிசு நில மேம்பாடு செய்வது தொலைநோக்குப் பார்வையில்லையா?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஹைதராபாத்தில் விளையாமலேயே ரூ. 3 கோடி வருமானம் வரும் திராட்சைப் பயிர் இருப்பதாகக் கூறுகிறார்கள்? அது உண்மையாயின் தரிசு நிலங்களில் பயிரிட முயற்சி மேற்கொள்ளலாம். தரிசு நிலங்களை மேம்படுத்த, மண் அரிப்பைத் தடுக்க, கடலோரங்களில் காற்றுத் தடுப்பை ஏற்படுத்த, சுற்றுச் சூழலைக் காக்க, முந்திரி சாகுபடியை செய்ய உள்ள நல்ல திட்டத்தை முன்னாள் முதல்வர், கலைஞர் கட்சிக்காரர்களுக்காக கொடுக்க திட்டமிடுகிறார் என்கிறார். கிராமப்பகுதியிலே வழக்கில் உள்ள பழமொழியை இந்த இடத்தில் நினைவுபடுத்த விரும்புகிறேன். 'தான் திருடி பிறரை நம்பாள்' என்ற பழமொழிதான் நினைவுக்கு வருகிறது. மன்னர்கள் காலத்துக்குப் பின் முதன்முதலாக பாசன வடிகால் வாய்க்கால் தூர்வாரும் தூய்பணியை நம்முடைய முதல்வர் கலைஞர் அவர்கள் செய்யவில்லையா?

பிற்பகல் 1-05

முதல் ஆண்டு 10 கோடி ரூபாயும், இரண்டாவது ஆண்டு 20 கோடி ரூபாயும், சென்ற ஆண்டு 50 கோடி ரூபாயும், இந்த ஆண்டு 50 கோடி ரூபாயும் வழங்கி இன்றைய தினம் விவசாயிகளுடைய பொருளாதாரத்தில் மிகப் பெரிய மாற்றத்தை உருவாக்கிக் கொடுத்திருக்கிறார்.



2000 மார்ச் 31] [திரு. துரை. சந்திரசேகரன்]

முன்னாள் முதலமைச்சர் அறிக்கையில் காவிரிப் படுகையில் தூர் வாருவதில் முறைகேடுகளை நடத்தி ஆளும் கட்சிக்காரர்கள் சுயலாபம் அடையப் பார்க்கிறார்கள் என்று கூறியுள்ளார். இந்த அரசு திறந்த மனதுடன் இருக்கிறது. சென்ற ஆண்டு தூர் வாரும் பணியில் அதிகமாக tender மூலம் பணிகளை எடுத்தவர்கள் அண்ணா தி.மு.க.வினர்தான். நேற்றைக்கு தஞ்சாவூரில் தூர் வரும் பணிக்கான tender விடப்பட்டது. ஆளும்கட்சி சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவரும் இந்தச் சட்டமன்றத்தில் இருந்தோம். யாரும் tender-க்குப் போகவில்லை. ஆனால் அண்ணா தி.மு.க. கட்சிக்காரர்கள்தான் நேற்றைக்கும் அதிகமாக tender-ல் பங்கேற்றுள்ளனர். இதில் எந்த இடத்தில் முறைகேடு நடந்துள்ளது?

திருவையாறு தொகுதியில் பூதலூர் ஒன்றியத்தில் கடந்த ஆட்சிக்காலத்தில் வேண்டுமென்றே கிடப்பில் போடப்பட்ட bye-pass channel மாற்றுவழி வாய்க்கால் திட்டத்தை நிறைவேற்றித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

50 ஆண்டுகளில் ஏற்பட இருக்கும் நெருக்கடியை எதிர்கொள்ளவும், வெற்றி பெறவும், மழை நீர் வீணாகாமல் சேமிக்க, நிலத்தடி நீரைப் பாதுகாக்க, அதிகரிக்க நிபுணர் குழுவை அமைப்பது தொலைநோக்குப் பார்வையில்லையா?

திருவையாறு தொகுதியில் பூதலூர் ஒன்றியத்தில் 140-க்கும் மேற்பட்ட ஏரிகள் உள்ளன. ஏரிகளை ஆழப்படுத்தி, கரைகளைப் பலப்படுத்தினால், பாசன வசதியையும், நிலத்தடி நீரைப் பெறும் நிலையையும் பெறலாம். நிபுணர் குழு அதற்கான ஆய்வு மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கிராமப்புறத்திலே கூறுவார்கள். 'மங்கனூரில் மழை பெய்தால் புங்கனூரில் வெள்ளம்' என்பார்கள். புதுக்கோட்டை மாவட்டத்தில் பெய்யும் மழை தஞ்சை மாவட்டத்திற்கு வந்து வெண்ணாற்றில் கலந்து, தஞ்சை மாவட்டத்தில் வெள்ளச் சேதம் உண்டாக்கி, வீணாகக் கடலில் கலக்கிறது. சமீபத்தில் பெய்த மழையில் புங்கனூர் பாலம் வெள்ளத்தால் அடித்துச் செல்லப்பட்டது. மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சரவர்கள் உள்ளாட்சித் துறையின் மூலமாக ரூ.50 லட்சத்தில் அந்தப் பாலத்தை அமைப்பதற்கு ஆணையிட்டிருக்கிறார்கள். அந்தப் பகுதி மக்களின் சார்பாக நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**(மாண்புமிகு மாற்றுத் தலைவர், திரு. அ.லெ. சுப்பிரமணியன் தலைமை)**

நம்முடைய தமிழகத்தில் மேட்டூர் அணையைத் தவிர, நீர்த்தேக்க அணைகள் வேறு எதுவும் இல்லை. பெருமழைக் காலங்களில் புதுக்கோட்டை மாவட்டம், மேலத் தஞ்சை, திருச்சி மாவட்டத்தில் பெய்யும் மழை நீரைத் தேக்க, ஏரிகளை ஆழப்படுத்த வேண்டுகிறேன்.

கல்லணையிலிருந்து கொள்ளிடம் ஆற்றில் மழைக்காலங்களில் திறந்துவிடும் நீர் வீணாகக் கடலில் கலக்கும். அந்த நீரைத் தேக்க கல்லணையிலிருந்து அணைக்கரை பகுதிக்குள் கொள்ளிடம் ஆற்றில் நீர்த்தேக்க அணை அமைக்க நிபுணர் குழு ஆராய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பல ஆண்டுகளாகப் போராடி, ரத்தம் சிந்தி நடை பெறாத காரியத்தை மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் ஒரு துளி மையைச் சிந்தி நிறைவேற்றியுள்ளார். "இன்றைக்குத்தான் தன் சொந்த இடத்தில், வீட்டில் விவசாயத் தொழிலாளி உறங்குவான்" என்று பொதுவுடைமை இயக்கத்தின் புரட்சிப் போராளி மணலி கந்தசாமி அவர்கள் வீட்டுமனைப்பட்டா வழங்கும் நிகழ்ச்சியில் குறிப்பிட்டதை நினைவுபடுத்த விரும்புகிறேன்.

சமுதாயத்தில் எல்லா அந்தஸ்தும் இருந்தும், அரசு புறம்போக்கில் குடியிருந்தவர்களை 'புறம்போக்கு' என்று கேவலமாகப் பேசுவதை மாற்றி, 10 ஆண்டுகள் குடியிருந்தவர்களுக்கு வீட்டுமனைப்பட்டா வழங்கி, மாவட்ட ஆட்சியர், மாவட்ட வருவாய் அலுவலர் குழு மூலம் பட்டா வழங்கி சமூக அந்தஸ்தை அளித்தவர் நம்முடைய முதல்வர் கலைஞர் அவர்கள். பட்டா வழங்கும் குழுவில் அந்தத் தொகுதியின் சட்டமன்ற உறுப்பினரும் இடம்பெற மாண்புமிகு முதல்வர் அவர்கள் பரிசீலிக்க வேண்டுகிறேன்.

நலத் திட்டங்களை முனைப்பாகச் செயல்படுத்த பழங்குடியினருக்கு ஒரு தனி இயக்ககம் உருவாக்கியதை வரவேற்கிறேன்.

பூகோளக் குறியீடு சட்டத்தில் தஞ்சாவூர் தட்டு, சுவாமிமலை வெண்கலச் சிலை, நாச்சியார் கோயில் விளக்கு என்று வணிகச் சின்னம் காண வழிவகை செய்த மாண்புமிகு முதலமைச்சருக்கு தஞ்சை மாவட்ட கைவினைஞர்கள் சார்பாக நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.



திரும்பிய பக்கமெல்லாம் கிராமங்களில் குடிநீர்த் தொட்டிகள் அமைக்கப்பட்டுள்ளது. கிராமத்தின் 'land mark'காக உள்ளது. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் குடிநீர்த் திட்டங்கள் சிறப்பாகச் செயல்பட எதிர்காலத்தில் குடிநீர்த் தொட்டிகளை இயக்குகின்ற பணிகளையும், பராமரிக்கின்ற பணிகளையும் அந்தத் துறையே மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

முன்னாள் முதல்வர் இதைக் கண்துடைப்பு பட்ஜெட் என்றார். ஆம், இது கண்ணீரைத் துடைக்கும் பட்ஜெட்தான். விவசாயிகள், தொழிலாளர்கள், நெசவாளர்கள், ஆட்டோ தொழிலாளர்கள், தையல் கலைஞர்கள், வாகன ஓட்டுநர்களின் கண்ணீரைத் துடைக்கும் பட்ஜெட்தான் நம்முடைய முதல்வர் தந்த பட்ஜெட். இங்கே பேசிய எதிர்க்கட்சி உறுப்பினர் 'இடிந்த கட்டடத்திற்கு வர்ணப் பூச்சு' என்று குறிப்பிட்டார். ஊழல் சாம்ராஜ்யம் இடிந்து நொறுங்கிக் கொண்டிருக்கும்போது வர்ணம் பூசுவது யார், முட்டுக் கொடுப்பது யார் என்று நாட்டுக்கு நன்கு தெரியும். எல்லா சிறப்பு அம்சங்களையும் கொண்ட நல்ல நிதிநிலை அறிக்கையைத் தந்ததற்காக தொகுதி மக்களின் சார்பாக வரவேற்று, அமைகின்றேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. அ.லெ. சுப்பிரமணியன்):** மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. கோவிந்தன்.

**திரு. ப. கோவிந்தன்:** மாண்புமிகு மாற்றுத தலைவர் அவர்களே, 2000-2001 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையின் பொது விவாதத்திலே பேச வாய்ப்பை உருவாக்கித் தந்த, பாட்டாளி மக்கள் கட்சியினுடைய நிறுவனர் டாக்டர் ஐயா அவர்களை வணங்கி என்னுடைய உரையைத் தொடங்குகின்றேன்.

இந்தியா சுதந்திரம் அடைந்து 52 ஆண்டு காலம் ஆகிறது. 48 ஆண்டுகளுக்குமுன் கிராமப்புறத்தில் வாழ்கின்ற மக்கள் குடிநீர் வேண்டுமென்று மனு கொடுத்து, பல ஆண்டு காலம் காத்திருந்தனர். அந்த மக்களுக்கு நம்முடைய தமிழகத்தினுடைய முதல்வர் 1996-லே முதல்வராகப் பொறுப்பேற்றவுடன் அனைத்து கிராமப்புற மக்களுக்கும் வருகின்ற ஐந்து ஆண்டுகளிலே பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்படும் என்று கூறினார். அதன்படி இந்த நான்கு ஆண்டு காலத்தில் இந்த அமைச்சரவையிலே பொறுப்பேற்றிருக்கின்ற மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சரவர்கள், தமிழகத்தினுடைய முதல்வர் அவர்கள் இட்ட கட்டளையை நிறைவேற்றும் வகையிலே தமிழகத்திலே பாதுகாக்கப்பட்ட

குடிநீர் அனைத்து கிராமப்புற மக்களுக்கும் வழங்குகிற சாதனையைப் படைத்திருக்கின்றார் என்பதை பெருமகிழ்ச்சியோடு பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாக கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 1-10

குடிநீர்ப் பிரச்சினை தீர்க்கப்பட்டிருக்கிறது. அதுமட்டுமா? பள்ளிக் கட்டடங்கள் கட்டப்பட்டிருக்கின்றன அதுமட்டுமா? கிராமப்புறத்தினுடைய மேம்பாட்டிற்கு அண்ணா மறுமலர்ச்சி என்ற ஒரு திட்டத்தை உருவாக்கி அந்த கிராமப்புறத்தினுடைய மேம்பாட்டை முழுமையாகச் செயல்படுத்தி இருக்கின்றார்.

**(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)**

அதுமட்டுமா? நமக்கு நாமே திட்டம் என்ற அந்தத் திட்டத்தை உருவாக்கி அதன்மூலம் ஒரு பெரிய சாதனை படைத்திருக்கின்றார். சமத்துவம் வேண்டும் என்று அனைத்துத் தரப்பு மக்களுக்கும் சமத்துவபுரத்தை ஏற்படுத்தி சமத்துவத்தை உண்டாக்கியிருக்கின்றார் நம்முடைய தமிழகத்தினுடைய முதல்வர் அவர்கள். உழவருடைய நலனைக் கருத்திலே கொண்டு உழவர் சந்தை ஏற்படுத்தி உழவர் பயிரிடுகின்ற விளைபொருள்களை உழவர் சந்தையிலே கொண்டு வந்து நல்லதொரு விலைக்கு விற்று உழவர் முன்னேற்றத்தில் சாதனை படைத்து இருக்கின்றார். நம்முடைய முதல்வர் அவர்கள் சரித்திரம் படைத்திருக்கின்றார். அதுமட்டுமல்ல. நவீனமான இந்த உலகிலே நவீனத்தை ஏற்படுத்த வேண்டும் என்று நவீனக் கழிப்பிடத்தை தமிழக முதல்வர் அவர்கள் ஏற்படுத்தியிருக்கின்றார். கிராமப்புறத்திலே 2001-க்குள் அனைத்துப் பகுதி மக்களுக்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் முழுமையாகத் தரப்படும் என்று சொன்னார்.

என்னுடைய தாரமங்கலம் தொகுதியிலே இப்போது முழுமையாக சாதனை படைத்து சாதனை நாயகனாக நம்முடைய தமிழகத்தினுடைய முதல்வர் அவர்கள் வெற்றி கண்டிருக்கிறார். அந்த வெற்றிக்கு உறுதுணையாக இருந்து பாடுபட்டு தண்ணீர் தந்த நாயகனாக விளங்குகின்ற உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய தாரமங்கலம் தொகுதியின் சார்பாக நான் உளமாற மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். முதலமைச்சர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இப்படி பல எண்ணற்ற சாதனைகளை படைத்த நம்முடைய தமிழக முதல்வர் அவர்களைப் பார்த்து, இங்கே எனக்கு



முன்னாலே பேசிய மாண்புமிகு உறுப்பினர் காந்தி அவர்கள், ஒரு வாய்க்காலிலே திருப்பிவிடப்பட்டிருக்கிறது கோடிக்கணக்கான திட்டங்கள் என்று சொன்னபோது, மாண்புமிகு உறுப்பினர் தாமரைக்கணி அவர்கள் சொன்னார்கள். 'நாங்களும் கோபாலபுரத்திற்கு திருப்பிவிடப்பட்டிருக்கிறது என்று சொல்வோம்' என்று சொன்னார். நீங்கள் சொல்லுங்கள். வேண்டாம் என்று சொல்வதற்கு யாருக்கும் தடையில்லை. ஆனால் அதை இந்த நாட்டு மக்கள் ஏற்றுக்கொள்வார்களா என்பதைச் சிந்திக்க வேண்டும். நம்முடைய தமிழகத்தில் 4 ஆண்டு காலமாக சாதனை படைத்திருக்கின்ற நம்முடைய தமிழக முதல்வர் அவர்களை நீங்கள் குறை கூறுவதை நிச்சயமாக தமிழக மக்கள் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள் என்பதை இந்தத் தமிழகம் நிரூபித்துக் காட்டப்போகிறது என்று நான் மனமார உளமார தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) வருகின்ற தேர்தல் முடிந்து நிதிநிலை அறிக்கையை வாசிப்பார்கள் என்று சொன்னார்கள். நான் நம்முடைய தமிழக முதல்வர் அவர்களை பல ஆண்டு காலம் இன்னும் நீடூழி வாழ்ந்து பல நிதிநிலை அறிக்கைகளை நீங்கள் வாசிக்க வேண்டும் என்று பாட்டாளி மக்கள் கட்சியினுடைய சார்பாகவும், டாக்டர் ஐயா அவர்கள் சார்பாகவும் உளமார வாழ்த்துகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதல்வர் அவர்களைப் பாராட்டுவதிலே எனக்கும் உடன்பாடுதான். நானும் அதிகமாகப் பாராட்டுபவன். ஆனால் பாட்டாளி மக்கள் கட்சியினுடைய தலைவர் டாக்டர் ராமதாஸ் அவர்கள் 2006 ஆம் ஆண்டிலே பாட்டாளி மக்கள் கட்சி ஆட்சிக்கு வரும் என்று சொல்லியிருக்கிறாரே, இவர் கலைஞர் நீண்டகாலம் பல பட்ஜெட்டுகளைப் போட வேண்டும் என்று சொல்கிறாரே, முரண்பட்ட கருத்தைச் சொல்கிறாரே, விளக்குவாரா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதிலே எந்த முரண்பாடும் இல்லை.

பிற்பகல் 1-15

**திரு. ப. கோவிந்தன்:** தலைவர் அவர்களே, எங்களுடைய பாட்டாளி மக்கள் கட்சியினுடைய நிறுவனர் டாக்டர் ஐயா அவர்களுடைய கொள்கையே, நல்லவரை வாழ்த்துங்கள், உளமார வாழ்த்துங்கள், கெடுதல் நடக்கிறது என்று சொன்னால் தட்டிக் கேளுங்கள் என்பதுதான். நல்லவரை, நல்லது செய்கின்றவரை வாழ்த்துவதுதான் எங்களுடைய

பாட்டாளி மக்கள் கட்சியினுடைய கொள்கை என்பதை உங்களுக்கு நினைவூட்டுகின்றோம்.

அந்த வகையில் ஒரு கிராமத்திற்கு நிதிநிலை என்று சொன்னால் 2 கோடி அளவிலேதான் திட்டங்கள் 4 ஆண்டு காலமாக நடைபெற்றிருக்கும். ஆனால் இந்த 4 ஆண்டு காலத்திலே, என்னுடைய தொகுதியை எடுத்துக்கொண்டால், 4 கோடி ரூபாய்க்கு மேலே திட்டங்கள், அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் செய்யப்படாத கிராமத்திற்குக்கூட 2 கோடிக்கு மேலே திட்டங்களைக் கொடுத்திருக்கிறார்கள். இன்றைக்கு, கிராமப்புற மக்கள் அத்தனைபேரும் போற்றுகின்றவகையிலே செயல்பட்டுக் கொண்டிருக்கின்ற நல்ல ஆட்சியை நான் உளமாரப் பாராட்டுகின்றேன்.

இன்னும் சில கிராமப்புறங்களிலே ஒரு சில குறைபாடுகள் இருக்கின்றன. நம்முடைய தமிழக முதல்வர் அவர்கள் அந்தக் குறைபாடுகளையும் நீக்கிவிட்டார்கள் என்று சொன்னால் நிச்சயமாக அதனைச் சாதனை என்றுதான் சொல்ல வேண்டும். இன்னும் கிராமப்புறங்களிலே கிராமப்புறச் சாலைகளை நீங்கள் கவனத்தில்கொண்டு அவற்றை மேம்பாடு செய்ய வேண்டுமாய் உங்களை மெத்தப் பணிவன்போடு கேட்டுக்கொள்கின்றேன்.

நம்முடைய மின்சாரத் துறை அமைச்சர் அவர்களுக்கு ஒரு வேண்டுகோள். மல்லிக்குண்டத்திலே 110 கே.வி. துணை மின் நிலையம் என்னுடைய தொகுதியிலே நிறுவுவதற்கு இடங்கள் ஆய்வு செய்யப்பட்டன, அதேபோல் தாரமங்கலத்திலேயும் இடங்கள் ஆய்வு செய்யப்பட்டு அவை தொடங்கும் நிலையில் இருக்கின்றன. அவற்றை இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையிலேயே சேர்த்து வழங்கிட வேண்டுமாய் உங்களை மெத்தப் பணிவன்போடு கேட்டுக்கொள்கின்றேன்.

நமது உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்கு ஒரு வேண்டுகோள். என்னுடைய தொகுதியிலே காவிரி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை புளோர்ரைடுக்கு மாற்றும் குடிநீர்த் திட்டமான காடையாம்பேட்டைத் திட்டமும் அடுத்தாற்போல் இருப்பாலைக் கூட்டுக் குடிநீர்த் திட்டமும் ஆகிய இரண்டு திட்டங்களும் செயல்படுத்துவதற்குரிய ஆயத்த நிலையிலே இருக்கின்றன. இந்த இரண்டு திட்டங்களையும் வழங்கி, நீங்கள் தண்ணீர் தந்த நாயகனாக விளங்கி சரித்திரம் படைக்க வேண்டுமாய் உங்களை அன்போடு கேட்டுக்கொள்கின்றேன்.

குட்டம்பட்டியிலே நடந்த அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் முழுமையாகச் செயல்பட, அங்கு குடிநீர் வழங்கப்படாமல் இருக்கிறது.



அதனை தங்களுடைய கவனத்திற்கு ஏற்கெனவே கொண்டு வந்திருக்கின்றோம். அதில் சில குறைபாடுகள் இருக்கின்றன. அந்தக் குறைபாடுகளை நீங்கள் நிவர்த்தி செய்து அந்தத் திட்டத்தை முழுமையாக செயல்படுத்திட வேண்டுமாய் உங்களை அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

அனைத்துப் பேரூராட்சிகளுக்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீர், காவிரி குடிநீர் இல்லாமல் ஆழ்துளைக் கிணறு மூலமாகக் குடிநீர் வழங்குகின்ற திட்டத்தை இப்போது கொண்டு வந்திருக்கின்றீர்கள். என்னுடைய மேச்சேரி பேரூராட்சியிலே ஆழ்துளைக் கிணறுகள் மூலம் 5 இடங்களுக்குக் குடிநீர் தந்துவிட்டீர்கள் என்று சொன்னால் என்னுடைய தாரமங்கலம் தொகுதியே பாதுகாக்கப்பட்ட குடிநீர்த் திட்டத்தில் தன்னிறைவு அடைந்துவிடும். அந்த 5 இடங்களுக்கும் நீங்கள் பேரூராட்சியிலே ஆழ்துளைக் கிணறு மூலம் குடிநீர் வழங்க ஆவன செய்ய வேண்டுமாய் அன்போடு கேட்டுக்கொள்கின்றேன். (மணியடிக்கப்பெற்றது)

தாரமங்கலத்திலுள்ள ஆரம்ப சுகாதார நிலையத்திலும், மேச்சேரிப் பேரூராட்சியிலே உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்திலும் இன்னும் கூடுதல் படுக்கை வசதி செய்து கொடுக்குமாறு உங்களை அன்புடன கேட்டுக்கொள்கின்றேன். அவை அரசு மருத்துவமனைகளாக்கப்பட வேண்டுமென்றும் அன்போடு கேட்டுக்கொள்கின்றேன்.

என்னுடைய தாரமங்கலம் தொகுதியிலே இன்னும் 4,5 இடங்களிலே ஓராசிரியர் பள்ளிகள் இயங்கிக் கொண்டிருக்கின்றன. அந்த ஓராசிரியர் பள்ளிகளுக்கு இரண்டு ஆசிரியர்கள் நியமனம் செய்ய வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கையிலே எனக்குப் பேச வாய்ப்பளித்தமைக்கு பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாக உங்களுக்கு நன்றி கூறி, நம்முடைய தமிழக முதல்வர் அவர்களை வணங்கி வாழ்த்தி, இன்னும் பல நல்ல திட்டங்களை நீங்கள் அறிவித்து, பல நிதிநிலை அறிக்கைகளை நீங்கள் வாசிக்க வேண்டுமாய் உங்களை வணங்கி விடைபெறுகிறேன், நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ந. கருப்பண்ண உடையார்.

***திரு. ந. கருப்பண்ண உடையார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2000-2001 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையிலே பேசுவதற்கு வாய்ப்பளித்த தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியின் சார்பிலே தங்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

[திரு. ந. கருப்பண்ண உடையார்] [2000 மார்ச் 31

தமிழகத்திலே ஒன்றுபட்ட தஞ்சை மாவட்டத்திலே வறட்சி, வெள்ளம், மழை காரணமாக 3 ஆண்டுகளாக விவசாயிகள் பாதிக்கப்பட்டு அவர்களுடைய கடனை முழுவதுமாகக் கட்டமுடியாத ஒரு நிலையிலே இருக்கின்றார்கள். மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய இந்த நிதிநிலை அறிக்கையை விவசாயிகள் ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள். ஆனால், மாண்புமிகு முதல்வர் அவர்கள் தண்ட வட்டியை மட்டும் தள்ளுபடி செய்திருக்கின்றார்கள். அது விவசாயிகளுக்கு வருத்தத்தை அளிக்கிறது என்பதையும் நான் மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். மேலும்,

*'உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லாம்
தொழுதுண்டு பின்செல் பவர்'*

என்ற வள்ளுவருடைய வாய்மொழிக்கேற்ப, இப்பொழுது விவசாயிகளெல்லாம் மற்றவர்களை நாடிச் செல்கின்ற ஒரு நிலையும், அரசில் இருக்கின்றவர்கள் என்ன செய்யப் போகிறார்கள் என்று எதிர்பார்க்கும் ஒரு நிலையும் இப்போது விவசாயிகளிடத்திலே ஏற்பட்டிருக்கின்றது. குறிப்பாக, தஞ்சை மாவட்டத்திலே இருக்கின்ற விவசாயிகள், கடனிலே பிறந்து, கடனிலே வாழ்ந்து, கடனிலேயே இறக்க வேண்டிய ஒரு சூழ்நிலை இருக்கிறது என்பதை நான் மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

பிற்பகல் 1-20

மாண்புமிகு முதல்வர் அவர்கள் இந்த விவசாயிகளுக்கு முழுமையாகக் கடனைத் தள்ளுபடி செய்ய வேண்டும் அல்லது வட்டியையும், தண்ட வட்டியையுமாவது தயவுசெய்து தள்ளுபடி செய்து கொடுக்க வேண்டும் என்று விவசாயிகள் சார்பாக நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன். தமிழகத்திலே ஒவ்வோர் ஆண்டும் போக்குவரத்துத் துறை, மின்சாரத் துறை, தொழில் துறை போன்றவற்றிற்கு எல்லாம் நாம் நஷ்டஈடாக நிதியைக் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். அதைப்போலவே தமிழகத்திலே அதிகபட்சமாக இருக்கின்ற 75 சதவிகித விவசாய மக்களுக்கு பயன்படக்கூடிய வகையிலே அவர்களுக்கு அந்த நஷ்டத்தை ஈடுசெய்வதற்கு நமது மாண்புமிகு முதல்வர் அவர்கள் முன்வர வேண்டும் என்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து தமிழகத்திலே பயிர் insurance திட்டத்தை முழுமையாக, கட்டாயமாகக் கொண்டு வரவேண்டும் என்று நான் அன்போடு



2000 மார்ச் 31] [திரு. ந. கருப்பண்ண உடையார்]

கேட்டுக்கொள்கிறேன். கூட்டுறவுத் துறையின் மூலம் விவசாயிகளுக்கு 12 சதவிகிதத்திலே நாம் கடன்களை வழங்குகிறோம். அதே கூட்டுறவுத் துறையிலே, அதே விவசாயி நகைகளை அடகு வைக்கும்போது 17 சதவிகித வட்டியை வாங்குகிறார்கள். அதே விவசாயிகள் தேசியமயமாக்கப்பட்ட வங்கியிலே நகைகளை அடகு வைக்கும்போது 12 சதவிகித வட்டியை வாங்குகிறார்கள். எனவே, தேசியமயமாக்கப்பட்ட வங்கியிலே எந்த அளவுக்கு, அதாவது 12 சதவிகிதத்திற்குக் கடன் கொடுக்கிறார்களோ அதைப்போலவே அந்த விவசாயிகளுக்குக் கூட்டுறவுத் துறையின் மூலம் 12 சதவிகித வட்டியிலேயே கடன்களை வழங்குமாறு அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

தமிழக அரசின்கீழ் தஞ்சை மாவட்டத்திலே விவசாயப் பண்ணைகள் இருக்கின்றன. அதிலே ஒரு குவிண்டாலுக்கு என்ன விவசாயச் செலவு ஆகிறது என்பது அரசுக்கு நன்றாகவே தெரியும். அதே செலவுதான் விவசாயிகளுக்கும் ஏற்படும் என்பதைக் கருத்தில் கொண்டு நமது ஒன்றுபட்ட தஞ்சை மாவட்டத்திலே கொள்முதல் செய்த நெல்லுக்கு தற்போது குவிண்டாலுக்கு 50 ரூபாய் ஊக்கத் தொகை கொடுத்து வருகிறார்கள். அதை 100 ரூபாயாகக் கொடுக்க வேண்டும் என்று மாண்புமிகு முதல்வர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மத்திய அரசினுடைய தற்போதைய கொள்கைப்படி தமிழகத்திலே உற்பத்தி அதிகமாக இருந்தும் அவர்கள் வெளிமாநிலத்திலே, வெளிநாடுகளிலே இருந்து கொள்முதல் செய்து, தமிழக விவசாயிகளை நசுக்க நினைக்கின்ற காரியத்திற்கு நமது மாண்புமிகு முதல்வர் அவர்கள் சரியான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ்நாடு மின்சார வாரியம் தமிழக விவசாயிகள் விவசாயத்திற்கு வாங்குகின்ற மின் இணைப்புகளுக்கு seniority அடிப்படையில் 300 ரூபாய் பணம் கட்டினால் அதே seniority அடிப்படையில் மின் இணைப்பு கொடுக்கப்படுகிறது. கும்பகோணத்தில் கிராமியக் கூட்டுறவு மின்சார வாரியம் ஒன்று இயங்கி வருகிறது. அந்த மின்சார வாரியத்திலே 5300 ரூபாய் கட்டினால்தான் இணைப்பு கொடுக்கப்படுகிறது. அதிலே 5000 ரூபாய் கட்டுவதற்கு - நமது அரசு தனியாக நமக்கு இலவச மின் இணைப்பு கொடுக்கின்ற ஒரு கால கட்டத்திலே 5000 ரூபாய் கட்டுவதற்கு முடியாமல் அவர்கள் கஷ்ட நிலையில் இருக்கிறார்கள் என்பதைத் தங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வந்து, தமிழ்நாடு மின்சார வாரியத்திலேயே அந்தப் பணியை ஒப்படைக்குமாறு நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

எங்கள் தொகுதியில் திருமண்டங்குடியில் ஒரு சர்க்கரை ஆலை இருக்கிறது. அந்தச் சர்க்கரை ஆலை 1998-99 ஆம் ஆண்டிலே 6 கோடியே 70 இலட்சம் ரூபாய் விவசாயிகளுக்கு பாக்கி கொடுக்க வேண்டியிருக்கிறது. அதைக்கேட்டால் அவர்கள் என்ன சொல்கிறார்கள் என்றால் எங்களுக்கு 3 ஆண்டு காலமாக அரசாங்கத்திலே டன் ஒன்றுக்கு 65 ரூபாய் கட்டச் சொல்லியிருக்கிறார்கள். நாங்கள் அந்தக் கட்டணத்தை எதிர்த்து வழக்குக்குச் சென்றிருக்கிறோம். அதனால் அந்தத் தொகையை இப்போது கொடுக்க முடியாது என்று சொல்கிறார்கள். நமது முதல்வர் அவர்கள் உடனடியாக அந்தத் தொகை விவசாயிகளுக்குக் கிடைப்பதற்கு ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போலவே 8.5 சதவிகிதம் சர்க்கரைச் சத்துள்ள கரும்பிற்கு 740 ரூபாய் என்று அரசு அறிவித்துள்ளது. ஆனால் திருமண்டங்குடி சர்க்கரை ஆலையைப் பொறுத்தவரையில் 675 ரூபாய்தான் இப்போது கொடுக்கிறார்கள். மீதிப்பணம் எப்போது கொடுப்பீர்கள் என்றால் கொடுப்போம் என்றுதான் சொல்கிறார்களே தவிர, அவர்கள் இன்ன தேதி என்று சொல்லவில்லை. அதற்கு அரசு நடவடிக்கை எடுத்து அவர்களுக்கு அந்தப் பணத்தை உடனடியாக வழங்குவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-25

கேரளாவிற்கு அடுத்தபடியாக தமிழகத்தில்தான் தேங்காயினுடைய உற்பத்தி அதிகமாக இருக்கிறது. தேங்காயினுடைய விலை ரொம்பக் குறைவாக இருக்கின்ற காரணத்தாலே, நெல், கரும்பு, பருத்தி போன்ற பொருட்களுக்கெல்லாம் அரசு எப்படி ஒரு விலையை நிர்ணயம் செய்திருக்கின்றதோ அதைப் போலவே தேங்காய்க்கும் ஒரு விலையை நிர்ணயம் செய்து, அதற்கு அனுமதியை அளிக்க வேண்டும் என்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

தமிழகத்திலே 19 கூட்டுறவு மற்றும் பொதுத் துறை சர்க்கரை ஆலைகள் இருக்கின்றன. அதிலே, சர்க்கரை ஆலை மேற்பார்வையாளர்கள் மற்றும் அலுவலர்கள் நான்காவது ஊதியக் குழுவின் பரிந்துரையின்படி அரசு ஊழியர்களுக்கு இணையான ஊதியம் பெற்றுவந்தார்கள். அனைத்துத் துறைகளிலும் மற்றும் சர்க்கரைத் துறைத் தலைமை அலுவலகத்திலும் ஐந்தாவது ஊதியக் குழுவின் பரிந்துரை அமல்செய்யப்பட்டு இருந்தது.



ஆனால், இடையில் உள்ள சுமார் 1,000 நபர்களுக்கு அந்த ஊதியம் கிடைக்கவில்லை. அவர்களுக்கும் கிடைக்க ஆவன செய்ய வேண்டுமாறு அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து தொகுதிப் பிரச்சினை. கும்பகோணத்திலேயிருந்து திருவையாறு வரை உள்ள சாலை அரசுச் சாலையாக எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கின்றது. அந்த அரசுச் சாலையிலே கும்பகோணம் முதல் சுவாமிமலை வரைக்கும் இருவழிப் பாதையாக செய்து கொடுக்கப்பட்டிருக்கின்றது. அதற்காக நான் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் சுவாமிமலையிலிருந்து திருவையாறு வரை செல்கின்ற சாலையை உடனடியாக இருவழிச் சாலையாக அகலப்படுத்திக்கொடுக்க வேண்டும் என்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

பாபநாசம் சட்டமன்றத் தொகுதியிலே கீழமாஞ்சேரி, திரும்பூர்விளையை இணைக்கின்றது மண்ணியாற்றுப்பாலம். 1996 ஆம் ஆண்டிலிருந்து அதுபற்றி மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களிடத்திலே பல கடிதங்கள் கொடுக்கப்பட்டு, அதன்மூலம் தஞ்சை கோட்டப் பொறியாளர் அவர்களால் மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டு 65 இலட்சம் ரூபாய்க்கு அனுமதி கோரி அரசுக்கு அனுப்பப்பட்டு கிட்டத்தட்ட ஓர் ஆண்டு காலத்திற்கு மேலே ஆகியிருக்கின்றது. நான் மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களிடத்திலே கேட்கும்போது செய்து கொடுத்துவிடுகிறோம் என்று அன்போடு சொல்லிக் கொண்டிருந்தார்கள். மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள் அந்த வேலையை உடனடியாகச் செய்து கொடுக்குமாறு அன்போடு கேட்டுக்கொள்கின்றேன்.

பாபநாசம் தொகுதியுடன் ஜெயங்கொண்டம் தொகுதியை இணைப்பதற்கு கொள்ளிடத்திலே ஒரு பாலம் வேண்டும் என்று 1996 ஆம் ஆண்டிலே பாபநாசம், திருவிடைமருதூர், குத்தாலம் மற்றும் ஜெயங்கொண்டம் ஆகிய தொகுதிகளுடைய மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லாம் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்களுக்கும் கடிதம் கொடுத்தோம். அவர்கள் பிறகு அதைப் பார்ப்போம் என்று சொன்னார்கள். கேள்வி நேரத்தின்போதுகூட இப்போது மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சராக இருக்கின்ற, அப்போது நெடுஞ்சாலைத் துறையையும் கவனித்துவந்த மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அடுத்த ஆண்டு அதுபற்றி

[திரு. ந. கருப்பண்ண உடையார்] [2000 மார்ச் 31

பரிசீலிப்போம் என்று சொன்னார்கள். ஆனால், அவர்கள் அப்படிச் சொல்லியும், இரண்டு ஆண்டு காலமாக அதனுடைய வேலை தொடங்கப்படவில்லை. அதனுடைய வேலையைத் தொடங்குவதற்கு இதனை நான் மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகின்றேன். அந்தப் பாலம் அமைந்தால் நிச்சயமாக சென்னைக்குச் செல்பவர்களுக்கு 30 கிலோமீட்டர் தூரம் குறையும். அதோடு, அணைக்கரைப்பாலம் பழுதுபட்டிருக்கின்ற ஒரு நிலை இருப்பதாலும், அந்தப் பாலத்தைச் செப்பனிட உடனடியாக நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களும், மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்களும் ஆவன செய்ய வேண்டும் என்று அவர்களை அன்போடு கேட்டுக்கொள்கின்றேன்.

நமது தமிழகத்திலே மண்ணெண்ணெய் விலை அதிகமாகி, ஒரு லிட்டர் இரண்டு ரூபாய்க்கு விற்ற மண்ணெண்ணெய் 6 ரூபாய் அளவிற்கு உயர்ந்திருக்கின்றது. அதை மத்திய அரசு ஏற்றியிருந்தாலும், நமது தமிழக அரசு எப்படி ஏழை மக்கள் உபயோகப்படுத்துகின்ற அரிசியை நியாயமான விலையிலே விற்க வேண்டும் என்ற எண்ணத்தின் அடிப்படையிலே மானியத்தைக் கொடுத்து மக்களைக் காப்பாற்றுகின்றதோ, அதுபோலவே தமிழக அரசு இதற்கும் மானியத்தைக் கொடுத்து, ஏழை எளிய மக்கள் உபயோகப்படுத்துகின்ற மண்ணெண்ணெய் முன்பிருந்த விலைக்கே இப்போதும் விற்பதற்கும், அதனால் ஏற்படுகின்ற நஷ்டத்தை அரசு ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றும் உங்களை அன்போடு கேட்டுக்கொள்கின்றேன். (மணியடிக்கப்பெற்றது).

பிற்பகல் 1-30

இன்னும் ஒரு நிமிடத்தில் முடித்து விடுகிறேன். இந்தியாவில் சமையலுக்கு உபயோகப்படுத்துகின்ற gas சிலிண்டர்கள் விலை அதிகரித்து தமிழகத்தில் gas சிலிண்டர் விலை 160 ரூபாயிலிருந்து ரூ.202 ஆக சுமார் 42 ரூபாய், 50 ரூபாய் என்று ஏற்றியிருக்கிறார்கள். அதனால் உபயோகப்படுத்துகிற அனைவருக்கும் ரொம்ப கஷ்டமான நிலை. மத்திய அரசினுடைய தோழமைக் கட்சியாக நமது திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி இருக்கிறது. அதனாலே மத்திய அரசிடம் சொல்லி, அந்த விலையைக் குறைத்து, ஏழை மக்கள் நடுத்தர மக்கள் எல்லாம் உபயோகப்படுத்துகின்ற சமையல் எரிவாயு சிலிண்டர் விலையைக் குறைப்பதற்கு நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்



2000 மார்ச் 31] [திரு. ந. கருப்பண்ண உடையார்]

நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொண்டு வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெற்றுக் கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் திங்கட்கிழமை (3-4-2000) காலை 9-30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1-31 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

## 7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### அ. சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

125. தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் ஆண்டறிக்கை. (1998-99) (இந்திய அரசமைப்புச் சட்டத்தின் 323 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது) (தமிழ், ஆங்கிலம்)

126. தமிழ்நாடு தோல் தொழில் வளர்ச்சி நிறுவனத்தின் பதினாறாவது ஆண்டறிக்கை. (1998-99) [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

### ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

– ஏதுமில்லை. –